சட்டம் ஒரு இருட்டறை...
அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு..
ஆனால் அது ஏழைக்கு எட்டாத விளக்கு!

பல உயர்ந்த தத்துவங்கள் நிறைந்த
உன்னத சமூகப் படம்....

ஜூபிடரின்

வேலைக்காரி



திவ்யமான நடிப்புக் கலையில்
திறமை மிகுந்து விளங்கும்
கே.ஆர். ராமஸ்வாமி
டி.எஸ். பாலையா நடித்தது

இப்பொழுது
தமிழ்நாடெங்கும்
நடைபெறுகிறது

ஏன் இப்பேர்பட்ட தோற்றத்தை அளிக்கிறீர்கள்



வாரம் 6 அணாவிற்கு

அனேகம் பேர் வாரத்திற்கு மும்முறைதான் நாவிதனிடம் போக முடியும். இதற்கே 6 அணா செலவாகும். அப்படியும் அவர்கள் ஏழுநாட்களில் நான்கு நாட்கள் க்ஷவரம் செய்துகொள்ளாததும் அசுத்தமானதுமான இடது பக்கத்திலிருக்கும் மனிதனைப்போல் காட்சியளிக்கிறார்கள்.


நீங்கள் எப்பொழுது இம்மாதிரி தோற்றமளிப்பீர்கள், பணத்தை மிச்சப்படுத்துவீர்கள்

தினசரி 7 ஒ'க்ளாக் பிளேடுகளைக் க்ஷவரம் செய்துகொள்ளும் சமர்த்து மனிதர் மற்றவர் மூன்று க்ஷவரங்களுக்கு செலவுசெய்யும் பணத்திலேயே அதிக க்ஷவரங்களைப் பெறுகிறார். இந்த பிளேடுகள் கொண்ட ஒரு ஆறு அணா பாக்கெட் பலவாரங்களுக்கு வரும்.



7 ஒ'க்ளாக் பிளேடுகள் மும்முறை சரியா நீட்டப்பெற்றவை, உயர்ந்த எஃகினால் செய்யப்பட்டவை. வேறு எந்த பிளேடும் அதிக நாட்கள் வருவதில்லை. சிறுகுவான க்ஷவரத்தை அளிப்பதுமில்லை.

7 ஒ'க்ளாக் பிளேடுகளால் தினசரி க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்.



குறைந்த செலவில் அதிக க்ஷவரங்களை அளிக்கும் பிளேடுகள்.

5 கொண்ட பாக்கெட் 1க்கு அணா 6

வருகிறது!



பக்ஷிராஜாவின்

பவளக்கொடி

மஹாலிங்கம்...ராஜகுமாரி...வரதன்...ஸரோஜினி
கிருஷ்ணன்...மதுரம்...லலிதா...பத்மினி நடித்தது..

Directed by SRIRAMULU NAIDU
NARAYANAN Co *Release..*

கல்கி
பொருளடக்கம்

மலர் 8 இதழ் 33	மார்ச் 13	சர்வதாரி ஞ மாசி 30

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



தி கிராமபோன் கம்பெனி, லிமிடெட்
கல்கத்தா - பம்பாய் - மதராஸ் - டில்லி

கல்கி

மலர் . 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 39

என்ன சேதி?

சென்னையில் சேருக!

திருவாங்கூர் சமஸ்தானமும் கொச்சி சமஸ்தானமும் ஒன்று சேர்ந்து கேரள சமஸ்தான யூனியனாக இருப்பதா? திருவாங்கூரும் கொச்சியும் சென்னை மாகாணத்தில் ஐக்கியம் அடைவதா? அல்லது அந்த இரண்டு சமஸ்தானங்களும் மலையாளப் பிரதேசமும் சேர்ந்து ஐக்கிய கேரள மாகாணமாகத் திகழ்வதா? இந்தக் கேள்விகளுக்குப் பதில் என்ன என்பது வெகு சீக்கிரத்தில் நிச்சயமாகத் தெரிந்து விடும். இந்திய சர்க்கார் சமஸ்தான நிர்வாக மந்திரியின் ஆலோசகரான ஸ்ரீ வி.பி. மேனன் இப்போது கேரளப் பிரதேசத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

பாஷா வாரியாக மாகாணங்களைப் பிரிக்கும் காலம் வரும்போது ஐக்கிய கேரள மாகாணம் ஏற்படுவதற்கு எவ்விதத் தடையும் இருக்கப் போவதில்லை. ஆனால், உடனே ஐக்கிய கேரள மாகாணம் ஏற்படுவது கஷ்டமான காரியம். ஏனெனில், அவ்வாறு ஏற்படுவதாயின் முதலில் திருவாங்கூரும் கொச்சியும் சேர வேண்டும். பிறகு மலையாளப் பிரதேசங்களை அவற்றுடன் சேர்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, திருவாங்கூரும் கொச்சியும் சேர்ந்து கேரள சமஸ்தான யூனியனாக இருப்பதிலும், தகராறு ஏற்படுவதற்கு இடம் உண்டு. நிலப்பரப்பில் திருவாங்கூரைக் காட்டிலும் பெரிதான பரோடாவும் கொச்சியைக் காட்டிலும் பெரிதான கோல்ஹாபூரும் சமீபத்தில் பம்பாய் மாகாணத்துடன் ஐக்கியமாகியிருக்கும் போது, திருவாங்கூரும் கொச்சியும் தனி யூனியனாகத் திகழ அனுமதிப்பது நீதியாகுமா? என்ற ஆட்சேபணை எழலாம்.

எனவே, தற்போதுள்ள நிலைமையில் மற்ற இரண்டு யோசனைகளைக் காட்டிலும் திருவாங்கூரும் கொச்சியும் சென்னை மாகாணத்துடன் சேருவது தான் சிறந்தது என்று தோன்றுகிறது. அவ்வாறு சேர்ந்த பின், பாஷா வாரியாக மாகாணங்களைப் பிரிப்பது என்று ஏற்படும் போது கேரள மாகாணம் அமைவதில் கஷ்டம் எதுவும் இராது.


வேறு வழியில்லை


பர்மாவில் உள்நாட்டு யுத்தம் தீர்ந்து அமைதி ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் பண்டித ஜவாஹர்லால் முயற்சி எடுத்துக்கொண்டு புதுடில்லியில் சம்பந்தப்பட்ட ஆசியா நாடுகளின் மகாநாட்டைக் கூட்டியதற்காக பர்மா சர்க்கார் நமது தலைவருக்கு வந்தனம் தெரிவித்திருக்கிறார்கள். பர்மாவில் நடந்து வரும் போரை நிறுத்த சமரசத்தைத் தவிர வேறு வழி இல்லையென்பது ஜவாஹர்லால்ஜியின் அபிப்பிராயம். ஆனால், தங்களுக்குக் கடன் உதவியும் இராணுவ சாதன உதவியும் கிடைத்தால் தாங்கள் வெற்றி பெறுவது நிச்சயம் என்று பர்மா சர்க்கார் கருதுகிறார்கள். பர்மா யூனியனுக்கு உட்பட்டு கரேன் ஜாதியினருக்குச் சுயாட்சி அளிப்பதில் தங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்று ஏற்கெனவே பர்மா சர்க்கார் அறிவித்திருக்கிறார்கள். எனவே, இந்தியாவின் மத்தியஸ்த முயற்சியை பர்மா சர்க்கார் முழுமனதுடன் ஏற்றுக் கொள்வது நலம்.

பர்மா விஷயத்தில் இந்தியா ஏன் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைக் குறித்து பண்டித நேரு தெளிவாகக் கூறியிருக்கிறார். முக்கியமாக ஆசியா நாடுகள் சுதந்திரத்துடன் விளங்க வேண்டும் என்பதே இந்தியாவின் அவா. இரண்டாவதாக, அடுத்துள்ள பர்மாவில் போர் முற்றுவது இந்தியாவின் நலனுக்கு ஏற்றதல்ல. மூன்றாவதாக, பர்மாவிலுள்ள லட்சக்கணக்கான இந்தியர்களுக்கு ஆபத்து ஏற்படாமல் பாதுகாக்க வேண்டுமே என்ற கவலையும் இந்திய சர்க்காருக்கு இருந்து வருகிறது. பர்மா இந்தியாவின் மத்தியஸ்த முயற்சியை நாடுமாயின், பர்மாவில் அமைதி ஏற்படவும் அதன் சுதந்திரம் நிலைக்கவும் வழி பிறக்கும்.

நிகழ்ச்சிச் சித்திரம்

-சாஸ்திரி





காற்று வரி
... கடற்கரையில் காற்று வாங்கச் செல்வோருக்கும்,
உற்பத்தி வரி
.... இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ள பெற்றோருக்கும்,
பிரம்மச்சாரி வரி
..., கனம் மந்திரி அவிநாசிலிங்கம் உள்பட சகல பிரம்மச்சாரிகளுக்-கும்,
தூங்காதவர்களுக்கு வரி
...சென்னை அசெம்பிளியில் கேள்வி நேரத்தின்போது குறட்டை விடாமல் தொல்லைப் படுத்துவோருக்கும் மந்திரி கனம் கோபால் ரெட்டியார் வரிகள் விதித்தால், அவரது புகழ் இமயம் வரையில் பரவி,
இது என் அதிகாரத்தில் தலையிடுவதா-கும்
.... இறுதியில் இப்படி நேரலாம்.
உங்களுக்கு ஒரு நமஸ்காரம். உங்க-ளுடைய மூளைக்கு ஒரு நமஸ்காரம். இந்திய சர்க்காருக்கு ஏதாவது பண உதவி செய்யுங்கள்.
SHASTRY

மூன்று வருஷங்கள்! நாலு விஷயங்கள்!

குழந்தை ஒன்று அருமையாகப் பிறக்கிறது. அது பிறந்த வேளையைக் குறித்து ஜாதகம் கணிக்கிறார்கள். அதனுடைய வருங்கால வாழ்க்கை எப்படியிருக்கும், அதன் பாக்கியமும் துர்ப்பாக்கியமும் எப்படி இருக்கும் என்று ஜோதிடம் பார்க்கிறார்கள்.

ஆனால் அறிவாளிகள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா?

"முதல் ஐந்து வருஷம் வரையில் குழந்தையை நீங்கள் எப்படி வளர்க்கிறீர்களோ, அதற்கேற்பவே அதன் குணநலங்கள் அமையும்; வாழ்க்கையில் பாக்கியமும் துர்ப்பாக்கியமும் ஏற்படும்!" என்று குழந்தையின் பெற்றோர்களுக்குச் சொல்கிறார்கள்.

குழந்தையின் முதல் ஐந்து வருஷம் அவ்வளவு முக்கியமானது. அவ்விதமே இந்தியா பெற்றிருக்கும் சுதந்திரக் குழந்தையின் ஆயுளிலும் முதல் ஐந்து வருஷம் மிக முக்கியமானது. ஐந்து வருஷத்தில் ஏறக்குறைய இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. இன்னும் மூன்று வருஷங்கள் பாக்கியிருக்கின்றன. வருகிற மூன்று வருஷ காலம் இந்தியாவுக்கு மிக மிக முக்கியமானது என்று சர்தார் படேல் கூறுகிறார். "இந்த மூன்று வருஷத்தில் இந்திய மக்கள் எப்படி நடந்து கொள்கிறார்களோ, அதற்கேற்பத்தான் இந்தியாவின் வருங்காலம் ஏற்படும்" என்றும் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

சர்தார் படேல் கூறுவது பரிபூரணமான சத்திய வார்த்தை என்பதில் சந்தேகம் இல்லை. "இந்திய மக்கள்" என்று சொல்லும்போது இந்திய அரசாங்கத்தையும் மாகாண அரசாங்கங்களையும் உட்படுத்தி அவர் சொல்வதாகவே கருத வேண்டும்.

அதாவது இந்திய மக்களும் இந்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் வருகிற மூன்று வருஷத்தில் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும். தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால் இந்தியா பெற்ற சுதந்திரம் நிலைக்காது; நாடு சுபிட்சம் அடையாது.

அடுத்த மூன்று வருஷத்தில் இந்திய மக்களும் அரசாங்கத்தாரும் அவசியம் கவனம் செலுத்த வேண்டிய விஷயங்கள் நான்கு இருக்கின்றன. அவற்றை முக்கிய வரிசைப் பிரகாரம் இங்கே சொல்லுகிறோம்.

1. நாட்டில் அமைதி

எந்தவிதமான முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானாலும் நாட்டில் பரிபூரண அமைதி நிலவ வேண்டும்.

சகோதரர்களோடு சகோதரர்கள் போட்ட சண்டைகளினால்தான் சென்ற ஆயிரம் வருஷத்துக்கு மேலாக இந்தியா அடிமைப் பட்டிருந்தது. மறுபடியும் அத்தகைய தவறை இந்திய மக்கள் செய்யக் கூடாது. செய்தால் மறுபடியும் ஆயிர வருஷ காலத்துக்கு இந்தியா அடிமையாக வேண்டியதுதான்.

சீனாவிலும், மலாய் நாட்டிலும், பர்மாவிலும் சூழ்கொண்டிருக்கும் பயங்கர நிலைமை நம் கண் முன்னால் பிரத்யட்ச உதாரணங்களாக விளங்குகின்றன.

இந்தியாவின் புராதன சரித்திரமோ அதே விஷயத்தைப் பறை யறைந்து அனைவருக்கும் தெரியப் படுத்துகிறது.

சரித்திரத்தின் பாடத்தையும் நம் கண்முன் தோன்றும் எச்சரிக்கைகளையும் கவனியாமல் நாட்டின் அமைதியைக் குலைப்பவர்கள் படுபாதகர்கள்; தேசத்தின் பரம விரோதிகள்; பொதுஜன சத்துருக்கள்.

இப்போது இந்தியாவிலும் மாகாணங்களிலும் ஆட்சிபுரியும் காங்கிரஸ் அரசாங்கங்களின் குறைகளை எடுத்துக்காட்ட யாருக்கும் உரிமை உண்டு; பிரசாரம் செய்ய

உரிமை உண்டு; மேற்படி அரசாங்கத்தை மாற்றுவதற்குப் பிரயத்தனப் படவும் அவை வருக்கும் உரிமை உண்டு.

ஆனால் அந்த உரிமையை ஜனநாயக முறைப்படி பிரயோகிக்க வேண்டும்.

பொதுஜன வோட்டுகளைப் பெற்றுக் காங்கிரஸ் மந்திரிசபைகளைத் தூக்கட்டும்.

ஆனால் பலாத்காரமாக அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றும் எண்ணம் யாருக்கும் இருக்கக் கூடாது.

அத்தகைய எண்ணத்துடன் காரியம் செய்பவர்களைச் சர்க்காரும் பொது மக்களும் சும்மா விட்டிருக்க முடியாது.

கம்யூனிஸ்டுகளும், ஆர். எஸ். எஸ். ஸ்தாபனத்தாரும், அகாலி சீக்கியரும் அத்தகைய பலாத்கார நடவடிக்கைகளில் இறங்கப் பார்க்கிறார்கள்.

அவர்களைப் பொதுமக்கள் ஆதரிக்க முடியாது; சர்க்கார் அவர்களைச் சகித்துக் கொண்டிருக்கவும் முடியாது.

ஏகாதிபத்திய பிரிட்டிஷ் சர்க்காரின் கீழேயே காங்கிரஸ் நடத்திய சுதந்திரப்போர் அஹிம்சா முறையில் நடந்தது.

ஜனநாயக முறைப்படி மக்களின் வோட்டைப் பெற்று ஏற்பட்ட காங்கிரஸ் சர்க்காரை மாற்றுவதற்குப் பலாத்கார முறைகளைக் கையாளுகிறவர்கள் தேச மகா துரோகிகள்; சுதந்திரத்தின் விரோதிகள்.

எது எப்படியானாலும் அடுத்த மூன்று வருஷமும் உள் நாட்டில் அமைதி நிலவுவது பரம முக்கியமான காரியம்.

அப்போதுதான் நாட்டின் முன்னேற்றம் கைகூடும்; சுதந்திரம் பெற்றதின் பலனை தேசமக்கள் அடையக் கூடும்.

2. தேசப் பாதுகாப்பு

உள் நாட்டு அமைதிக்கு அடுத்தபடி முக்கியமான விஷயம் வெளிநாட்டுச் சத்துருக்களிடமிருந்து இந்தியா தேசத்தைப் பாதுகாத்தல்.

இந்தியா அரிதில் பெற்றுள்ள சுதந்திரத்தைப் பறிப்பதற்கு வெளிநாட்டுப் பகைவர்கள் பலர் காத்திருப்பார்கள். கொஞ்சம் இடம் கொடுத்தால் உடனே நுழைந்து விடுவார்கள்.

நூற்றைம்பது வருஷமாக பிரிட்டிஷார் அடித்த கொள்ளை போக மிச்சமிருப்பதையும் கொண்டு போகப் பார்ப்பார்கள்.

உலகம் இன்னும் சமாதான வழியை உறுதியாகக் கைக்கொள்ள வில்லை.

யார் இளைத்தவன் என்றும், யார் ஏமாந்தவன் என்றும் பற்பல தேசங்களும் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

வெளிநாட்டுப் பகைவர்கள் வந்தால் துவம்சம் செய்து நிர்மூலமாக்க இந்தியாவுக்குப் போதிய படை பலம் வேண்டும்.

நம்முடைய சைனியத்துக்கு இப்போது செலவாகும் தொகையை அதிகம் என்று சொல்ல முடியாது.

பிரிட்டிஷார் தேசப் பாதுகாப்பு மூன் தீப்புகளுக்கு ஆயிரத்து மூன்று கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள். அமெரிக்கர் இன்னும் அதிகமாகச் செலவழிக்கிறார்கள். இந்தியா நூற்று முப்பது கோடி ரூபாய் செலவு செய்வது அதிகம் அல்ல.

இந்தியாவின் கடற்படை மிகச் சொற்பமானது. ஆகாசப்படையும் அப்படியே தான். நார்வே, ஸ்வீடன், ஹாலந்து முதலிய மிகச் சிறு தேசங்களின் கடற்படை ஆகாசப் படை அளவுகூட இந்தியாவுக்கு இல்லை.

இந்தியாவின் கடற்படை வலுக்க வேண்டும்; ஆகாசப் படை பெருக வேண்டும். இந்தியாவின் எல்லைப்புறமெங்கும் கடலிலும் ஆகாசத்திலும் கோட்டை கட்டிப் பாதுகாக்கும் அளவுக்குக் கடற்படையும் ஆகாசப் படையும் அதிகமாக வேண்டும்.

இதற்கு ஆகும் செலவுகளைப் பொது மக்கள் கொடுத்தே தீரவேண்டும்.

ஒரு நாட்டின் பாதுகாப்புக்குத் தரைப் படை மட்டும் போதாது; மூன்று வகைப் படை பலமும் இருப்பினும் போதாது.

இராஜ தந்திர நிபுணர்களின் படையும் மிக மிக அவசியமானது.

உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் இந்தியாவின் இராஜ தந்திரிகள் தூதர்களாகச் சென்று தங்க வேண்டும். முக்கியமான தேசங்களில் கட்டாயம் இந்தியத் தூதர் காரியாலயம் இருக்க வேண்டும்.

இந்தக் காலத்தில் ஒரு நாடு எவ்வளவு படை பலம் உள்ளதாயிருந்தாலும் பிறநாடுகளின் உதவியில்லாமல் தனித்து வாழ்ந்து நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது.

இந்திய சர்க்கார் வெளிநாடுகளுக்கு 'அம்பாஸடர்'கள் அனுப்புவது பற்றிச் சிலர் குறை கூறுகிறார்கள்; பரிகாசம் செய்கிறார்கள்; நேருஜி தமக்கு வேண்டியவர்களுக்கெல்லாம்

அம்பாஸடர் பதவிகளை வாரி வீசுகிறார் என்றும் சொல்லுகிறார்கள்.

இப்படிச் சொல்கிறவர்கள் அரசியல் அறிவில்லாத முழு மடையர்கள்; அல்லது பொறுப்பில்லாத விஷமிகள். இப்படிப்பட்டவர்களுடைய பிதற்றல்களைப் பொதுமக்கள் பொருட்படுத்தக் கூடாது.

சின்னஞ் சிறு பெல்ஜிய தேசம் அம்பாஸடர்களுக்குச் செலவழிப்பதுகூட இந்தியா செலவு செய்யவில்லை.

ருஷியா செலவழிப்பதில் பத்தில் ஒன்று இந்தியா செலவு செய்யவில்லை.

வெளிநாட்டுப் பிரசாரத்துக்காகப் பிரிட்டிஷார் செலவழிப்பதில் நூற்றில் ஒரு பங்கு இந்தியா செலவு செய்யவில்லை.

காலடைவில் வெளிநாட்டுப் பிரசாரச் செலவும் அம்பாஸடர்கள் அனுப்பும் செலவும் அதிகரித்தே தீரும்.

இல்லாவிட்டால் உலகத்தில் இந்தியாவுக்கு சிநேகிதர்களே இருக்கமாட்டார்கள். உலக தேசங்களின் மத்தியில் இந்தியாவுக்குச் செல்வாக்கு இராது.

3. உணவு விஷயம்

இந்தியா தேசம் தற்சமயம் உணவுப் பொருள் இறக்குமதிக்காக வருஷந்தோறும் நூற்றுமுப்பது கோடி ரூபாய் வெளிநாடுகளுக்கு அனுப்பி வருகிறது.

இது மிகவும் பயங்கரமான நிலைமை. நாட்டுக்கே அழிவு தேடக்கூடிய நிலைமை.

ஏழை இந்தியா இவ்வளவு பண நஷ்டத்தை நெடுங்காலம் தாங்கமுடியாது. இதிலுள்ள தீமை பண நஷ்டத்தோடு மட்டும் போகவில்லை; உணவு தானியத்துக்காக ரொக்கப் பணத்தைக் கொட்டிக் கொடுத்து வருவதால், தொழில் வளர்ச்சிக்கு அவசியமான இயந்திரங்கள் முதலியவற்றை இந்தியா தருவிக்க முடியாமற் போகிறது.

ஆகையால் தேசம் அடையும் நஷ்டமும் தீமையும் இருமடங்கு ஆகின்றன.

சென்ற வாரத்தில் ஜவாஹர்லால்ஜி வயிற்றெரிச்சல் தாங்காமல் சொன்னார் :—"இந்த மாதிரி உணவுப் பொருளுக்காக இனிமேல் கோடிக்கணக்கான பணம் வெளி நாட்டுக்கு நாம் அனுப்பப் போவதில்லை. அதனால் நாம் பட்டினி கிடந்து செத்துப்போனாலும் சரிதான்!" என்றார்.

ஆனால் பட்டினி கிடந்து சாகவேண்டிய அவசியம் ஏற்பட வேண்டியதில்லை.

சர்க்காரும் பொதுஜனங்களும் தங்கள் கடமையைச் சரிவரச் செய்தால் யாரும் சாகவேண்டிய அவசியமிராது.

உணவுப்பொருள் இறக்குமதி செய்யாமலே எல்லாரும் பிழைத்திருப்பதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன.

ஒன்று, உற்பத்தியாகும் உணவுப்பொருளை எல்லாருக்கும் சமமாகப் பகிர்ந்துகொடுத்தல்.

இரண்டாவது, இந்தியாவின் உணவு உற்பத்தியை அதிகமாக்குதல்.

இந்திய மக்களுக்கு வேண்டிய உணவில் 100க்கு 10 வீதந்தான் இப்போது பற்றாக்குறை என்று சொல்லப்படுகிறது.

தேசத்தில் எல்லோரும் சமமாக 100க்குப் பத்து பங்கு வீதம் உணவைக் குறைத்துக் கொண்டால் ஒன்றும் குடிமுழுகிப் போகாது; எல்லாரும் பிழைத்திருக்கலாம்; பஞ்சத்தினாலும் பட்டினியினாலும் சாவு ஏற்படாது.

அவ்விதம் எல்லாருக்கும் சமமாக கிரவிக் கொடுப்பதற்கு உணவுப் பொருள் கட்டுப்பாடு செய்து அந்த விதிகளைக் கண்டிப்பாக அமுல் நடத்தவேண்டும்.

உணவுக் கட்டுப்பாடு ஏற்பட்டால், அதில் கறுப்பு மார்க்கெட், லஞ்சம் முதலியவை செழிக்க இடம் இருக்கிறது.

ஆகையால் எப்போதும் பற்றாக்குறையாக இந்தியா இருக்க முடியாது; கண்ட்ரோலை எதிர் பார்த்து மக்கள் உயிர் வாழ முடியாது.

100-க்குப் பத்து பங்கு வீதம் உணவு உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும்.

சர்க்கார் இது விஷயத்தில் சரியான ஏற்பாடுகளைச் செய்யவில்லை. சர்க்கார் மந்திரிகளும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யவில்லை.

உணவுப் பெருக்க முயற்சியில் விவசாய இலாகா மட்டும் ஈடுபடுவது போதாது! ஜில்லா கலெக்டர், டிபுடி கலெக்டர், தாசில்தார், ரிவினியூ இன்ஸ்பெக்டர், ஜில்லா ஜட்ஜு, கிராம முனிசிப், மாஜிஸ்ட்ரேட், போலீஸ் சூபரிண்டு முதல் கான்ஸ்டபிள் வரை,—இம்மாதிரி எல்லா இலாகா உத்தியோகஸ்தர்களும் வருகிற மூன்று வருஷத்துக்கு உணவுப் பொருள் பெருக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு வேண்டிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அவர்களுக்குச் சர்க்கார் மந்திரிகள் தர வேண்டும். எந்த ஜில்லாவில் உணவு உற்பத்தி 100-க்கு 10 வீதம் அதிகமாகிறதோ

அந்த ஜில்லா அதிகாரிகளைச் சர்க்கார் மந்திரிகள் கௌரவப்படுத்த வேண்டும்.

பொது ஜனங்களும் தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

இங்கிலாந்தில் யுத்தகாலத்தில் பொது ஜனங்கள் வீட்டுத் தாழ்வாரத்தில் வைத்த பூந் தொட்டிகளில் தக்காளி முதலிய பழச் செடிகளை வைத்து உணவு உற்பத்தி செய்தார்கள்.

அம்மாதிரி மகத்தான முயற்சி இப்போது இந்தியாவுக்குத் தேவை.

பிரசித்தி பெற்ற பிரிட்டிஷ் சேனாதிபதி மோண்ட் கோமரி விவசாயச் சங்கத்தில் சேர்ந்து தானும் விவசாயம் செய்யத் தொடங்கி யிருப்பதாகச் சென்ற வாரத்தில் ஒரு செய்தி கிடைத்தது. இந்தியாவின் தலைவர்களும் பிரமுகர்களும் மோண்ட் கோமரியைப் பின்பற்ற வேண்டும்.

4 உற்பத்திப் பெருக்கம்

ஒருவிதத்தில் இந்தியாவின் பொருளாதாரம் திருப்திகரமா யிருக்கிறது. அதாவது அரசாங்கத்தின் வரவுக்கும் செலவுக்கும் சரிக் கட்ட முடிகிறது.

இன்னொருவிதத்தில் இந்தியாவின் பொருளாதாரம் திருப்திகரமா யில்லை. அதாவது பிரஜைகள் தங்களுடைய குடும்ப வரவையும் செலவையும் சரிக்கட்ட முடிவதில்லை.

தேசத்தில் அகவிலை ஏறிக்கொண்டே போகிறது. சாமான்களின் விலை அதிகத்தினால் பொதுஜனங்களில் ஒரு பகுதியார்,— முக்கியமாக மாதச் சம்பளமும் ரூபாய் வருமானமும் உள்ளவர்கள், — குடும்ப வரவு செலவைச் சரிக்கட்ட முடியாமல் திண்டாடுகிறார்கள். இதனால் அவர்கள் சம்பளம் அல்லது கிராக்கிப்படி அதிகம் கேட்கிறார்கள். கேட்டதை முழுதும் கொடுக்கா விட்டாலும் ஓரளவு கொடுக்க நேர்கிறது.

சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளம் அதிகமானதினால் சர்க்காருக்குப் பணம் அதிகம் வேண்டியிருக்கிறது. இதற்காகச் சர்க்கார் புதிய வரிகளைப் போடுகிறார்கள். பலவித சாமான்களுக்கு வரி கொடுக்க வேண்டி வருகிறது. இதனால் அந்த சாமான்களின் விலை மேலும் கிராக்கி யாகிறது.

எனவே நாட்டின் பொருளாதாரம் உண்மையாகவே தீர்ப்பட வேண்டுமானால் அகவிலை இனி ஏறக்கூடாது; குறைய வேண்டும். இப்போதுள்ள விலையில் மூன்றில் இரண்டு பங்குக்காவது வந்தாக வேண்டும். இதற்கு வழி என்ன ?

அகவிலை உயர்வைச் சிலர் 'பண வீக்கம்' என்று குறிப்பிடுகிறார்கள். இது சரியல்ல. அகவிலை உயர்வுக்கு முக்கிய காரணங்களில் ஒன்று பணவீக்கம். இன்னொரு முக்கிய காரணம் நாட்டின் தேவையைக் காட்டிலும் குறைவாகப் பொருள் உற்பத்தியாவது.

யுத்த காலங்களில் அரசாங்கத்தார் சைன்யத்துக்காக ஏராளமாகச் செலவு செய்ய வேண்டி யிருக்கிறது. இதன் பொருட்டுத் தாராளமாக நோட்டுக்களை அச்சிட்டு வழங்குகிறார்கள். யுத்தம் நீடிக்க நீடிக்க நோட்டுச் செலாவணி அதிகமாயிற்று. இதன் பலனாகச் சர்க்கார் நோட்டுக்களின் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறது.

நெடுங்காலம் கணக்கு வழக்கின்றிச் சர்க்கார் பண நோட்டுக்களை அச்சடித்துக் கொண்டே போனால் என்ன ஆகும் தெரியுமா ? பதினாயிரம் ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்து ஒரு ரொட்டி வாங்கும்படி ஆகும். சீன தேசத்தில் இப்படித்தான் ஆயிற்று. பிரான்ஸிலும், ஜர்மனியிலும், இத்தாலியிலும் ஒவ்வொரு சமயம் இத்தகைய நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமையைத்தான் 'பண வீக்கம்' என்று சொல்ல வேண்டும்.

நல்ல வேளையாக, இந்திய தேசம் அத்தகைய பயங்கர நிலைமைக்கு உள்ளாக வில்லை. இங்கே யுத்தம் முடிந்ததும் பிரிட்டிஷ் சர்க்கார் நோட்டு அச்சடிப்பதை நிறுத்தி விட்டார்கள். காங்கிரஸ் சர்க்கார் வந்த பிறகு நோட்டுச் செலாவணியைக் கட்டுக்குள் வைத்திருக்கிறார்கள்.

ஆகவே தற்போது இந்தியாவில் அக விலை அதிகமாகி யிருப்பதற்குப் பண வீக்கம் காரணம் என்று சொல்ல முடியாது. சாமான்களின் உற்பத்தி தேவையைவிடக் குறைவா யிருப்பதுதான் காரணம்.

ஜனங்களுக்குத் தேவையான எல்லாவித சாமான்களின் உற்பத்தியும் பெருக வேண்டும். அப்போதுதான் அகவிலை குறையும்; குறைந்து நியாயமான நிலைமைக்கு வரும். குடும்ப பட்ஜெட்டுகளை ஜனங்கள் சரிக்கட்ட முடியும்.

உள் நாட்டு உற்பத்தி பெருகப் பெருக, அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி குறையும். இதனாலும் தேசம் நன்மை அடையும்.

ஆகையால், வருகிற மூன்று வருஷத்தில் இந்தியாவில் எல்லாவிதப் பொருள் உற்பத்தியும் பெருகுவதற்குப் பிரம்மப் பிரயத்தனம் செய்யப்பட வேண்டும்.

முக்கியமாக, சர்க்கார்தான் பிரயத்தனம் செய்ய வேண்டும். அவர்களுடைய பிரயத்தனம் பலிப்பதற்கு முதலாளிகளும், தொழிலாளிகளும் ஒத்துழைக்க வேண்டும்.

முதலாளிகள் வீண் முரண்டு பிடிக்கிறார்கள். தேச நன்மையைக் கருதாமல் தங்கள் கொள்ளை லாபத்தையே கருதுகிறார்கள். லாபம் குறைவதாயிருந்தால் தொழில்களை முடக்குவோம் என்கிறார்கள். சர்க்காரிடமிருந்து உறுதி மொழிகளும் நன்னடக்கை ஜாமீன்களும் கேட்கிறார்கள்.

அவர்களுடைய முரண்டுதலினால் தொழிற் கம்பெனி ஷேர்களின் விலைகள் குறைகின்றன. இதனால் பணமுடை ஏற்படுகிறது. புதிய தொழில்களில் போடப் பணம் இல்லாமற் போகிறது. பணம் இருந்தாலும் வீண் பீதியைப் பரப்புவது காரணமாகத் தொழில்களில் பணத்தைப் போட ஜனங்கள் தயங்குகிறார்கள். ஆகவே உற்பத்தி பெருக வழியில்லாமற் போகிறது.

இந்திய சர்க்கார் தாங்களே புதிய தொழில்களை ஆரம்பிக்கலாம்; பழைய தொழில்களையும் எடுத்துக் கொண்டு நடத்தலாம். இதற்குப் பெருந் தடையாயிருப்பது தொழிலாளிகளின் ஒத்துழைப்பு இன்மை.

சர்க்கார் எடுத்துக் கொண்ட தொழில்களில் தொழிலாளிகள் காரணமின்றி வேலை நிறுத்தம் செய்தும், செய்வதாகப் பயமுறுத்தியும் தொல்லை கொடுக்கிறார்கள்.

இந்திய சர்க்கார் எடுத்துக் கொண்டு பொது மக்களின் சார்பாக நடத்தும் மாபெரும் தொழில் ரயில்வேத் தொழில். அதிலே தான் வேலை நிறுத்தத் தொல்லைகளும் அதிகமாயிருக்கின்றன.

தேச நன்மையைக் கருதி முதலாளிகள், தொழிலாளிகள் இரு சாராரின் ஒத்துழைப்பையும் பெற இந்திய சர்க்கார் விரும்புகிறார்கள். இரு சாராருக்கும் கூடியவரையில் விட்டுக் கொடுத்துச் சலுகை காட்டுகிறார்கள்.

முதலாளிகளைப் பார்த்து, "உங்கள் வருமான வரியைக் குறைக்கிறோம்; மூலதன வரியை எடுத்துவிடுகிறோம்; பணத்தைப் போடுங்கள்; தொழிலைப் பெருக்குங்கள்!" என்று சொல்லுகிறார்கள்.

தொழிலாளிகளைப் பார்த்து, "கூடியவரை உங்கள் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்கிறோம். வேறு பல வசதிகள் செய்கிறோம். வேலை நிறுத்தம் செய்தவர்களையும் மன்னித்து எடுத்துக் கொள்கிறோம். நன்றாக வேலை செய்யுங்கள். உற்பத்தியைப் பெருக்குங்கள். தேசம் சுபிட்சமடையும். உங்களுக்கும் அதில் பங்கு உண்டு" என்று வேண்டிக் கொள்கிறார்கள்.

ஆனால் தொழிலாளிகளின் காதில் இதெல்லாம் ஏறுகிறதா? இல்லை! ஆதிக்க வேட்டையில் ஈடுபட்ட தொழிற்சங்கத் தலைவர்களின் ஆவேச வார்த்தைகள் தான் அவர்கள் காதில் ஏறுகின்றன!

இவ்விதமாக, முதலாளிகளின் பேராசைப் பிடிவாதத்துக்கும் தொழிற் சங்கத் தலைவர்களின் ஆதிக்க ஆவேசத்துக்கும் மத்தியில் இந்திய சர்க்கார் திண்டாடுகிறார்கள்.

இருசாராரையும் சமரசப் படுத்திச் சரிக்கட்ட இந்திய சர்க்கார் முயன்று வருகிறார்கள். இதுவரையில் அந்த முயற்சி அவ்வளவாகப் பலன் தரவில்லை.

தொழிலாளிகளாவது ஓரளவு ஒத்துழைக்க முன் வருகிறார்கள்; முதலாளிகள் அவ்வளவுகூட முன் வருவதில்லை. இந்தியாவின் பட்ஜெட் விவாதத்தில் டாக்டர் மத்தாய் "முதலாளிகளுக்கு இவ்வளவு சலுகை காட்டியிருக்கிறோம்; என்ன செய்கிறார்களோ பார்ப்போம்!" என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

முதலாளிகளும் தொழிலாளிகளும் தேச நன்மையைக் கருதி இந்திய சர்க்காரோடு ஒத்துழைத்துப் பொருள் உற்பத்தியைப் பெருக்கும்படி பொதுஜனங்கள் பெரிய கிளர்ச்சி செய்ய வேண்டும்.

இந்திய சர்க்கார் பெரிய முதலாளிகளிடம் இன்னும் கொஞ்சம் கண்டிப்பாக நடந்து கொள்ள வேண்டும்; தொழிலாளிகளிடம் இன்னும் கொஞ்சம் சாதுர்யமாக நடந்து கொள்ள வேண்டும்; புதிய தொழில்களை ஆரம்பிப்பதில் இன்னும் கொஞ்சம் தைரியம் காட்ட வேண்டும். இப்படியெல்லாம் செய்து அகவிலை குறையவும் பொருள் உற்பத்தி பெருகவும் வழிதேட வேண்டும்.

மேற்கூறிய நாலு காரியங்களையும் வரப்போகிற மூன்று வருஷத்தில் வெகு தீவிரமாக நடத்த வேண்டும். எவ்வளவுக்கு அக்காரியங்களை நன்றாக நடத்துகிறோமோ, அவ்வளவுக்கு இந்தியாவின் வருங்காலம் மகோந்நதமாயிருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.



ஷேக்ஸ்பியர் என்னும் நாடகாசிரியர் இருக்கிறாரே?—பெரிய யமன்! அவரைப் பெரிய யமன் என்று ஒத்துக்கொள்ளாதவர்கள் 'சின்ன யமன்' என்றாவது ஒத்துக்கொள்வார்கள். அல்லது 'அந்த யமனுக்கு அடுத்தபடி இந்த ஷேக்ஸ்பியர்தான்!' என்றாவது அவசியம் ஒத்துக்கொள்வார்கள்.

'ஹாம்லெத்' என்னும் நாடகத்தை ஷேக்ஸ்பியர் எழுதியிருக்கிறார். நாடகம் எப்படி என்கிறீர்கள்? கொலை! ஒரே கொலை! நாடக பாத்திரங்கள் சகலரும் சப்ஜாடா கொலை! யமனிடம் அகப்பட்டுக் கொண்டு ஒருவேளை தப்பித்தாலும் தப்பிக்கலாம்; ஷேக்ஸ்பியரின் சோக நாடகத்தில் அகப்பட்டுக் கொண்டு கதாபாத்திரம் யாரும் உயிர் தப்ப முடியாது!

கதையைக் கேளுங்கள்: கதாநாயகன் ஹாம்லெத்தினுடைய தகப்பனை அவனுடைய சகோதரன் கொன்று விடுகிறான்! அந்தக் கொலைகாரச் சகோதரன் அடியோடு வாழ்க! அவன் அந்தக் காரியம் செய்திரா விட்டால் இந்த அற்புதமான நாடகம் உலகத்துக்குக் கிடைத்திராதல்லவா?

ஆனால் நாம் அவனை வாழ்த்தி என்ன பயன்? ஹாம்லெத்தின் மனதில் தன்னுடைய சித்தப்பனைப் பழிவாங்கும் ஆத்திரம் உண்டாகி விடுகிறது. ஆத்திரக்காரனுக்குப் புத்தி கொஞ்சம் மட்டுத்தானே? சித்தப்பன் என்று எண்ணிக்கொண்டு தன் காதலி ஓபீலியாவின் தகப்பனைக் கொல்கிறான். காதலி ஓபீலியா பைத்தியம் பிடித்துத் தற்கொலை செய்துகொண்டு சாகிறாள். ஓபீலியாவின் சகோதரன் தன் தங்கை சாவதற்குக் காரணமாக இருந்த ஹாம்லெத்தைப் பழி வாங்க விரும்பி விஷக் கத்தியினால் அவனைக் கொல்லப் பார்க்கிறான். ஆனால் அவனை ஹாம்லெத் கொன்று விடுகிறான். ஹாம்லெத்துக்காகச் சித்தப்பன் வைத்திருந்த விஷத்தை ஹாம்லெத்தின் தாயார் குடித்து விட்டுச் சாகிறாள். இதைப் பார்த்துவிட்டு ஹாம்லெத் தன்னுடைய சித்தப்பன் மீது பாய்ந்து அவனைக் கொல்கிறான். பிறகு விஷக்கத்திக் காயம் காரணமாகத் தானும் விழுந்து சாகிறான்! குளோஸ்! சப்ஜாடா குளோஸ்! மிச்சம் மீதி ஒருவரும் கிடையாது! — படத்தைப் பார்க்கிறவர்கள் தப்பிப் பிழைத்து வெளியில் வருகிறார்களே! அதுவே பெரிய காரியம். அதற்காக மகாகவி ஷேக்ஸ்பியருக்கு எமது மனமார்ந்த நன்றி!

ஆனால் ஒரு விஷயம். ஹாம்லெத் கதையில் வரும் கொலைகளுக்கெல்லாம் ஷேக்ஸ்பியர் ஜவாப்தாரி அல்ல என்று சிலர் சொல்லுகிறார்கள். டென்மார்க் தேசத்தில்



கதாநாயகன் ஹாம்லெத்

வழங்கிவந்த ஒரு கோரக் கதையை வைத்துக் கொண்டுதான் ஷேக்ஸ்பியர் இந்த நாடகத்தை எழுதினாராம். இருக்கலாம்; வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் அல்லவா! ஒரு பழைய கோரமான கதையை வைத்துக் கொண்டு ஷேக்ஸ்பியர் உலகத்திலேயே ஈடு இணையற்ற 'ஹாம்லெத்' நாடகத்தை சிருஷ்டித்து விட்டார். மனிதனிடம் உள்ள தெய்வீக அம்சங்களும் அசுர குணங்களும் நன்கு வெளியாகும்படியாக நாடகத்தை அமைத்தார். நாடக பாத்திரங்களில் கொலை செய்தவர்கள், கொலையுண்டவர்கள் யாரையுமே நாம் மறக்க முடியாதபடி உணர்ச்சி மயமாக அவர்களைப் பேசச் செய்திருக்கிறார்.

கதை கோரமான கதையா யிருந்தாலும் நாடகத்தைப் படிக்கும்போது நமக்கு அருவருப்பு உண்டாவதில்லை. சோகம் உண்டாகிறது; மனித வாழ்வின் இயல்பைக் குறித்த தத்துவ ஞானம் உண்டாகிறது; ஆனால் அருவருப்பு ஏற்படுவதில்லை.

உலகத்திலேயே சிறந்த நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர் என்பதாக அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். ஷேக்ஸ்பியர் எழுதிய பல நாடகங்களுக்குள்ளே 'ஹாம்லெத்' தலை சிறந்த நாடகம் என்றும் உலகம் எல்லாம் ஒப்புக்கொண் டிருக்கிறது. அப்படிப்பட்ட நாடகத்தை நடிப்பது என்றால் இலேசான காரியமா? இங்கிலாந்திலும் சரி, மற்ற தேசங்களிலும் சரி, மிகச் சிறந்த நடிகர்கள் தான் ஷேக்ஸ்பியர் நாடகங்களை நடிப்பார்கள். முக்கிய நாடக பாத்திரங்களாக நடிப்பவர்களுக்குச் சமூகத்தில் பெரிய அந்தஸ்து உண்டு. அத்தகையவர்களை அரசாங்கத்தாரும் 'ஸர்' பட்டம் முதலியவை கொடுத்துக் கௌரவிப்பார்கள்.

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் படத் தொழில் எவ்வளவோ காலமாக நடந்து வருகிறது. எத்தனையோ முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஆயினும் ஷேக்ஸ்பியர் நாடகங்களைக் கண்டவர்கள், கண்டபடி, படம் எடுக்கத் துணிவதில்லை. ஷேக்ஸ்பியர் நாடகங்களின் உயர்வைப் பாதிக்கும் முறையில் படம் எடுத்தால் பொது ஜனங்கள் சகிக்கமாட்டார்கள் என்று அனைவருக்கும் தெரியும். ஆகையினாலேதான் எவ்வளவு கெட்டிக்கார டைரக்டரானாலும் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் படம் பிடிப்பதற்கு முன் வருவதில்லை.

அவ்வாறு துணிச்சலுடன் முன்வந்தவர்களில் லாரன்ஸ் ஆலிவர் ஒருவர். சில வருஷங்களுக்கு முன்பு ஐந்தாவது ஹென்றி என்னும் ஷேக்ஸ்பியர் நாடகத்தை இவர் படமாக எடுத்தார். சமீபத்தில் ஹாம்லெத் நாடகத்தைப் படம் பிடித்து வெளியிட்டிருக்கிறார்.

உலகமெங்கும் இந்தப் படத்துக்குப் பிரமாதமான பெயரும் புகழும் ஏற்பட்டிருக்கின்றன. 1948-ம் வருஷத்தில் வெளியான சிறந்த படம் என்பதற்குப் பரிசு கிடைத்திருக்கிறது. 1948-ல் சிறந்த நடிப்பாளர் என்பதற்காக லாரன்ஸ் ஆலிவருக்குப் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பெயர்பெற்ற படத்தின் டைரக்டர் லாரன்ஸ் ஆலிவர். படத்தில் பிரதான கதாபாத்திரமாக, அதாவது 'ஹாம்லெத்' பாத்திரமாக நடித்திருப்பவரும் அவரே. படத்தின் சொந்தக்காரரும் அவர்தான். மூன்று வருஷம் பாடுபட்டு, எவ்வளவோ சிரமப்பட்டு, ஐந்து லட்சம் பவுன் செலவு செய்து, இந்தப் படத்தை அவர் எடுத்தாராம்.

• • •

சென்ற வாரத்தில் சென்னைக்கு 'ஹாம்லெத்' படம் விஜயம் செய்தது. அதை ஒரு தடவை நான் பார்த்தேன்


சௌகரியப்பட்டால் இன்னும் பதினொரு தடவை பார்க்கலாம் என்று உத்தேசித்திருக்கிறேன். ஒருதடவை பார்த்ததில், படத்துக்கு ஏற்பட்டிருக்கும் பெயரும் புகழும் தகும் என்று தோன்றியது.

‘ஹாம்லெத்’ படத்தில் கதாபாத்திரங்களின் வாய்மொழியாக மகாகவி ஷேக்ஸ்பியர் பேசுகிறார். மனித உள்ளத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் உணர்ச்சிகளையெல்லாம் அற்புதமான சக்தியோடு வெளியிட்டுப் பேசுகிறார். கதா பாத்திரங்களின் வாய்மொழியாக மட்டும் மகாகவி பேசவில்லை. அவர்களின் முகபாவங்களின் மூலமாகப் பேசுகிறார். துடிக்கும் உதடுகளின் மூலமாகவும் விழிக்கும் கண்களின் மூலமாகவும் பேசுகிறார். கண்ணீர்த் துளிகளின் மூலமாகப் பேசுகிறார். வியர்வைத் துளிகளின் மூலமாகவும் பேசுகிறார். ஹாம்லெத்தின் நெற்றிச் சுருக்கங்கள் பேசுகின்றன. அவனுடைய கத்தி பிடித்த கை விரல்கள் பேசுகின்றன. கதாநாயகி ஒபீலியாவின் கூந்தல் கற்றைகள் பேசுகின்றன; அவளுடைய கன்னக் குழிவுகள் பேசுகின்றன; அவள் கையில் எடுத்த காட்டு மலர்கள் உருக்கமாகப் பேசுகின்றன.

இன்னும், இந்தப் படத்தில் கோட்டை கொத்தளங்கள் பேசுகின்றன. நிழல் அடர்ந்த நீரோடை புலம்புகின்றது. பனிப்படலங்கள் விஷயங்களை மூடி மறைப்பதற்குப் பதிலாக தெளிவு படுத்துகின்றன. நிலைச் சிலைகள் இரகசியங்களை உரைக்கின்றன. அரண்மனைச் சுவர்களும் மண்டபத் தூண்களும் சோகக் கதைகள் சொல்கின்றன. ஆகா! அந்தப் புதை பூமியில் குழிதோண்டுகிறவன் கையில் எடுத்த கபாலம்,—மண்டை ஓடு,—மனித வாழ்க்கையின் அரிய தத்துவங்களை எடுத்துப் பிரசங்கமாரி பொழிகின்றது!

அற்புதமான படம்; ஒரு தடவை பார்த்தவர்கள் என்றும் மறக்கமுடியாதபடி மனதில் ஆழ்ந்து பதிந்துவிடும் படம். மனித குலத்தின் மகோன்னதத்தையும் நீசத்தனத்தையும் ஒருங்கே வெளிப்படுத்தும் படம். மனித உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அற்புத ரத்தினங்களையும் ஆசாபாச பயங்கரங்களையும் எடுத்துக் காட்டும் படம்.

இவ்வளவு உயர்வாக எடுக்கப்பட்டிருக்கும் ஒரு படத்தைப் பிரசாரம் செய்வதில் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரே மிக்க சிரத்தை காட்டுகிறார்களென்றால், அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லைதானே!




காதலி ஒபீலியா

இந்தியாவில் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் ஆபீஸை யொட்டி பிரிட்டிஷ் செய்தி இலாகா வேலை செய்து வருகிறது. அந்த இலாகாவிலிருந்து லாரென்ஸ் ஆலிவர் ‘ஹாம்லெத்’ படம் எடுப்பதில் கையாண்ட புது முறைகளைப் பற்றியும் அந்தப் படத்தின் உயர்வுகளைப் பற்றியும் விவரங்கள் அடங்கிய பிரசுரம் இந்தியப் பத்திரிகைகளுக்கெல்லாம் அனுப்பப் பட்டிருக்கின்றன. இந்தக் கட்டுரையோடு வெளியாகும் இரண்டு படங்களும் மேற்படி பிரிட்டிஷ் செய்தி இலாகா நமக்கு அனுப்பி வைத்தவைதான்.

நடிப்புக் கலையிலும் படக்கலையிலும் பிரிட்டிஷார் அடைந்திருக்கும் உன்னதத்தை எடுத்துக்காட்டும் படமாயிருப்பதினால்தான் பிரிட்டிஷ் சர்க்காரின் செய்தி ஸ்தாபனங்கள் அதை விளம்பரப்படுத்துவதில் இவ்வளவு சிரத்தை காட்டுகின்றன.

இந்த மாதிரி இந்தியாவின் கலைச் சிறப்பைத் தூக்கிக் காட்டும் உன்னதமான படங்கள் இந்தியாவில் எடுக்கப்பட வேண்டும். அத்தகைய கலைச் சிறப்பு வாய்ந்த படங்களை வெளிநாடுகளில் பிரசாரம் செய்வதற்கு இந்திய சர்க்கார் முன்வர வேண்டும்.









குயிலே, மறைந்தாயோ?

சபரி

நந்தா விளக்கு அணைந்து விட்டது. வாடாத நறுமண மிக்க தாமரைப் பூ வாடிவிட்டது. ஹிந்துஸ்தானத்தின் இணையில்லாக் கவிக்குயில் வான வெளியிலே பறந்து சென்று விண்ணுலகை அடைந்து விட்டது. கடந்த ஐம்பது வருஷங்களாகப் பாரத மக்களுக்கு வீரமும் தீரமும் ஊட்டி வந்த மாதரசி நம்மை விட்டுப் பிரிந்து போய்விட்டார்.

* * *

மாதரசி சரோஜினி கவியரசியாகவும் விளங்கினார். கவியரசர்களும் கவியரசிகளும் வாழ்க்கையில் தரித்திரத்துக்கு ஆளாகித் துயரப்படுவது உண்டல்லவா? ஸ்ரீமதி சரோஜினி அத்தகைய கவியரசி அல்ல. மகாராஜாக்களும் மகா ராணிகளும் குபேரர்களும் கோடீஸ்வரர்களும் உண்டு களித்து உல்லாசமாகப் பொழுதைப் போக்கக் கூடிய பம்பாய்த் தாஜ்மகால் ஹோட்டலிலே, பட்டுப் பட்டாடைகளை அணிந்து கொண்டு, முத்துக்களும் வைரங்களும் டால் வீச, மகாராணியைப் போல வாழ்ந்து வந்தவர் அவர். துன்பம் என்பது என்னவென்றே அறியாமல் நெடுங்காலம் வாழ்ந்துவந்த பெண்ணரசி.

காந்தி மகாத்மாவின் சுதந்திர சங்கநாதம் ஸ்ரீமதி சரோஜினியை ஆட்கொண்டது. பொக்கைவாய்க் கிழவரின் மோகனப் புன்னகை அவரைத் தேசப் பணிக்கு ஆளாக்கியது.

காந்திஜியின் செல்வாக்குக்குள் வந்ததும் சரோஜினிதேவி ராஜபோகத்தைத் துறந்தார்: பட்டுப் பட்டாடைகளை உதறித் தள்ளினார்; முத்துக்களையும் வைரங்களையும் வீசி எறிந்தார்; தியாகப் பெருந்தீயில் குதித்தார்.

கவியரசி சரோஜினி, தேசத்தலைவி சரோஜினியாகி விட்டார். தேச சுதந்திரப் போரில் தீவிரமாக ஈடுபட்டார். அதற்குப் பிறகு அவர் கவிதை எழுதவில்லை. அவருடைய வாழ்க்கையே ஒரு கவிதையாகி விட்டது: — பண்டித ஜவாஹர்லால்ஜி கூறியதுபோல்.

யாரோ ஒருவர் சரோஜினியைப் பார்த்து, "அம்மா! பொன்மயமான கற்பனைக் கோபுரங்களில் ஏறிச் சஞ்சரிப்பதை விட்டு, இந்த அரசியல் சந்தைக் கடைக்குள்ளே ஏன் நுழைந்தாய்? உன்னுடைய புல்லாங்குழலை எறிந்துவிட்டு, வீணாகானத்தை மறந்துவிட்டு ஏன் இந்தக் கூச்சலில் பிரவேசித்தாய்?" என்று கேட்டாராம்.

அதற்கு ஸ்ரீமதி சரோஜினி நாயுடு கூறியதாவது: "பொன்மயமான கற்பனைக் கோபுரங்களில் ஏறிச் சஞ்சரிப்பது மாத்திரம் கவியின் வேலையல்ல. சந்தைக் கடைப் புழுதியிலும் உலவி, மக்களுடைய துன்பங்களில் கலந்துகொள்ள வேண்டியது கவியின் முக்கிய கடமை."

* * *

தேவி சரோஜினியின் வாழ்க்கை அதிசயமானது. பன்னிரண்டாம் வயதில் ஒரு கணக்குப்போட வகை தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்த போது, உள்ளத்தில் கவிதை யுணர்ச்சி பொங்கி, ஒரு அழகிய கவிதை எழுதினார். அதிலிருந்து ஆங்கில நாட்டு இலக்கிய பண்டிதர்கள் பலரும் பாராட்டும்படி நவ நவமாகப் பல கவிதைகள் புனைந்து வந்தார். காங்கிரஸ் தலைமைப் பதவி என்பது கிட்டக்கூடாத ஒரு மாபெரும் கௌரவமாகக் கருதப்பட்ட அந்தக் காலத்தில், ஸ்ரீமதி சரோஜினிக்கு அந்த கௌரவம் கிடைத்தது. உப்பு சத்தியாகிரக இயக்கத்தின்போது காந்தி மகாத்மாவும் அப்பாஸ் தயாப்ஜியும் கைது செய்யப்பட்ட பிறகு, சரோஜினிதேவி அப்போராட்டத்துக்குத் தலைமை வகித்து வெற்றிகரமாக நடத்திச் சிறைபுகுந்ததை யார் மறக்க முடியும்?

1947-ம் வருஷம் புதுடில்லியில் கூடிய ஆசிய மகாநாட்டுக்கு ஸ்ரீமதி சரோஜினி தலைமை வகித்தபோது, ஆசியா முழுவதற்கும் ஒரு பெண்மணியே தலைமை வகித்து நடத்தியதுபோல இருந்தது.

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு அவரை கவர்னராக அடையக் கூடிய பாக்கியம் ஐக்கிய மாகாணத்துக்குக் கிடைத்தது. ஸ்ரீமதி சரோஜினி அந்தப் பணியை வெகு திறமையுடன் ஆற்றினார். ஒரு மாதரசி ஒரு மாகாணத்தின் கவர்னர் பதவி வகித்து ஆட்சி புரிவது கண்டு உலகம் அதிசயித்தது. நாற்பது கோடி மக்களின் இதயங்களையும் ஆண்ட வீராங்கனைக்கு ஒரு மாகாணத்தை ஆள்வது என்ன அவ்வளவு கஷ்டமா?

* * *

ஒரு தடவை ஸ்ரீமதி சரோஜினி ஒரு பொதுக் கூட்டத்தில் தலைமை வகிக்கப்

போயிருந்தார். நேரம் இரவு. கூட்டத்துக்குள்ளே போனதும் திடீரென்று விளக்குகள் அணைந்துவிட்டன. எல்லோரும் "விளக்கு!" "விளக்கு" "விளக்கு வேண்டும்!" என்று கத்தினர்கள். ஸ்ரீமதி சரோஜினி இருட்டைப் பொருட் படுத்தாது, அங்கே தலைமை வகிப்பதற்காகப் போட்டிருந்த மேஜையருகே சென்றார். "விளக்கு, விளக்கு - என்று சிறு குழந்தைகளைப் போலக் கத்தத்தான் உங்களுக்குத் தெரிகிறதே யொழிய, விளக்கு இல்லாவிட்டால் என்ன செய்வது என்று தெரியவில்லை. இதோ நான் ஒரு விளக்குக் கொண்டு வந்திருக்கிறேன்: என்னுடைய குருநாதர் கொடுத்த அறிவு விளக்கு ஒன்று கொண்டு வந்திருக்கிறேன்" என்று சங்கநாதம் செய்யத் தொடங்கினர்.

அவ்வளவுதான்! அணைந்திருந்த விளக்குகள் பளிச்சென்று எரியத் தொடங்கின!

* * *

ஸ்ரீமதி சரோஜினி தேவி இந்தியப் பெண் குலத்துக்குக் கிடைத்த ஒப்பிலா மாணிக்கம்; நம்முடைய கவிச் சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதியார் கனவு கண்ட புதுமைப் பெண். காந்தி மகானுக்கு உற்ற சிஷ்யை.

ஓய்வு ஒழிவில்லாத உழைப்பாலும் இடைவிடாத தேசத் தொண்டாலும் பல வருஷகால சிறைவாசத்தாலும் ஸ்ரீமதி சரோஜினியின் உடல்நலம் கொஞ்சகாலமாகச் சீர்குலைந்து கொண்டே வந்தது. கடைசியில் நாளது மார்கழி 2உ புதன் கிழமை காலை அவர் காலமாகிவிட்ட செய்தியைக் கேட்டு பாரததேசம் முழுவதும் கண்ணீர் வடித்தது.

ஸ்ரீமதி சரோஜினி தேவி ஐக்கிய மாகாண கவர்னராக நியமிக்கப்பட்ட போது, "இஷ்டம்போலப் பறந்து திரியும் காட்டுப் பறவையாகிய என்னைப் பிடித்துக் கூட்டில் எதற்கு அடைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

கூட்டைவிட்டு அந்தக் காட்டுப் பறவை பறந்து போய்விட்டது. உலகக் கூட்டைவிட்டே பறந்து போய்விட்டது. தம்முடைய குருநாதராகிய காந்திமகானைக் கண்டு தரிசிப்பதற்காகத்தான் அது இவ்வளவு விரைந்து போயிருக்க வேண்டும்!

வீரசுவர்க்கம் புகுந்த அந்த வீராங்கனையைப் போற்றுவோம். பிறந்த நாட்டுக்குப் பெருமைதந்த கவியரசியை வாழ்த்துவோம்.

ஸ்ரீமதி சரோஜினிதேவியைப் போன்ற பெண்ணரசிகள் அநேகர் இந்தப் புண்ணிய பூமியில் அவதரிக்கவேண்டும் என்று ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

அலை ஓசை

கல்கி

இருபத்தைந்தாம் அத்தியாயம்

லலிதாவின் கடிதம்

காலை நேரத்தில் அரை மணிநேரம் சடசட வென்று பெய்த மழையினால் கல்கத்தாவின் வீதிகள் சுத்தமாக விளங்கின. வீதி ஓரங்களில் வளர்ந்திருந்த கொழுமையான மரங்களிலிருந்து மழைத் துளிகள் முத்து முத்தாகச் சொட்டிக் கொண்டிருந்தன. பட்சிகள் சிறகுகளை அடித்து மழைத் துளிகளை உதறிக் கொண்டிருந்தன.

மேல் மாடியின் பலகணி மாடத்தில் உட்கார்ந்து சித்ரா அந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுடைய கணவன் அமரநாத் ஆபீஸுக்குப் போவதற்காக உடுப்புத் தரித்துக் கொண்டிருந்தான்.

"இன்றைக்குச் சீக்கிரம் ஆபீஸிலிருந்து வந்து விடுவீர்களா? மழை பெய்திருக்கிறபடியால் ஏரிக் கரை இன்று ரொம்ப சுகமாயிருக்கும். சீக்கிரம் ஆபீஸிலிருந்து வந்தால் போகலாம்!" என்றாள் சித்ரா.

"சரிதான், சரிதான்! அன்றைக்கு ஒரு நாள் ஏரிக் கரைக்குப் போனது போதாதா? அன்றிருந்து ஏரி என்றாலே எனக்குப் பயமாயிருக்கிறது. திரும்பி வரும்போது பஞ்சத்தில் அடிபட்ட இன்னும் ஒரு பெண்மணி யாரையாவது காப்பாற்ற வேண்டி நேரிடலாம். அதைக் காட்டிலும் ஏதாவது நல்ல சினிமாவுக்குப் போய்விட்டு வந்தாலும் வரலாம். 'அன்னா கரீனா' வந்திருக்கிறதாம்!......"

"புருஷர்களுடைய காரியமே விசித்திரமாயிருக்கிறது. நாடகத்திலும் சினிமாவிலும் யாராவது ஒரு அனாதைப் பெண் வீதியிலே கிடந்தால் அதைப் பார்த்து உருகிப் போய்விடுகிறார்கள். நிஜ வாழ்க்கையில் அந்த மாதிரி ஒரு பெண் கிடந்தால், அந்தப் பக்கமே பார்க்காமல் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு போகிறார்கள்...",

"அது உண்மைதான். யார் இல்லை என்கிறார்கள்? அதற்குக் காரணமும் இருக்கிறது. சினிமாவில் ஒரு பெண் தெருவில் கிடந்தாள் என்றால், அவள் சாமான்யப் பெண்ணாயிருப்பாளா? ஒரு கிரேடா கார்போ, அல்லது நார்மா ஷியரர் அல்லது கண்ணன் பாலா அவ்விதம் விழுந்து கிடப்பாள். பார்க்கிறவர்களுடைய மனம் கட்டாயம் உருகத்தான் செய்யும்......"

"கொஞ்சம் நில்லுங்கள், மிஸ்டர்! அன்றைக்குத் தாங்கள் பெரிய மனது செய்து காரிலே தூக்கிப் போட்டுக் கொண்டு போய்க் காப்பாற்றினீர்களே, அந்தப் பெண் உங்கள் கிரேடா கார்போ அல்லது உங்கள் கண்ணன் பாலாவுக்கு எந்த விதத்திலும் குறைந்தவள் அல்ல! நான் ஒன்று சொல்கிறேன், கேளுங்கள். இன்று சாயங்காலம் சீக்கிரம் ஆபீஸிலிருந்து வந்துவிடுங்கள். இரண்டு பேருமாகப் போய் அந்தப் பெண்ணையும் அழைத்துக்கொண்டு ஏரிக் கரைக்குப் போவோம். கல்கத்தா நகரத்தைச் சுற்றிக் காட்டுவதாக அவளிடம் சொல்லியிருக்கிறேன். அவளும் வருவதாக ஒத்துக் கொண்டிருக்கிறாள்" என்றாள் சித்ரா.

"முடியவே முடியாது! அந்தமாதிரி நீ சொல்வதாயிருந்தால் நான் ஆபீஸிலிருந்து இராத்திரி பத்து மணிக்குத்தான் திரும்பி வருவேன். நம்முடைய திருநெல்வேலிப் பக்கங்களில் 'விருதுப்பட்டிக்குப் போகிற சனியனை விலைக்கு வாங்கினாற்போல்' என்பார்கள். அம்மாதிரியல்லவா இருக்கிறது நீ சொல்லுகிற காரியம்?"

"ஊர்பேர் தெரியாத ஒரு அநாதைப் பெண்ணிடம் உங்களுக்கு என்னத்திற்காக இவ்வளவு கொடூரம்?" என்று கேட்டாள் சித்ரா.

"ஊர் பேர் தெரியாததினால்தான் நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அவள் யோக்யமான ஸ்திரீயாயிருக்கும் பட்சத்தில் ஊர், பேர் சொல்வதற்கு ஏன் தயங்கவேண்டும்? இன்னும் சொல்லாமல்தானே இருக்கிறாள்?" என்றான் அமரநாத்.

"அதனால் என்ன? எத்தனையோ காரணம் இருக்கலாம். ரொம்பவும் துக்கப்பட்டவளாகத் தெரிகிறது. அவளுடைய யோக்யதையைப் பற்றி எந்தக் கோர்ட்டில் வேண்டுமானாலும் நான் சத்தியம் செய்யத் தயாராயிருக்கிறேன். அநாதை விடுதியில் சௌதராணி அம்மாள் இந்தப் பெண்ணைப் பற்றிச் சொல்லுகிற புகழ்ச்சிக்கு அளவேயில்லை. தினம் ஐம்பது அநாதைக் குழந்தைகளுக்குக் குளிப்பாட்டி விடுகிறாளாம்! அலுக்காமல் சலிக்காமல் வேலை செய்து கொண்டிருக்கிறாளாம். அவள் இங்கேயே இருந்துவிட்டால் எவ்வளவோ தனக்கு உதவியாயிருக்கும் என்று சௌதராணி அம்மாள் சொல்கிறாள்."

"அவ்வளவு நல்ல பெண்ணாயிருக்கும் பட்சத்தில் ஊர், பேர் சொல்ல எதற்காக மறுக்கவேண்டும்?" என்று அமரநாத் மீண்டும் கேட்டான்.

"யார் கண்டது? அவளுடைய கணவன் உங்களைப் போன்ற கொடூர குணம் உள்ளவனாயிருக்கலாம்! இவளை அடித்துத் துரத்தியிருக்கலாம்! அதைச் சொல்லிக் கொள்ள வெட்கப்படலாமல்லவா?"

"சரி, சரி! உன்னை நான் ஒரு நாளைக்கு வீட்டை விட்டு அடித்துத் துரத்துகிறேனா, இல்லையா, பார்!" என்றான் அமரநாத்.

"நீங்கள் அப்படிச் செய்தால் நான் இந்தச் சாதுப் பெண்ணைப்போல் வாயை மூடிக் கொண்டிருப்பேன் என்று நினைக்க வேண்டாம்! என்னை அடித்துத் துரத்திய அருமைக் கணவன் யார் என்பதை ஊரெல்லாம் பறையடித்து விடுவேன்!" என்றாள் சித்ரா.

இந்தச் சமயத்தில் வேலைக்காரப் பையன் அன்றையத் தபால்களைக் கொண்டுவந்து கொடுத்தான். அமரநாத் முதலில் தபால்களைப் புரட்டிப் பார்த்து, "ஸ்ரீமதி சித்ரா தேவிக்கு ஒரு கடிதம் இருக்கிறது. லலிதா தேவி எழுதியதாகத் தோன்றுகிறது!" என்று சொல்லிக் கொண்டே ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தான். பிறகு தன் தபால்களைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான்.

சித்ரா தனக்கு வந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு தன்னுடைய அறைக்குப் படிப்பதற்குப் போனாள். ஐந்து நிமிஷத்துக் கெல்லாம், "கேட்டீர்களா கதையை?" என்று கூவிக் கொண்டே ஓடி வந்தாள்.

அமரநாத் நிமிர்ந்து சித்ராவைப் பார்த்துவிட்டு, "கதை பரபரப்புள்ள மர்மம் நிறைந்த திடுக்கிடும் கதையாக இருக்கும் போலிருக்கிறதே? அப்படிப் பட்ட கதையை யார் எழுதியிருக்கிறது? லலிதாவா?" என்றான்.

"ஆமாம்; லலிதாவேதான். ஆனால் இதில் அவள் எழுதியிருப்பது வெறும் கதையல்ல. கதையைக் காட்டிலும் திடுக்கிடச் செய்யும் உண்மைச் சம்பவம். இதைப் படித்துப் பாருங்கள்!" என்று கடிதத்தை நீட்டினாள்.

"அதெல்லாம் முடியாது! உனக்கு வந்த கடிதத்தை நான் படிக்க மாட்டேன். அப்புறம் எனக்கு வரும் கடிதங்களை நீ படிக்க வேண்டும் என்பாய். ஏதாவது விசேஷ சமாசாரம் இருந்தால் வாயினால் சொல்லி விடு!" என்றான் அமரநாத்.

"உங்கள் மாதிரி பிடிவாதம் உள்ள மனுஷரை நான் பார்த்ததே கிடையாது. போனால் போகட்டும்! நான் சொல்லுவதையாவது கேளுங்கள். லலிதாவின் அண்ணன் சூரியா டில்லியில் போலீஸாரிடமிருந்து தப்பி ஓடப் பார்த்தானாம். போலீஸார் அவனைச் சூழ்ந்து கொள்ளவே துப்பாக்கியால் சுட்டானாம். ஆனால் போலீஸ்காரர்கள் அவனைப் பிடித்து விட்டார்களாம். அதோடு ரொம்ப அடித்து விட்டார்களாம். அதனால் பலத்த காயம் பட்டு ஆபத்தான நிலைமையில் இருக்கிறானாம். இதைப்பற்றி லலிதா ரொம்பவும் வருத்தப்பட்டு எழுதியிருக்கிறாள். அவளுடைய அப்பாவும் அம்மாவும் ரொம்ப வருத்தப் படுகிறார்களாம்.

வருத்தம் இராதா, பின்னே? இது போதாதற்கு இன்னொரு பெரிய விபத்து அவர்களுக்கு! அதுவும் டில்லி சமாசாரந்தான். சீதாவைத் திடீரென்று ஒருநாள் காணுமாம்! எவ்வித தகவலும் சொல்லாமல் மாயமாய் மறைந்து போய்விட்டாளாம். சூரியா பிடிபட்டதும் சீதா காணுமற் போனதும் ஒரே நாளில் நடந்ததாம். சீதாவின் கணவன் லலிதாவின் தகப்பனாருக்கு அதைப்பற்றி எழுதியிருக்கிறானாம். ஒருவேளை தேவபட்டணத்துக்கோ ராஜம்பேட்டைக்கோ வந்து சேர்ந்தால் தனக்கு உடனே தகவல் தெரிவிக்கும்படி எழுதியிருக்கிறானாம்! சூரியாவுக்கு நேர்ந்த விபத்தைக் காட்டிலும் சீதாவைப் பற்றிய செய்திதான் லலிதாவை அதிகமாகத் துன்பப்படுத்தி யிருக்கிறது. அதைப் பற்றி ரொம்பவும் புலம்பி யிருக்கிறான்!"

இதைக் கேட்டுக் கொண்டு வந்த அமரநாத் நடுவில் பெரும் யோசனையில் ஆழ்ந்து விட்டான். திடீரென்று குதித்து எழுந்து, "சித்ரா! நாலு நாளைக்கு முன்பு டில்லி சமாசாரம் ஒன்று பத்திரிகையில் வந்ததே; உனக்குப் படித்ததாக ஞாபகம் இருக்கிறதா?" என்று சொல்லிக்கொண்டே தினசரிப் பத்திரிகைகள் அடுக்கி வைத்திருந்த மூலைக்குப் போய் அங்கிருந்த பத்திரிகைகளைப் புரட்டத் தொடங்கினான். சில நிமிஷ நேரத்துக்குள் அவன் தேடிய பத்திரிகைச் செய்தி அகப்பட்டு விட்டது.

"ஆகா! இதோ அந்தச் செய்தி இருக்கிறது! கேள், சித்ரா!" என்று செய்தியைப் படித்தான்.

"நாலு நாளைக்கு முன் சூரியநாராயணன் என்னும் புரட்சிக்காரன் போலீஸாரால் கைது செய்யப்பட்ட செய்தி இந்தப் பத்தியில் பிரசுரிக்கப் பட்டிருந்தது. கைது செய்யப்பட்ட போது மேற்படி புரட்சிக்காரன் போலீஸாரை எதிர்த்ததன் காரணமாகப் பலமாக அடிக்கப்பட்டுக் காயம் அடைந்தான். இது காரணமாக அவனை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்காகச் சேர்த்துப் போலீஸ் காவலும் போட்டிருந்தார்கள். நேற்றிரவு ஆஸ்பத்திரியிலிருந்து அவன் தப்பித்துக் கொண்டு போய்விட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. போலீஸ் காவலைமீறி அவன் எப்படித் தப்பித்துக் கொண்டு போயிருக்க முடியும் என்பது பெரிய மர்மமாயிருக்கிறது. இரகசியப் போலீஸார் தீவிரமாகப் புலன் விசாரித்துக் கொண்டிருப்பதாய் அறிகிறோம். நிற்க.

"சூரியநாராயணன் கைது செய்யப்பட்ட அன்று மறைந்து விட்ட புரட்சிக்காரி இன்னும் அகப்படவில்லையென்று தெரிகிறது. அவள் மிகவும் சாமர்த்தியசாலி என்றும், வெகு நாளாகப் புது டில்லியில் இரண்டு பெயர்கள் வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தியதாகவும், பெரிய பெரிய உத்தியோக வர்க்கக் குழாங்களில் பழகி வந்ததாகவும் தெரிய வருகின்றன. இந்தப் பிரசித்தி பெற்ற புரட்சிக்காரியைப் பற்றியும் இரகசியப் போலீஸார் தீவிரமாகப் புலன் விசாரித்து வருகிறார்களாம்."

மேற்கண்ட செய்தியை மிகப் பரபரப்புடன் படித்து முடித்த அமரநாத், "இதைப் பற்றி என்ன நினைக்கிறாய், சித்ரா! 'சூரியநாராயணன்' என்றபெயரைப் பத்திரிகையில் படித்த போது சூரியாவின் ஞாபகமே எனக்கு வரவில்லை. ஆனால் இது நம்முடைய சூரியாவாகத்தான் இருக்க வேண்டும். அவனுடைய சாமர்த்தியத்தை என்னவென்று சொல்வது? இத்தனை நாள் போலீஸுக்கு டிமிக்கி கொடுத்து வந்தது பெரிதல்ல; மறுபடியும் ஆஸ்பத்திரியிலிருந்து போலீஸ் காவலை மீறித் தப்பித்துக் கொள்வது என்றால் சாமான்யமா? அதிலும், உடம்பெல்லாம் காயம் பட்டுக் கிடக்கும் நிலையில்? — என்ன பேசாமல் நிற்கிறாய், சித்ரா! சூரியாவின் காரியம் உனக்கு அதிசயமா யில்லையா?" என்றான்.

"உங்கள் சூரியாவின் பெருமை இருக்கட்டும். நான் வேறொரு விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன். — மாயமாய் மறைந்த சீதாவைப் பற்றித்தான்! — ஸார்! தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். இன்றைக்கு ஆபீஸுக்கு லீவு போட்டுவிடுங்கள். டெலிபோனில் கூப்பிட்டுச் சொல்லி விடுங்கள். இரண்டு பேரும் பஞ்ச நிவாரண விடுதிக்குப் போய்விட்டு வரலாம்! இப்பொழுதே புறப்பட்டுப் போக வேண்டும்!" என்றாள் சித்ரா.

"பஞ்ச நிவாரண விடுதிக்கு இப்போது என்னத்திற்கு? — எதற்காக நான் லீவு எடுக்க வேண்டும்?" என்று அமரநாத் வியப்புடன் கேட்டான்.

"உங்களுக்கு இன்னும் தெரியவில்லையா? அன்றைக்கு நாம் வீதி ஓரத்தில் கிடந்தவளை எடுத்துக் கொண்டு வந்து அநாதை விடுதியில் சேர்த்தோமே? அவளைப் பற்றி ஒரு சந்தேகம் எனக்கு உண்டாகிறது. ஒருவேளை அவள்......"

"ஒருவேளை அவள் சீதாவாக இருக்கலாம் என்று சொல்லுகிறாயாக்கும். லட்சணமாகத்தான் இருக்கிறது. டில்லி எங்கே? கல்கத்தா எங்கே? அங்கேயிருந்து இங்கே எதற்காக அவள் வரவேண்டும்? அவளுடைய கணவன் எழுதியிருப்பது போலத் தேவபட்டணம் அல்லது ராஜம்பேட்டைக்குப் போயிருந்தாலும் அர்த்தம் உண்டு!" என்றான் அமரநாத்.

"ரொம்பப் புத்திசாலிதான்! சீதா புரட்சிக்காரி என்பதை மறந்து விட்டுப் பேசுகிறீர்கள்! ராஜம்பேட்டை அல்லது தேவ பட்டணத்துக்குப் போனால் போலீஸாருக்கு நோட்டீசு கொடுத்ததுபோல் ஆகாதா? கல்கத்தா தான் தலைமறைவா யிருக்கச் சரியான இடம் என்று வந்திருக்கிறாள். வந்த இடத்தில், பாவம், ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது."

"இதெல்லாம் உன்னுடைய கற்பனைதானே? ஆதாரம் என்ன?"

"கற்பனைதான். நேரில் போய் அவளையே கேட்டு உண்மையைத் தெரிந்து கொண்டால் போகிறது! ஏன் ஸார்? நீங்கள்தான் முன்னே சீதாவைப் பார்த்திருக்கிறீர்களே? உங்களுக்கு அவளை அடையாளம் தெரியவில்லையா?"

"கலியாணத்தின்போது ஒரே ஒரு தடவை பார்த்ததுதானே? அதுவும் பத்து வருஷத்துக்கு முன்னால்! எப்படி ஞாபகம் இருக்கும்? மேலும் அன்று இராத்திரி காரில் தூக்கிப் போட்டுக்கொண்டு வந்தபோது அவள் முகத்தையே நான் பார்க்கவில்லை. அன்று இராத்திரி இருட்டாகவும் இருந்தது. எப்படி அடையாளம் சொல்வது?"

"அவ்விதமானால் உடனே புறப்படுங்கள்! இப்போது வந்து நன்றாய்ப் பாருங்கள். பார்த்து அந்தப் பெண் சீதாதானா என்று கண்டு பிடித்துச் சொல்லுங்கள்!" என்றாள் சித்ரா.

"எனக்கு என்ன அதைப் பற்றிக் கவலை? சீதாவா யிருந்தால் என்ன? யாரா யிருந்தால் என்ன? நீயே கேட்டுத் தெரிந்துகொள். உன்னை அநாதை விடுதியில் கொண்டுபோய் விட்டுவிட்டு நான் ஆபீஸுக்குப் போய்ச் சேர்கிறேன்" என்றான் அமரநாத்.

இரண்டுபேரும் காரில் ஏறிக் கொண்டு அநாதை விடுதிக்குச் சென்றார்கள். அமரநாத் சொன்னபடியே சித்ராவை அங்கே இறக்கி விட்டு விட்டுத்தான் ஆபீஸுக்குப் போனான்.

இருபத்தாறும் அத்தியாயம்

கவலை தீர்ந்தது!

அன்று சாயங்காலம் கொஞ்சம் சீக்கிரமாகவே அமரநாதன் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்தான். அநாதை விடுதியிலிருந்து சித்ரா திரும்பி வந்திருப்பாளா அல்லது தான் போய் அழைத்து வரவேண்டுமா என்று சிந்தித்துக் கொண்டே வீட்டு வாசலில் காரை நிறுத்தினான். ஒருவேளை திரும்பி வந்திருந்தால் அந்த ஸ்திரீயைப் பற்றிய விவரம் தெரிந்து கொண்டு வந்திருப்பாளா என்றும் எண்ணமிட்டான்.

வீட்டு வாசலில் வந்து கார் நின்ற மறு நிமிடமே சித்ரா வாசற் பக்கம் வந்தாள். அவளுடைய முகம் குதூகலத்தினால் மலர்ந்திருந்தது.

"சித்ரா! சித்ரா! முழுகிப் போய் விடாதே! மெதுவாகக் கரை யேறி விடு! நான் வேணுமானால் கை கொடுத்துத் தூக்கி விடட்டுமா?" என்று அமரநாத் கேட்டான்.

"என்ன இப்படித் திருவாய் மலர்ந்து திரு உளறல் உளறுகிறீர்கள்?" என்று கேட்டாள் சித்ரா.

"நான் ஒன்றும் உளறவில்லை. உன்னைப் பார்த்தால் ஆனந்தக் கடலில் மூழ்கித் தத்தளிப்பவளைப் போலத் தோன்றியது. கை தூக்கிக்



கரை சேர்க்கலாம் என்று பார்த்தேன்!" என்றான் அமரநாத்.

"ஆனந்தத்துக்குக் காரணம் இருக்கிறது!" என்றாள் சித்ரா.

"பின்னே இல்லாமல் இருக்குமா? அந்தப் பெண் இன்னவள் என்று கண்டுபிடித்து விட்டாயாக்கும்!"

"ஆமாம்; நான் சொன்னதுதான் உண்மை என்று ஆயிற்று. இருக்கவே இருக்காது என்று நீங்கள் சாதித்தீர்களே?"

"உன்னுடைய வாக்குப் பொய்த்துப் போகுமா என்ன? தெய்வத்தைத் தொழாமல் கணவனைத் தொழுது அழுகிறவள் பெய்யெனப் பெய்யும் மழை என்று திருவள்ளுவரே சொல்லியிருக்கிறார்! அப்படியிருக்க, உன் வாக்குப் பலிப்பதற்குக் கேட்பானேன்?"

இருவரும் வீட்டின் முன்புறத்து ஹாலுக்குள் நுழைந்தார்கள். அங்கே ஒரு சோபாவில் ஒரு பெண் உட்கார்ந்து ஒரு கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து அமரநாத் திடுக்கிட்டான்.

இவர்கள் வருவதைப் பார்த்ததும் அந்தப் பெண் எழுந்து அவசரமாய் அருகிலிருந்த மச்சுப்படியில் ஏறி மேலே சென்றாள்.

அவள் மறைந்ததும், "சித்ரா! இவள்தான் சீதாவா? இன்னார் என்று கண்டுபிடித்ததோடல்லாமல் இங்கே அழைத்துக்கொண்டு வந்துவிட்டாயா?" என்றான் அமரநாத்.

"ஆமாம்; நான் ஒரு காரியத்தில் முனைந்தால் அதை முடிக்காமல் வந்து விடுவேனா?" என்றாள் சித்ரா.

"அதைப் பற்றிக் கேட்பானேன்? நீ ஒரு காரியத்திலும் முனையாமல் இருக்கவேண்டுமே என்றல்லவா நான் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன்? இப்போது பார்! இந்தச் சனியனை இங்கே அழைத்துக்கொண்டு வந்துவிட்டாய்!"

"தயவு செய்து தங்கள் திருவாயைக் கொஞ்சம் மூடிக் கொள்ளுங்கள்."

"அம்மணி! மன்னிக்க வேண்டும். இந்த தேவலோகத்துப் பெண்ணரசியைத் தேடிப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்களே? என்ன நோக்கத்துடன்? அதைத் தயவு செய்து சொல்லவேண்டும்."

"நோக்கம் என்ன வந்தது? இது என்ன கேள்வி? நம்ம பக்கத்துப்

பெண். உங்கள் அருமைச் சிநேகிதர் சூரியாவின் அத்தங்காள். அவனை அழைத்து வராமல் அநாதை விடுதியிலேயே விட்டுவிட்டு வருகிறதா?"

"விட்டு விட்டு வந்தால் என்ன? அன்றியும், இவள்தான் சீதா என்பது என்ன நிச்சயம்?"

"நிச்சயந்தான்; என்னுடைய ஊகம் பிசகாய்ப் போகுமா? இவளே ஒப்புக் கொண்டும் விட்டாள்."

"இத்தனை நாள்,—ஒருவாரமாக,—ஊர் பேர் சொல்லாதவள் இன்றைக்கு எதனால் இப்படி என்று ஒப்புக் கொண்டாள்?"

"அதற்கு ஒரு யுக்தி செய்தேன்."

"அது என்ன அதிசய யுக்தி என்பதை அடியேன் அமரநாதன் தெரிந்து கொள்ளலாமா?"

"ஆகா! பேஷாய்த் தெரிந்து கொள்ளலாம். அமரநாதர் தெரிந்து கொள்ள முடியாத இரகசியம் சித்ராவிடம் என்ன இருக்க முடியும்? தாங்கள் என்னை அநாதைப் பஞ்ச நிவாரண விடுதியில் விட்டுவிட்டுப் போனீர்கள் அல்லவா? உடனே போய்ச் சீதாவிடம் பேசிப் பார்த்தேன். வழக்கம் போலவே அவள் முகங் கொடுத்துப் பேசவில்லை. குழந்தைகளுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். பக்கத்தில் நின்ற சௌதராணி அம்மாளிடம் நான் சென்று பேசினேன். பேச்சின் மத்தியில் சீதாவின் காது கேட்கும்படியாகச் சூரியாவைப் பற்றிய செய்தியைச் சொன்னேன். சூரியா என்ற வார்த்தை காதில் விழுந்ததும் சீதா திடுக்கிட்டதைப் பார்த்துக் கொண்டேன். சற்று நேரத்துக்கெல்லாம் சீதா என்னைத் தேடிக்கொண்டு வந்தாள். தலைவி அம்மாளிடம் என்ன சொன்னேன் என்று கேட்டாள். அவளிடமும் சூரியாவைப் பற்றிய செய்தியைத் திருப்பிச் சொன்னேன். அவளுடைய முகபாவத்தைக் கவனித்துக்கொண்டே சொன்னேன். கடைசியாக, 'இதைப் பற்றி உனக்கென்ன இவ்வளவு ஆவல்? நீ யார்?' என்று கேட்டேன். அப்போதும் சொல்லாமல் சும்மா இருந்தாள். 'என்னிடம் ஏன் மறைக்கிறாய்? நீதானே சீதா?' என்று நான் சட்டென்று கேட்டதும் அவளுக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது. பிறகு எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டுவிட்டாள். அதன்



பேரில்தான் வீட்டுக்கு வரும்படி கூப்பிட்டேன். முதலில் வருவதற்கு மறுத்தான். அநாதை விடுதியில் குழந்தைகளுக்குப் பணிவிடை செய்வது தனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது என்று சொன்னான். நாங்கள் எல்லாரும் வாரத்துக்கு இரண்டு நாள் முறை போட்டுக்கொண்டு சேவை செய்வது போல் அவனும் செய்யலாம் என்று சொல்லி வற்புறுத்தி அழைத்துக் கொண்டு வந்தேன். எப்படி என்னுடைய யுக்தி?''

"கேட்பானேன்? நியாயமாக இந்திய சர்க்காரின் சி. ஐ. டி. இலாக்காவில் நீ உத்தியோகம் பார்க்க வேண்டும். உன்னைப்போன்ற சாமர்த்தியசாலிகள் அந்த இலாக்காவில் இல்லாதபடியால்தான் யு. ஜி.க்களையெல்லாம் பிடிக்கமுடியாமல் திண்டாடுகிறார்கள்!''

"யு. ஜி.க்கள் என்றால் என்ன?''

"யு. ஜி. என்றால் தெரியாதா? 'அண்டர் கிரௌண்ட்' என்று அர்த்தம். அதாவது பூமிக்கு அடியில் இருப்பவர்கள். போலீஸாரிடம் அகப்படாமல் மறைந்திருந்து புரட்சி வேலை செய்பவர்களுக்கு அந்தப் பட்டம் இப்போது வழங்கி வருகிறது. இந்தச் சாலைக்கு அடுத்த சாலையின் மூலையில் சில போலீஸாரும் சி. ஐ. டி.காரர்களும் நின்றுகொண்டிருப்பதை நான் வரும் போது பார்த்தேன். அவர்கள் யாரோ ஒரு யு. ஜி.யைத்தான் தேடிக்கொண்டிருக்கிறார்களாம்.''

"அப்படியா? ஒரு வேளை.........''
என்று ஆரம்பித்த சித்ரா சட்டென்று நிறுத்தினாள்.

"ஒரு வேளை என்ன?''

"ஒன்றுமில்லை. நீங்கள் வந்து அந்தப் பெண்ணைப் பார்த்துப் பேசுகிறீர்களா? அவள் இங்கே வருவதற்கே ரொம்பவும் தயங்கினாள். இந்த வீட்டு ஆண்பிள்ளை என்ன செய்வாரோ என்னமோ என்று முணு முணுத்தாள். 'அதெல்லாம் இந்த வீட்டில் ஆண்பிள்ளை ஒருவரும் இல்லை. கேவலம் ஒரு ஹஸ்பெண்டுதான் இருக்கிறார்!' என்று சமாதானம் சொல்லி அழைத்துக்கொண்டு வந்தேன். நீங்கள் அதைக் கொஞ்சம் உறுதிப்படுத்தினால் நல்லது. மேலே போகலாம்; சற்று வருகிறீர்களா?''

"வேண்டாம், வேண்டாம்! அந்த அம்மாள் தான் என்னைக் கண்டதும் வாரிச் சுருட்டிக்கொண்டு மேலே போய்விட்டாளே? அவளை எதற்காக இப்போது தொந்தரவு செய்ய வேண்டும்?'' என்றான் அமரநாத்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் வேண்டுமானால் மேலே போய்க் கேட்டுக் கொண்டு வருகிறேன்!'' என்று சொல்லிக்கொண்டே சித்ரா மச்சுப் படிகளில் குதித்தேறிச் சென்றாள்.

அங்கே சீதாவிடம் போய்ச் சித்ரா தன் புருஷனை அழைத்து வரட்டுமா என்று கேட்டதும் "வேண்டாம், சித்ரா! இப்போது வேண்டாம்! நாளைக்கு ஆகட்டும்!'' என்றாள் சீதா.

சித்ரா ஏமாற்றத்துடன் "ஏன் இப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டாள்.

"இன்றைக்கு மனது சரியாக இல்லை. லலிதாவின் கடிதத்தைப் படிக்கச் சொல்லிக் கொடுத்தாய் அல்லவா? அதைப் படித்தபோது பழைய ஞாபகங்கள் எல்லாம் வந்தன. அதனால் மனது நிம்மதியை இழந்திருக்கிறது. உன்னுடைய கணவரிடம் நாளைக்குப் பேசுகிறேன்!'' என்றாள் சீதா.

இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோதே கீழ்க்கட்டில் தடதட வென்று மனிதர்கள் பிரவேசிக்கும் சத்தம் கேட்டது. கால் பூட்ஸுகளின் சத்தம் அதிகமாயிருந்தது. இப்படித் தடபுடலாய் வருகிறவர்கள் யாராயிருக்கும் என்ற எண்ணத்துடன் சித்ரா மச்சுப் படிகளில் இறங்கி வந்தாள். பாதிப் படிகள் இறங்கியதும் கீழே போலீஸ்காரர்களும் சி. ஐ. டி. காரர்களுமாய் வந்து நிற்பதைப் பார்த்தாள்; சித்ராவின் தலை கிறு கிறு வென்று சுழன்றது. மச்சுப் படிகளின் விளிம்புச் சட்டத்தைப் பிடித்துக் கொண்டு சமாளித்து நின்றாள்.

வந்திருந்தவர்களில் தலைவர் என்று காணப்பட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் அமரநாத்திடம் பின்வருமாறு சொல்லிக் கொண்டிருந்தார் :—"இந்த யு. ஜி. பெண்பிள்ளை மிக கெட்டிக்காரி. ஒரே ஆசாமி சீதா என்றும் தாரிணி என்றும் இரண்டு பெயர்கள் வைத்துக்கொண்டு புது டில்லிப் போலீஸை ஏமாற்றி வந்திருக்கிறாள் இப்போதுதான் பாருங்களேன்.

அநாதை விடுதிக்கு நாங்கள் வரப் போகிறோம் என்று தெரிந்துகொண்டு அரை மணிக்கு முன்னால் உங்கள் மனைவியை ஏமாற்றி இவ்விடத்துக்கு அழைத்துவரச் செய்திருக்கிறான்! நீங்கள் வரவேண்டும் என்றுதான் இத்தனை நேரமும் காத்துக் கொண்டிருந்தோம்.''

இதற்கு அமரநாதன், "இன்ஸ்பெக்டர்! நீங்கள் ஏதோ ஒரு பெரிய தவறு செய்கிறீர்கள். இந்த ஸ்திரீ யு. ஜி. அல்ல; புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவளும் அல்ல!'' என்றான்.

"உங்களுக்கு எப்படித் தெரியும், மிஸ்டர் அமரநாத்! எங்களிடம் வேண்டிய அத்தாட்சிகள் இருக்கின்றன. போட்டோப் படம் கூட இருக்கிறது!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

பின்னர் காரியங்கள் வெகு துரிதமாக நடந்தன. அமரநாத் மேலே ஏறி வந்து மச்சுப் படியில் பாதி வழியில் நின்று சித்ராவிடம் விஷயத்தைச் சொன்னான். அவள் ரொம்ப அங்கலாய்த்தாள். "இந்த அக்கிரமத்தை நீங்கள் தடுக்க முடியாதா? உங்களுடைய செல்வாக்கு எங்கே போயிற்று? இந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கும் உங்களுக்கும் ரொம்ப சிநேகிதமாயிற்றே!'' என்றாள்.

"போலீஸ்காரர்கள் விஷயம் உனக்குத் தெரியாது. அவர்களுக்கு 'டியூடி' என்று வந்துவிட்டால் சிநேகிதர்களுமில்லை; பந்துக்களும் இல்லை. ஈவிரக்கம் கிடையவே கிடையாது. 'லா மிஸராப்ளே' கதையில் வருகிற போலீஸ்காரனை நினைவிருக்கிறதல்லவா? அந்தமாதிரிதான் அநேகமாக எல்லாப் போலீஸ்காரர்களும்! ஏதோ யு. ஜி. தங்குவதற்கு இடங் கொடுத்ததற்காக நம்மையும் சேர்த்துப் பிடிக்காமல் விடுகிறார்களே, அதுவே பெரிது. இப்போது உன் சிநேகிதியை அனுப்பி வைக்க வேண்டியதுதான். பின்னால் கூடுமான முயற்சியெல்லாம் செய்து பார்ப்போம். 'ஹேபியஸ் கார்ப்பஸ்' வழக்கு வேண்டுமானாலும் நடத்துவோம்!'' என்றான் அமரநாத்.

சித்ரா கண்ணுங் கண்ணீருமாய் மேலே ஓடிப் போய்ச் சீதாவிடம் விஷயத்தைச் சொன்னாள்.

முதலில் விஷயம் அவ்வளவு தெளிவாக விளங்கவில்லை சீதாவுக்கு. நன்றாகப் புரியும்படி தெரிந்து கொண்டதும் சீதாவின் உள்ளத்திலிருந்து ஒரு பெரிய பாரம் நீங்கியது போலிருந்தது. என்ன செய்வது, எங்கே போவது என்கிற சங்கடமான பிரச்னைகள் எல்லாம் இனிமேல் இல்லை! கடவுளே பார்த்துத்தான் தனக்கு இத்தகைய சகாயத்தை அனுப்பியிருக்கிறார்! சிறைச்சாலைக்குள் போய் நிம்மதியாயிருக்கலாம். படிப்பும் அந்தஸ்தும் வாய்ந்த எத்தனையோ பெண்மணிகள் இப்போது சிறைச்சாலைகளில் பாதுகாப்புக் கைதிகளாயிருக்கிறார்கள். நாம் இருப்பதற்கு என்ன வந்தது?

குழந்தை வஸந்தியை இப்போதைக்குப் பார்க்க முடியாது. அதுவும் ஒரு நல்லதற்குத்தான். குழந்தையைப் பார்த்து என்னத்தைச் சொல்வது? அப்பாவைப் பற்றிக் கேட்டால் என்ன பதில் கூறுவது? பெத்தியைப் பாட்டி நன்றாய்ப் பார்த்துக் கொள்வாள். கண்ணும் கருத்துமாக வளர்ப்பாள். அதுவே போதும். எப்படியாவது குழந்தை சௌக்கியமாயிருந்தால் சரி. நல்ல காலம் பிறந்து கடவுள் கூட்டி வைக்கும்போது பார்த்துக் கொள்ளலாம்.

கொஞ்சங் கூடத் தயக்கமில்லாமல் சீதா கீழே இறங்கி வந்து போலீஸாரிடம் தன்னை ஒப்புக் கொடுத்தாள்.

போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் அமரநாத், சீதா உயர் குடும்பப் பெண் என்றும், அவளை மரியாதையாக நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். போலீஸ் இன்ஸ்பெக்டர் அதற்கிணங்கி வாக்குக் கொடுத்தார்.

சீதா வீட்டை விட்டுப் புறப்படும் தறுவாயில் சித்ரா கண்ணுங் கண்ணீருமாக அவளைக் கட்டித் தழுவிக் கொண்டு, "சீதா! கவலைப்படாதே! நான் இவரைக் கொண்டு 'ஹேபியஸ் கார்ப்பஸ்' வழக்குப் போடச்சொல்லி உன்னை விடுதலை செய்கிறேன்! சீக்கிரம் திரும்பி வந்துவிடுவாய்!'' என்றாள்.

"அப்படியெல்லாம் ஒன்றும் செய்ய வேண்டாம், சித்ரா! கடவுளே பார்த்து எனக்கு இந்த சகாயத்தைச் செய்திருக்கிறார். நீ என்னைப் பற்றிக் கவலைப்படாமலிரு! அதுதான் எனக்கு வேண்டியது!'' என்றாள் சீதா.

மூன்றாம் பாகம் முற்றியது.



அணுவைப் பற்றி நமக்கு இப்போது அதிகமாக விஷயம் தெரியவருகிறது. அணு ஒன்றிலுள்ள சக்தி அளவிட முடியாத தென்றும் அந்த சக்தியைக் கொண்டு உலகத்திலுள்ள மலையெல்லாம் தூட்டலாம் என்றும் சொல்லுகிறார்கள் கணித சாஸ்திர நிபுணர்கள்.

ஒரே ஒரு அணுவின் சக்தி இப்படியானால் ஆன் போன்ற பெரிய வஸ்துவிலுள்ள அணுக்களின் சக்தியைப் பற்றிக் கணக்கிட்டுச் சொல்ல முடியாதுதானே!

அப்படியானால், பேரண்டம் முழுவதிலுமுள்ள சக்தியைப் பற்றிச் சொல்லமுடியுமா?

பேரண்டத்திலுள்ள சக்திதான் எல்லா உயிர்களையும் ஆட்டுகிறது. நம்மையுமே ஆட்டி வைக்கிறது.

அந்த சக்திக்கு எதிர் நிற்க யாரும் இல்லை.

இந்த உண்மையைப் பிரஹலாதன் தன்னுடைய தந்தையாகிய இரணியனுக்கு விளக்கிக் காட்டினான்.

கடவுள் தத்துவம் ஒரு தூணிலும் இருப்பதாகச் சொன்னான். தூணைப் பிளந்து கொண்டு நரசிம்ம மூர்த்தியாக வெளி வந்தது கடவுள் சக்தி என்று புராணம் சொல்லும்.

* * *

பக்தர்கள் கடவுளின் அரும் பெரும் சக்தியை நரசிம்ம மூர்த்தியாகப் பாவித்து பக்தி செய்து வந்திருக்கிறார்கள். இந்த முறையில் தியானிப்பது காரணமாக மனதுக்கு வேறு எந்த விதத்திலும் கிடைக்காத ஒரு தைரியம் உண்டாகிறது.

'அச்சமில்லை! அச்சமில்லை!' என்று பாடுவதற்கு இடம் இருக்கிறது நரசிம்ம மூர்த்தியின் பக்தி தத்துவத்தில்.

* * *

கவியரசர் கம்பர் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போக நேர்ந்தது.

போகும் வழியில் மலைப்பாங்கான காட்டின் வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார். வழியில் அடர்த்தியாய் இருந்த ஒரு புதரைச் சுற்றி மேலே நடந்தார்.

அவருடைய உருவம் தெரிந்த மாத்திரத்தில் படுத்துக் கிடந்த ஒரு புலியானது அப்படியே எழுந்தது. வாலை முறுக்கிக் கொண்டு அவர் மேல் பாய எத்தனித்தது.

கம்பர் புலியைப் பார்த்ததும் அங்கேயே நின்று கொண்டார். அபூர்வமான ஒரு தைரியம் அவருக்கு உண்டாயிற்று.

புலியைப் பார்த்துக் கம்பர் பேசுகிறார்:

வெங்கண் சிவந்து
வெடிவால் முறுக்கி
வெகுண் டெழுந் து
அங்கம் பிளக்க
வரும்புலி யே அன்(று)
இரணிய னைப்
பங்கம் படப்பட
வள் உகி ரால் உரம்
பற்றி உண் ட
சிங்கம் இருக்கின்றது
கண்டு கொள்வாய் என்
சிந்தையுள் ளே!

[வெடிவால்: நீண்டவால்; அங்கம் பிளக்க வரும் புலியே; என்னுடைய உடல் உறுப்பை யெல்லாம் பிளக்க வருகின்ற புலியே; அன்று: பூர்வமான ஒரு யுகத்தில்; பங்கம் படப்பட: சின்ன பின்னப் படும்படியாக; வள் உகிரால் உரம்பற்றி உண்ட: கூர்மையான நகத்தினால் (இரணியனது) மார்பைக் கீறி இரத்தத்தைக் குடித்த; சிங்கம் இருக்கின்றது; நரசிம்ம மூர்த்தி இடைவிடாது இருந்து கொண்டு இருக்கிறார்! எங்கே? என் இதயத்திலே.]

"புலியே! நீ வாலை முறுக்கிக் கொண்டு கோபத்தினால் சிவந்த கண்களினால் என்னைப் பார்த்துக் கொண்டு வெகு ஜோராகத்தான் வருகிறாய்! என்னுடைய உடலைப் பிளப்பதற்கு உன் நகங்களையும் நீட்டிக் கொண்டு கோரைப் பல்லைக் காட்டிக் கொண்டு பாய்ந்து வருகிறாய்! ஆயினும் உன்னால் என்னை என்ன செய்ய முடியும்? உன்னைவிடப் பலம் பொருந்திய சிங்கம் ஒன்று என்னுடைய நெஞ்சத்தில் இருக்கிறதே! அது மகா பலசாலியாகிய இரணியனை நகங்களினால் கிழித்துக் கொன்ற நரசிங்கம் ஆயிற்றே? அதனிடம் உன் கைவரிசை செல்லுமா?" என்று புலியைப் பார்த்துக் கேட்கிறார் கவிஞர்.

பக்தியினால் கிடைக்கக் கூடிய நெஞ்சத் துணிவைக் கம்பரின் பாடல் வெகு அழகாக நாடகப் பண்புடன் எடுத்துக் காட்டுகிறது.

செலாவணி அதிகாரியின் சில்லறை வேலை

ரஜனி

கொழும்பு, பெப். 28.

இலங்கைச் செலாவணி இலாகா தலைவர் பிறப்பித்திருக்கும் புதிய உத்தரவுகள் அப்படியே அமுல் நடத்தப்படுமானால் இங்குள்ள இந்திய இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் இந்தியரிடையில் தொழில் நடத்துவதை அறவே நிறுத்திக்கொள்ள வேண்டியதுதான். அந்த உத்தரவுகள் எவ்வளவு அக்கிரமமானவை என்பதைக் கொழும்பிலுள்ள ஓரியண்டல் இன்ஷூரன்ஸ் கம்பெனியின் தலைவர் ஸ்ரீ வி. ஆர். ராஜன் செலாவணி இலாகாத் தலைவரிடம் எடுத்துக் கூறினார். அதன் பயனாக உத்தரவுகளில் சில மாறுதல்கள் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கிருக்கும் பல இந்திய இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் ஒன்று சேர்ந்து ஸ்ரீ ராஜன் தலைமையில் ஒரு சங்கத்தையும் நிறுவிக் கொண்டு சங்கத்தின் மூலமாகத் தீவிரமான நடவடிக்கை எடுத்து வருகின்றன.

உத்தரவுகள் அநியாயமானவை என்பது ஒருபுறமிருக்க, அவை திடீர் திடீரென்று மாறுவதுதான் பொதுஜனங்களுக்கும் கம்பெனிகளுக்கும் அதிகக் கவலையைக் கொடுத்துள்ளது. உடல் சோர அந்நிய நாட்டிலே வேலை செய்யும் இந்தியத் தொழிலாளரும் மற்ற இந்தியரும் அந்திய காலத்தை நினைத்தே இன்ஷூர் செய்கிறார்கள். அவர்களுடைய அரசியல் உரிமைகள் பறிபோகும் சமயத்தில், அந்திய காலத்திலே இன்ஷூர் செய்த பணத்தையும் தாய்நாட்டில் பெற முடியாதென்றால் எப்படி நிம்மதியுடன் இருக்க முடியும்?

இன்ஷூர் பாலிஸி காலம் பூர்த்தியானதும் இந்தியாவில் பணம் செலுத்தவேண்டும் என்று பாலிஸியில் குறிப்பிடுவதாயிருந்தால் இன்ஷூர் செய்து கொள்ளுகிறவர் "நான் இந்தியன், இலங்கைப் பிரஜையல்ல" என்று ஒரு 'டிக்ளரேஷன்' எழுதிக் கொடுக்க வேண்டுமென்றும், அப்படி எழுதிக் கொடுப்பவர்களே இன்ஷூர் செய்யலாமென்றும் செலாவணி அதிகாரி சென்ற மாதம் ஒரு உத்தரவு பிறப்பித்திருந்தார். அந்த உத்தரவை அனுசரித்து இந்திய இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் பல்லாயிரக்கணக்கான 'டிக்ளரேஷன்' பத்திரங்களை அச்சடித்தன. நூற்றுக் கணக்கான புதிய பாலிஸிகளைச் சேர்த்தன. இப்பொழுது அவையெல்லாம் செல்லாதென்றும் தன்னைக் கேளாமல் இந்தியாவில் பணம் செலுத்தக்கூடிய பாலிஸிகளைச் சேர்க்கக் கூடாதென்றும் செலாவணி அதிகாரி திடும்பிரவேசமாக ஒரு உத்தரவைத் தூக்கிப் போட்டிருக்கிறார். அவருடைய பழைய உத்தரவை அனுசரித்து வழங்கிய பாலிஸிகளின் கதியும் அவைகளுக்குக் கட்டிய 'பிரீமியம்' தொகையின் கதியும் என்ன ஆவது? இந்தியாவில் பணம் பெறுவதில் கஷ்டம் இருக்கிறதென்றால் எத்தனை பேர் இன்ஷூர் செய்துகொள்ளவும் பழைய பாலிஸிகளுக்குப் பணம் செலுத்தவும் முன் வருவார்கள்?

கவலைப்பட வேண்டாம்

செலாவணி அதிகாரிக்கு எழுதி அவரது அனுமதியைப் பெற்ற பிறகு இன்ஷூர் செய்வதாயிருந்தால் இன்ஷூரன்ஸ் தொழிலே நசித்துப் போய்விடும்.

இதில் ஒரு பெரிய தமாஷ் என்னவென்றால் செலாவணி இலாகாவில் இன்ஷூரன்ஸ் விஷயங்களைக் கவனிக்கும் உத்தியோகஸ்தருக்கு இன்ஷூரன்ஸ் தொழிலைப் பற்றி ஒன்றுமே தெரியாது!

நிற்க, இன்ஷூரன்ஸ் செய்து கொண்டவர்கள் வீணாகப் பீதியடைகிறார்களே தவிர, உண்மையில் எல்லாச் சங்கடங்களும் கம்பெனிகளுக்குத்தான்; பொதுஜனங்களுக்கில்லை. பாலிஸியின் பணம் இந்தியாவில் செலுத்தப்பட வேண்டுமென்று பாலிஸியில் குறிப்பிடப்பட்டிருந்தால் இலங்கைச் செலாவணி இலாகா என்ன உத்தரவு போட்டாலும் இந்தியாவிலுள்ள கம்பெனியின் தலைமைக் காரியாலயங்கள் இந்தியாவில் பணம் செலுத்தியே தீரவேண்டும். இந்த ஒப்பந்தப் பொறுப்பைக் கம்பெனிகள் மீறவோ மாற்றவோ முடியாது. மீற முயற்சித்தால் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து பணத்தை வசூலிக்கலாம். எனவே, ஏற்கனவே இன்ஷூர் செய்து கொண்டவர்கள் கவலைப் பட நியாயமே இல்லை.

ஆற்றில் வந்த அழகி

ஏ. கே. பட்டுசாமி

நாலு நாட்களாக விடாமல் பெய்து கொண்டிருந்த மழை அப்போதுதான் சற்று ஓய்ந்திருந்தது. ஆனாலும் வானத்தில் திரண்டிருந்த மேகக் குவியல்கள் "இதோடு விட்டுவிடப் போவதில்லை!" என்று எச்சரிப்பது போல் இன்னும் உறுமிக் கொண்டேயிருந்தன. எங்கும் ஒரே வெள்ளக் காடு. பொன்னாற்றில் அன்று நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து காணப்பட்டது. கரைபுரண்டு சுழித்துக் கொண்டு வேகமாக ஓடிய வெள்ளம், செடி கொடிகளையும் மரக் கிளைகளையும் அடித்துச் சென்று கொண்டிருந்தது.

சிவானந்தம் ஆற்றங்கரையில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். படகுக்காரப் பக்கிரியும் அவனோடிருந்தான்.

"என்ன வைத்தியரே, இந்த மாதிரி மழை பேஞ்சு எத்தனை வருசமாச்சு! ஒங்க அப்பாரு செத்துப் போன வருசம் அடிச்ச மழை மாதிரியல்ல இருக்குது!" என்றான் பக்கிரி.

"வைத்தியர்" என்றது சிவானந்தத்தைத் தான். அவனது பாட்டனார் காலம் முதல் வைத்தியம் அவர்களது பரம்பரைத் தொழில். அவனது தகப்பனார் வைத்தியலிங்கம் பிள்ளை முறிந்து போன எலும்புகளைக்கூட ஒட்ட வைத்து விடுவார். விஷ சுரத்தை ஒரே வேளை மருந்தில் இறக்கிவிடக்கூடிய சாமர்த்தியசாலி என்று பெயர் பெற்றவர்.

தந்தை இறந்த வருடமே தாயையும் இழந்த சிவானந்தம் தன் ஜீவனத்திற்கு வைத்தியத்தையே நம்பியிராமல் ஒரு சிறு கடையையும் வைத்துக் கொண்டான். படகுத் துறைக்கு அருகாமையில் கடை இருந்தமையால் வியாபாரம் சுமாராக நடந்து வந்தது.

சிவானந்தத்தின் கண்கள் தூரத்தில் எதையோ உற்று நோக்கிக் கொண்டிருந்தன. அவனது நெற்றி சுருங்கியது.

"பக்கிரி! அதோ பார், தூரத்தில்! அது என்ன, தெரியுதா?"

பக்கிரி ஆவலோடு உற்று நோக்கினான். அது ஒரு சிறு படகு. அந்த உக்கிரமான வெள்ளத்தில் அது சிக்கிக்கொண்டு தத்தளித்தது. எந்த நிமிஷமும் கவிழ்ந்துவிடக் கூடியதுபோல் அந்தப் படகு நிலைக்காமல் ஆடிக்கொண்டே வந்தது.

"பயமில்லைங்க; அது நம்ம சாமிக் கண்ணுவின் படவுங்க!" என்றான் பக்கிரி.

சுமார் அரை மணி நேரத்திற்குப் பிறகு கரையை அடைந்த அந்தப் படகில் ஒரு யௌவன மடந்தை வீற்றிருந்தாள். சொட்டச் சொட்ட நனைந்திருந்த ஆடை அவளது பொன்னிற உடலோடு ஒட்டிக் கொண்டிருந்தது. சிவானந்தம் அவளது அழகைக் கண்டு பிரமித்தான்.

"வைத்தியரே, ஒங்களைத்தான் தேடிக் கிட்டு வந்திருக்காங்க! பாவம், இந்தப் பெரியவரு தென்னை மரத்திலேருந்து விழுந்து காலை முறிச்சுகிட்டாராம்!" என்றான் படகுக்கார சாமிக்கண்ணு.

"நீங்கதான் வைத்தியரா?" என்று ஆவலோடு கேட்ட அந்த யுவதி, சிவானந்தத்தை நிமிர்ந்து நோக்கினாள். படகில் கிடத்தியிருந்த கிழவனைக் கவனித்த சிவானந்தம், "ஆமாம், இந்தப் பெரியவர் யார்?" என்று கேட்டான்.

"என் தகப்பனாருங்க!" என்றாள் அவள்.

படகோட்டிகள் அந்தக் கிழவனை அருகிலிருந்த சிவானந்தத்தின் வீட்டுக்குத் தூக்கிச் சென்றனர்.

அவர்களுடைய ஊர் ஆற்றின் அக்கரையிலிருந்தது. அவளுக்கு அந்தக் கிழவன் தான் தாய், தந்தை, சுற்றம் எல்லாம்.

சிவானந்தம் கிழவனின் உடல் நிலையைப் பரிசோதித்தான். அவன் ஸ்மரணையற்றுக் கண்மூடிக் கிடந்தான். இடது தொடை யெலும்பு முறிந்து போய் ஒரே வீக்கமாக வீங்கியிருந்தது. உடம்பின் பல பாகங்களில் காணப்பட்ட இரத்தக் காயங்களுக்குக் கட்டுகள் போடப்பட்டிருந்தன. அடி பட்ட அதிர்ச்சியினாலும் மழையில் நனைந்ததாலும் ஜுரம் வேறு கனலாகக் காய்ந்து கொண்டிருந்தது.

முதலாவதாக, அந்தக் கிழவனின் ஈர உடையை மாற்றிவிட்டுத் தோட்டத்துக்குச் சென்று பச்சிலைகளைப் பறித்து வந்தான் சிவானந்தம். கிழவனின் நிலை வைத்திய சிகிச்சை செய்யும் கட்டத்தைத் தாண்டி விட்டது என்று அவனுக்குத் தெரியும். என்றாலும் அதை அந்தப் பேதைப் பெண்ணிடம் எப்படித் தெரிவிப்பது? பச்சிலைகளை

அரைத்துத் துடையில் கட்டுப் போட்டு விட்டு, ஜுரத்திற்கும் மருந்து புகட்டினான்.

விளக்கு வைத்து ஒரு நாழிகையாயிற்று. படகோட்டிகள் இருவரும் முன்னமேயே போய்விட்டனர். அவள் சமையலறையில் வேலையாயிருந்தாள். அவனது மனதில் விவரிக்க முடியாத உணர்ச்சிகள் சூழ்ந்து கொண்டிருந்தன. வாசற்படி யருகில் காலடியோசை கேட்டது. கதவருகில் மருண்ட பார்வையோடு அவள் நின்று கொண்டிருந்தாள்.

"என்ன வேணும்?"

"ஒன்றுமில்லை, இந்த வீட்டில் உங்களைத் தவிர வேறே ஒருத்தரும் இல்லையா?"

சிவானந்தம் அவளுக்கு என்ன பதில் கூறலாமென்று யோசித்துக் கொண்டிருக்கையில் கிழவனின் முனகல் கேட்கவே இருவரும் கூடத்திற்கு விரைந்தனர்.

2

நள்ளிரவு. குளிர்க் காற்று 'சிலீர், சிலீர்' என்று அறைந்து கொண்டிருந்தது. மழை காலத்து மண்டூகங்கள் 'கொர கொர' வென்று கவி பாடிக் கொண்டிருந்தன. ஆற்று வெள்ளப் பெருக்கின் ஆர்ப்பரிப்பு பயங்கரமாக ஒலித்துக் கொண்டிருந்தது. சிவானந்தம் குளிரில் விறைத்துப் போய் வாசல் திண்ணையில் முடக்கிக் கொண்டு படுத்திருந்தான். எவ்வளவு முயன்றும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அந்தப் பெண்ணின் அழகிய முகமும் அவளது கேள்வியும் மாறி மாறித் தோன்றி அவனது மனதை அலைத்தன. அடிக்கடி அவளது தகப்பன், "சரஸ்வதி!......அம்மா.......!" என்று முனகுவதும், அவள் "அப்பா! அப்பா!" என்று துக்கம் தோய்ந்த தீனக் குரலில் அரற்றுவதும் அப்போதுதான் சிறிது ஓய்ந்திருந்தது.

மேற்கொண்டு கிழவனுக்கு வேறு ஏதாவது மருந்து கொடுக்கலாமா என்று சிவானந்தம் யோசிக்கத் தொடங்கினான். சரஸ்வதியைப் பற்றி நினைக்க நினைக்க அவனுக்குப் பரிதாபமாயிருந்தது. ஒருவேளை கிழவன் இறந்து போய்விட்டால் ......?


வாசல் கதவு திறந்தது.

"என்னங்க, கொஞ்சம் வந்து பார்க்கிறீங்களா?"

சிவானந்தம் பரபரப்புடன் எழுந்து உள்ளே சென்றான். கிழவன் கண்களை மலர மலர விழித்துக் கொண்டிருந்தான். சுவாசம் இரைத்து வாங்கிக் கொண்டிருந்தது. கொதித்துக் கொண்டிருந்த உடம்பு திடீரென்று சில்லிட்டுப் போயிருந்தது.

சிவானந்தம் ஒரு சிறு புட்டியிலிருந்த மருந்தை அவனது மூக்கிற்கு நேரே பிடித்தான். சூடுண்டாக்குவதற்காகப் பாதங்களில் தைலத்தைத் தேய்த்தான். நிலைமையைச் சமாளிக்கத் தன் முழு சாமர்த்தியத்தையும் கையாண்டு பார்த்தான். ஆயினும், பொழுது விடிய இரண்டு ஜாமத்திற்குக் கிழவனுடைய மூச்சு அடங்கிவிட்டது.

சரஸ்வதி அழுதாள்; விம்மினாள்; அடித்துக் கொண்டு அலறினாள். சிவானந்தத்தின் பாடு தர்மசங்கட மாகிவிட்டது. அக்கம் பக்கத்தில் வீடுகள் கூடக் கிடையாது. யாரைக் கூப்பிடுவது? தன்னாலானவரையில்



எவ்வளவோ சமாதானம் சொல்லி அவளைத் தேற்ற முயன்றான்.

காலையில் படகுக்காரர்களுடைய உதவியைக் கொண்டு சவம் அடக்கம் செய்யப்பட்டது. சரஸ்வதி பிரமை பிடித்தவள் போலானாள். அன்று பகல் அவளைச் சாப்பிடச் சொல்லி எவ்வளவு வேண்டியும் அவள் மறுத்துவிட்டதுமன்றி, தான் உடனே தன் ஊருக்குத் திரும்பிப் போகவேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாள். சிவானந்தத்திற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவனும் அநாதை; தனியே இருக்கும் அவனுடன் அவளைத் தங்கச் சொல்வதும் தவறாகத் தோன்றியது. எனினும், தந்தையைத் தவிர வேறு உறவினரில்லை யென்று சொன்ன அந்தப் பெண் மட்டும் ஊருக்குப் போய்த் தனியே என்ன செய்ய முடியும்?

ஆகவே, ''ஊரில் உனக்கு யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்டான் அவன்.

''என் ஒன்றுவிட்ட அத்தையம்மா இருக்கிறாங்க; அவங்க கூடத்தான் நான் இருக்கணும்'' என்றாள் அவள்.

''இருந்தாலும் இந்த வெள்ளத்தில் படகு போகாது. வரவர வெள்ளம் அதிகமாகிறதே யொழியக் குறைய வில்லையே!''

''அப்படீன்னா......!''

''அப்படியென்றால் இன்னும் ஒரு வாரத்துக்கு நீ இங்கேதான் இருக்க வேண்டியதாக இருக்கும்.''

அவள் வெறும் வெளியை நோக்கிய வண்ணம் தலையை அசைத்தாள்.

''ஊஹூம்!...அது முடியாது!''

''முடியாதென்றால் வேறு வழியில்லையே!''



''எங்க அப்பாவே செத்துப் போனப்புறம் எனக்கு மாத்திரம் என்ன வச்சிருக்குது? நீங்க படகு ஏற்பாடு பண்ணிவிடுங்க, பாதி வழியிலே கவிழ்ந்தா கவிழ்ந்து போகட்டும்!''

''கவிழ்ந்து போகட்டும் என்று நீ சொல்லிவிட்டால் போதுமா? படகுக்காரர்கள் வந்தால் அல்லவா அந்தப் பேச்சு! ஒரு வாரத்திற்கு ஒன்றும் முடியாது. அதுவும் அது வரை மழை யில்லாமல் இருக்க வேண்டும்!''

அவள் குழந்தைபோல் அழுது கொண்டே, ''பெண் பிள்ளைத் துணையில்லாமல் இந்த வீட்டில் நான் உங்களோடு தனியா இருந்தா நாலு பேர் என்ன சொல்லுவாங்க?'' என்றாள்.

சிவானந்தத்திற்கு என்ன பதில் சொல்லுவதென்று தெரியவில்லை. அவள்பால் இரக்கம் ஒருபுற

பிடிக்கிற நகை!



“ஏன் அம்மாமி! நீங்கள் கையிலே போட்டுக் கொண்டிருக்கிற வளையல் ரொம்பப் பிடிக்கிறதுப்போல இருக்கிறதே!”

“ஆமாம்; எங்க ஆத்துக்காரரை எனக்குப் பிடிக்கிற நகையாக வாங்கிக் கொண்டு வரச் சொன்னேன்; அதுதான் இப்படி வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார்!”

யிருக்க, இருக்கும் சந்தர்ப்பம் தெரிந்தும் கூடப் பிடிவாதம் பிடிப்பதைக் கண்டு சிறிது வருத்தமும் உண்டாயிற்று.

“இதோ பாரு, இதெல்லாம் நாமாக வைத்துக் கொள்ளுகிறதா? வந்த இடத்தில் ஏதோ அசந்தர்ப்ப மாகிவிட்டால் அதற்கு யார் என்ன பண்ண முடியும்? வேண்டுமானால் ஒன்று செய்யலாம். இந்த வெள்ளம் தணிந்து நீ ஊருக்குப் போகிற வரைக்கும் நான் இந்த வீட்டுக்குள்ளே வரவே மாட்டேன்; பயமே வேண்டாம்!” என்று சற்றுப் படபடப்பாகக் கூறிவிட்டு அவளது பதிலுக்காகக் காத்திராமல் ‘விர்’ என்று வெளியே போய்விட்டான் அவன்.

சரஸ்வதிக்குப் பயமாகப் போய்விட்டது. ஏன் அவசரப்பட்டு அப்படிச் சொன்னோம் என்று ஆகிவிட்டது. அன்று பூராவும் அவன் வீட்டிற்கு வரவேயில்லை. நேரம் ஆக ஆக, “இது யாருடைய வீடு? நமக்காகத் தன் வீட்டிற்குள் அவன் வராமல் இருப்பதென்றால் இது என்ன நியாயம்? அவனுக்கு இந்த அசௌகரியமான தொந்தரவைக் கொடுக்க நான் யார்?” என்றெல்லாம் அவளது மனச் சாட்சி அவளைத் துன்புறுத்தியது.

மாலையில் கட்டாயம் வருவானென்ற நம்பிக்கையுடன் எழுந்து சமையல் செய்து முடித்து விளக்கை ஏற்றி வைத்து விட்டு அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். இரவு மணி எட்டுக்கு மேலாகியும் அவன் வரவில்லை.

இரவு சுமார் ஒரு மணியிருக்கும். பிசு பிசுவென்று தூறிக் கொண்டிருந்த தூறல் பலத்துப் பெரு மழையாகக் கொட்டத் தொடங்கியது. பளீர், பளீரென்று வெட்டிய கண்ணைப் பறிக்கும் மின்னல் கொடிகளைத் தொடர்ந்து கேட்ட பயங்கர இடியோசையினால் வானம் எந்த நிமிஷத்தில் சுக்கு நூறாகப் பிளந்து போய்விடுமோ என்று தோன்றியது. வருணனோடு வாயுபகவானும் சேர்ந்து ‘உய்’ என்று ஊளையிடத் தொடங்கினான். மரக் கிளைகள் நிலையின்றி ‘ஹோ’ வென்று கோரமாக அசைந்தாடின. அந்தச் சிறு வீட்டின் ஜன்னல் கதவுகள் பக்ஷிகளின் இறகுகளைப் போலப் படபட வென்று அடித்துக் கொண்டன.

உள்ளே தனியே படுத்திருந்த சரஸ்வதிக்கு மிகவும் பயமாக இருந்தது. பெருத்த இடி இடித்துத் தரை அதிர்ந்தபோதெல்லாம் அவளது இருதயம் படபடத்தது. திடுரென்று வீசிய பலமான காற்றினால் தாளிடப் படாமலிருந்த வாசற் கதவு படீரென்று திறந்து கொண்டது. அங்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்த சிறு விளக்கு பட்டென்று அணைந்து அவளை அந்தகாரத்தில் ஆழ்த்தியது. பளிச்சென்று பார்வையைக் குருடாக்கும் ஒரு மின்னல்! அதைத் தொடர்ந்து ஆயிரம் அதிர் வேட்டுகள் ஒன்று சேர்ந்து வெடித்தது போன்ற ஒரு பயங்கரமான கர்ஜனை! அவள் “அம்மா!” என்று கூச்சலிட்டாள்.

அப்பொழுதுதான் சிறிது நேரத்திற்கு முன் மெதுவாகத் திண்ணையில் வந்து படுத்த சிவானந்தம், சுருட்டி வாரிக்கொண்டு எழுந்து இருட்டில் தடுமாறிக் கொண்டே உள்ளே சென்றான்.

“சரஸ்வதி!”

பதிலில்லை. இருளில் தட்டுப்பட்ட அந்த மிருதுவான கரங்களை அவன் கெட்டியாகப் பற்றிக் கொண்டான்.

“யார்! நீங்களா?”

“ஆம், நான்தான் சரஸ்வதி! ஏன் பயமாக இருந்ததா?”

அவள் தன் தலையை அவனது மார்பில் புதைத்துக் கொண்டு குழந்தையைப் போல் விம்மினாள். அவன் தன்னை அவளிட மிருந்து

விடுவித்துக் கொண்டு விளக்கை ஏற்றினான். அவள் நாணத்தால் தலை கவிழ்ந்தாள்.

“என்னை மன்னிச்சுடுங்க; காலம்பர தெரியாத் தனமா ஏதோ உளறிட்டேன். ஆத்து வெள்ளம் தணிஞ்சு நான் ஊருக்குப் போற வரைக்கும் நீங்க தயவு பண்ணி வீட்டை விட்டுப் போகக் கூடாது!” என்று தடுமாறிக் கொண்டே வேண்டினான் அவன்.

3

அன்றிரவு பெய்த மழைக்குப் பிறகு வானம் நிர்மலமடைந்து சூரியன் எப்போதும் போல் பிரகாசிக்கத் தொடங்கினான். தந்தை இறந்து போய்த் தான் அனாதையானதை நினைத்தபோது உண்டான வருத்தத்தைத் தவிர, மற்றபடி சரஸ்வதி அந்த வீட்டில் சந்தோஷமாகவே இருந்தாள். அவள் வீட்டுக் காரியங்களைச் செய்வதும், சிவானந்தம் கடையில் உட்கார்ந்து வியாபாரத்தைக் கவனிப்பதும் கிரமமாக நடந்தன. அவள் செய்யும் ஒவ்வொரு காரியமும் சிவானந்தத்திற்குப் பிடித்திருந்தது. ஒவ்வொரு நாளும் ஆற்றில் வெள்ளம் தணிந்து நீர் மட்டம் குறைந்து வருவதைக் காணக் காண அவன் மனம் குழம்பியது. ஆயிற்று, இன்னும் இரண்டொரு நாளில் ஆற்றில் படகுகள் செல்லத் தொடங்கியதும் அவள் தன்னை விட்டுப் போய்விடுவாள் என்பதை நினைக்குந்தோறும் அவனது நெஞ்சம் துணுக்குற்றுச் சொல்லொணா வேதனையடைந்தது. எத்தனையோ வருஷங்களாகத் தனக்குச் சொந்தமாயிருந்த ஒரு பொருளை இழந்துவிடப் போவது போன்ற ஏக்கம் உண்டாகி அவன் மனதை அரிக்கத் தொடங்கியது.

அன்று காலை படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போதே அவனுக்கு அசாத்தியத் தலைவலி. மண்டை அசைக்க முடியாமல் கனத்துக் கடுமையான ஜுரம் பிடிக்கப் போகிறதென்பதை உணர்த்தியது. தூரத்தில் ஆற்றின் மேல் படகு ஒன்று மிதப்பது தெரிந்தது. அவன் கண்களை மூடிக் கொண்டான்.

“பலகாரம் சாப்பிட வரவில்லையா?” என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்த சரஸ்வதி, அவனிருந்த நிலையைக் கண்டு, “ஏன், உடம்பு சரியாயில்லையா உங்களுக்கு?” என்று கேட்டாள்.

“அதெல்லாம் ஒன்றுமில்லை; சும்மாத்தான் உட்கார்ந்திருக்கிறேன்!” என்றான் அவன்.

இந்தச் சமயத்தில் பக்கிரி அங்கே வந்து, “வைத்தியரே, மத்தியானம் என் படவு புறப்படுதுங்க. இந்த அம்மாளைத் தயாரா இருக்கச் சொல்லுங்க!” என்று சொல்லி விட்டுப் போனான்.

பொழுது செல்லச் செல்ல சிவானந்தத்தின் உடல் நிலையோடு மன நிலையும் சேர்ந்து அவனை வாட்டத் தொடங்கியது.

அன்று மாலை மூன்று மணிக்குப் புறப்பட்ட படகில் சரஸ்வதி ஏறிக்கொண்டாள். சிவானந்தம் கரையிலிருந்தபடியே, “பக்கிரி, அந்தக் கரைக்குப் போனதும் ஒரு வண்டி பேசிப் பத்திரமாக அனுப்பிவிட்டு வா!” என்று உத்தரவிட்டான். சரஸ்வதி இரண்டு மூன்று முறை அவனிடம் ஏதோ கேட்க வேண்டுமென்று வாயெடுத்தாள். ஆனால் பெண்மைக்கு இயற்கையான வெட்கமும் பயமும் ஒன்று சேர்ந்து அவளது வாயை அடைத்து விட்டன. படகு நகர்ந்தது.


“சரஸ்வதி, போய்வருகிறாயா? மறந்து விடாதே!” என்றான் சிவானந்தம்.

பதில் பேசக்கூடச் சக்தியின்றிக் கண்களில் சுரந்த நீரைப் புடவைத் தலைப்பினால் துடைத்துக் கொண்டாள் அவள்.

அவன் தள்ளாடிக் கொண்டே வீட்டை நோக்கி நடந்தான். உடம்பு தணலை வாரிக் கொட்டியதுபோல் சுட்டது. பேசாமல் படுக்கையில் படுத்துக் கண்களை மூடிக் கொண்டான்.

* * *

மீண்டும் அவன் கண் விழித்தபோது அந்த அறையில் ஒரு சிறு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கடைசியாக அன்று மாலை சரஸ்வதியை அனுப்பிவிட்டுத் தான் வந்து படுத்தது அவனுக்கு நன்றாக ஞாபகமிருந்தது.



சென்னை ஸ்ரீ வரதப்பச் செட்டியாரின் குமாரன் கூரத்தாழ்வாருக்கும் ஸ்ரீ ஞானகிராமச் செட்டியாரின் குமாரத்தி சௌபாக்கியவதி ராதாபாய்க்கும் சமீபத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்!

அப்படியானால் விளக்கை ஏற்றியது யார்? உடம்பின்மேல் கம்பளி எப்படி வந்தது?

தலையைத் தூக்கப் பார்த்தான். உடம்பு ஒரே பலஹீனமாக இருந்தது. கண்களைத் திறக்க முடியாமல் எரிச்சலாக இருந்தது. நெற்றிப்பொட்டில் ஏதோ ஜில்லென்றது. மெதுவாகத் தன் கைகளால் தடவிப் பார்த்தான். ஒரு மென்மையான கரம் அவனது நெற்றியை அமுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது.

"சரஸ்வதி! நீயா?"

தலைமாட்டில் உட்கார்ந்திருந்த சரஸ்வதி மெதுவாக நகர்ந்து எதிரே வந்தாள்.

"ஆமாம், நான்தான்! கொஞ்சம் கஞ்சி தரட்டுமா?"

"நீ எப்போது இங்கே திரும்பி வந்தாய்? ஊருக்குப் போகவில்லையா?"

"நான் வந்து நாலு நாளாச்சு...!"

"நாலு நாளா!"

"ஆமாம்; நான் படகிலே புறப்படுகிற போதே உங்களுக்கு உடம்பு சரியா யில்லேன்னு எனக்குத் தெரியும். என் மனசு கேட்கல்லே. பாதி தூரம் போனப்புறம் படகைத் திருப்பச் சொல்லிட்டேன். இங்கே வந்து பார்க்கிறேன், ஜுர மாத்திரைப் புட்டியைக் கையில் வச்சுகிட்டு நீங்க நினைவு இல்லாமல் படுத்திருக்கீங்க! அப்பா! நாலு நாளா என்ன ஜுரம்! எனக்குப் பயம்மாப் போச்சு!"

அவளது வார்த்தைகளைக் கேட்க அவன் உடம்பில் புதுப் பலம் உருவானது போலிருந்தது. ஜுரம் தணிந்ததற் கறிகுறியாக உடம்பு வியர்த்துக் கொட்டியிருந்தது.

"அப்போ, திரும்பவும் போயிடுவியா?"

"பேசாமெ படுத்திருங்க; உடம்பு குணமானதும் நீங்க போகச் சொன்னா போயிடறேன்!"

சிவானந்தம் அவளது கரங்களைப் பற்றித் தன் மார்பில் அழுத்திக் கொண்டான்.

"சரஸ்வதி, என் மனமார நான் உன்னைப் போகச் சொல்லுவேனா?"

அவனது இதழ்களில் புன்னகை அரும்பியது. நிசப்தமான அந்த இரவின் மௌனத்தில் நிதானமாக ஓடிக்கொண்டிருந்த ஆற்று நீரின் சலசலப்பு அவனது காதுகளுக்கு எட்டியது. பொன்னாற்றில் வெள்ளம் பூரணமாகத் தணிந்துவிட்டது. ஆனால் சிவானந்தத்தின் உள்ளத்தில் அப்போது இன்ப வெள்ளம் ஊற்றெடுத்துப் பெருகியது.

கா ல க்ஷே ப ம்

ராஜம்மாள் பிறந்தகத்துக்கு ஒரு வாரம் போய்விட்டு வருவதாகத் தன் கணவனிடம் சொன்னாள்.

"நான் அங்கே போய்ப் பார்க்கிறேன். அம்மா என்னை ரொம்பக் கட்டாயப்படுத்தினால், கூட நாலு நாள் இருந்துவிட்டு வருகிறேன். அப்படித் தங்க நேர்ந்தால் உங்களுக்கு ஒரு கடிதாசி போட்டு விடுகிறேன்!" என்றாள்.

"என்னத்துக்கு நீ வீணாய்க் காசைச் செலவழித்துக் கடிதம் போட வேண்டும்? அந்தக் கடிதத்தை நான் இங்கேயே படித்துப் பார்த்து விட்டேன்; உன் பெட்டிக்குள் இருந்தது!" என்றான் கணவன்.

★

போர்மேன் (கோபத்துடன்) :—சுந்தரம், நீ இன்றோடு நாலுதரம் லேட்டாய் வேலைக்கு வந்திருக்கிறாய், தெரியுமா?

சுந்தரம் :—நான் ஒருத்தரைப்போல் எப்பொழுது பார்த்தாலும் கடிகாரத்திலேயே கண்ணாய் வேலை செய்கிறதில்லைங்க!

அம்மா (பக்கத்து வீட்டில் பேசிக்கொண்டிருந்துவிட்டு உள்ளே வந்து):—என்னடா கண்ணா, கையில் காயம் பட்டுக்கொண்டு விட்டாயா?—போனால் போகிறது, அழாமல் இருக்கிறாயே! சமர்த்து!

கண்ணன்:—நீ இங்கே இல்லாத போது நான் அழுது என்ன அம்மா, பிரயோஜனம்?

★

ஏரோப்ளேன் காசிமாநகரத்துக்கு மேலே பறந்துகொண்டிருந்தது.

விமானி:—ஸார்! பிராணனை விட்டால் இந்தக் காசி க்ஷேத்திரத்திலே விடவேண்டும் என்றும் அது ரொம்ப விசேஷம் என்றும் நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா?

மற்றவர் :—ஆகா! பேஷாய்க் கேள்விப் பட்டிருக்கிறேன்!

விமானி :—நாம் இப்பொழுது கங்கை நதிக்கு மேலே பறக்கிறோம். இந்த ஏரோப்ளேன் எஞ்சினும் கெட்டு விட்டது......!

பட்டாபிராமன் புனர் ஜன்மம்

வேம்பு

அன்று எனக்கு மனமே சரியாக இல்லை. கவலையே அறியாது வளர்ந்து விட்ட எனக்கு இந்தத் திடீர் அனுபவம் தாங்க முடியாததா யிருந்தது. கார்ப்பரேஷன் தெரு விளக்குகள் புது மணப் பெண்களைப் போலத் தலையைக் குனிந்து ஒரு குரல் அழுத வண்ணம் வெளிச்சம் அளித்துக் கொண்டிருந்தன. பஸ் ஹாரன் சத்தமும், டிராமின் கடபுடா ஒலியும், மக்களின் இரைச்சலும் சேர்ந்து அன்று என் வேதனையை இன்னும் அதிகமாக்கின.

தினமும்தான் இந்தக் கார்ப்பரேஷன் தெரு விளக்குகள் ஒளி கொடுக்கின்றன; டிராமும், பஸ்ஸும் ஒல மிடுகின்றன. ஆனால் அன்று இவையெல்லாம் எனக்குப் புது அனுபவமாகவும் வேதனை வித்தாகவும் இருந்ததற்குக் காரணமில்லாமற் போகவில்லை.

சென்ற வாரம் சென்னையில் பிரபல வர்த்தகக் கம்பெனி ஒன்றின் மேல்மாடி இடிந்து விழுந்ததின் காரணமாக நான்கு குமாஸ்தாக்களும், இரண்டு கூலியாட்களும் உருத் தெரியாமல் நசுங்குண்டு போன பரிதாபச் செய்தி உங்களுக்கு நினைவிருக்கிறதா?

அந்த கால்வரில் எனது உயிருக்குயிரான நண்பன் பட்டாபிராமனும் ஒருவனாயிருந்தபோது, என் இதயம் எப்படி வேதனை அடையாமலிருக்க முடியும்?

பிரஸ்தாப சம்பவம் நடந்த தினத்தன்றுதான் நான் ஊரிலிருந்து நீண்ட விடுமுறைக்குப் பின் திரும்பி வந்திருந்தேன். பட்டாபிராமனை அன்று மாலையில் தான் சந்திக்கலாமென்றிருந்தேன். அவனைக் கடைசியில் இந்தக் கோலத்தில் காணவேண்டியிருந்தால் — திடீரென இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டால்— உள்ளத்தி லுண்டான அதிர்ச்சிக்கும், திக்பிரமைக்கும் கேட்கவா வேண்டும்?

★

பட்டாபிராமன், பி.ஏ. எனது பால்ய நண்பன். 'அ. ஆ' கற்றுக்கொள்ளப் பள்ளியில் சேர்ந்தது முதல் கடைசியாகக் கல்லூரியில் இருவரும் பிரியும் வரை ஒன்றாகவே படித்து வந்தோம். 'இரட்டையர்கள்' என்று எங்களை எல்லோரும் கூறிப் பெருமைப் படுமளவுக்கு நண்பர்களாக இணைபிரியா திருந்தோம்.

கம்பீரமான தோற்றமும், கவர்ச்சியான நிறமும், வாரிவிட்ட அமெரிக்கன் கிராப்பும், அகன்ற நெற்றியுமுடைய அவனை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்போல் தோன்றும். சதா அவனுடன் சுற்றிக் கொண்டிருக்கும் என்னைப் பார்த்து என் நண்பர்களெல்லாம், "டேய், நீ அவனுடன் செல்வது எப்படியிருக்கிறது, தெரியுமா? செவ்வந்திப்பூவைச் சுற்றி வண்டு வட்டமிடுவதுபோல் இருக்கிறது!" என்று கேலியாகக் கூறுவார்கள். எங்கள் வர்ண வேறுபாட்டிற்காக அவர்கள் அப்படிக் கூறினாலும் உண்மையிலேயே நானும் அவனும் மலரும் வண்டுப்போல் பிரிக்க முடியாதவர்களாகவே வாழ்ந்து வந்தோம்.

இப்படி அற்ப ஆயுளில் அவன் மாண்டு விடப் போகிறானென்று நான் நினைத்தேனா? அல்லது அவன்தான் நினைத்திருப்பானா? புத்திசாலித்தனமும், அழகும், கம்பீரத் தோற்றமும் கவர்ச்சிகரமான பேச்சும் அளித்த ஆண்டவன், வாழ்க்கையில் அவனுக்குக் குடும்ப சுகத்தையோ—நிம்மதியான மனதையோ அளிக்கவில்லை.

அவனுடைய சிறுவயதிலேயே அவனது தந்தை இறந்தார். பிரமாத சொத்து ஒன்றும் வைத்துச் செல்லாவிடினும் அவன் தாய் மிகச் செட்டாகவும், சாமர்த்தியமாகவும் குடித்தனம் நடத்தி அவனை பி. ஏ. வரையில் படிக்க வைத்தாள்.

வேலை தேடுவதற்காகப் பட்டாபிராமன் சென்னைக்கு வந்தான். சுலபத்தில் வியாபாரக் கம்பெனி யொன்றிலே நல்ல வேலையும் கிடைத்தது. இவனுக்கு முன்னமேயே நான் சென்னையில் வேலையாக இருந்தேன். என் பிரிய நண்பன் சென்னைக்கே வந்துவிட்டதில் எனக்கும் பரம திருப்தி.

என்ன காரணத்தினாலோ நாளடைவில் அவனுடைய மன அமைதி குலைந்தது. தன் மன நிம்மதியின்மையையும்— ஆயாசத்தையும் அவன் ஒளிவு மறைவு இன்றி என்னிடம் கூறுவான். படபடப்பும் வேகமுமற்றிய அவனுக்குப் பரபரப்பும் ஆயாசமும் உண்டாயின; களங்கமற்ற அவன் உள்ளத்தில் கவலைகள் வந்து மூண்டன. உலகிலேயே காதலும் போரும் முக்கியமானவையா யிருக்கும் போது, பட்டாபிராமனின் வாழ்க்கையிலும் அந்தக் காதல் வந்து மூளாக்காம லிருக்குமா, என்ன?

கிளி யென்பார்களே! மாதுளைத் தளிர் என்பார்களே! தங்கப் பதுமை யென்பார்களே!—இவை யெல்லாம்—இந்த உவமைகளெல்லாம் — ஜானகி விஷயத்தில் தோற்றுத்தான் போகும். அந்த உவமை கூற முடியா அழகி, உவமை கூற முடியா அழகனான பட்டாபிராமன் மேல் காதல் கொண்டாள். காரியாலயத்துக்கு அவன் போகும்போதும் வரும்போதும் அந்தக் கிளி ஜன்னலருகே காட்சி யளித்து அவனுடைய ஆசைத் தீயை வளர்த்தாள்.

ஒருதலைக் காதலாக இவன் காதல் எங்கே யிருந்து விடப் போகிறதோ என்று எண்ணி, நான் ஒரு நாள் பட்டாபியை "ஜானகி ஜானகி என்கிறாயே, அவளுக்கு உன்மேல் பிரிய முண்டா?" என்று கேட்டுவிட்டேன்.

"ஹூம்......ஜானகிக்கா என் மீது பிரியமில்லை என்கிறாய்? இதோ பார்!" என்று என் முன்னே ஒரு கத்தை கடிதத்தை எடுத்துப் போட்டான். மணி மணியான எழுத்துக்களில் ஜானகி காதல் கதை பேசி யிருந்தாள். உள்ளத்தையே கொட்டி யிருந்தாள். இவ்வளவு துணிவுடன் கடிதம் எழுது மளவுக்கு அவர்கள் காதல் வளர்ந்தது குறித்து எனக்கும் சந்தோஷம்தான்!


"அதுமட்டுமாடா? அவள் அப்பாவுக்கு ஒரே பெண். பெயிண்ட் கம்பெனி ஒன்றில அவருக்கு வேலை. ஜானகி என்னைச் சுட்டிக்காட்டி 'இவரைத்தான் மணப்பேன்' என்று கூறிவிட்டாள். அவள் தந்தை என்னை அணுகி, 'என்ன சீர் - செனத்தி செய்வதானாலும் தயார். உங்கள் தாயார் சம்மதத்தைக் கேட்டு வாருங்கள்!' என்று சொல்லிவிட்டார்.

"பிள்ளையின் மனதை அறியாத தாயார் இருந்து என்னடா பயன்? முதலில் 'சரி, பார்க்கலாம்' என்றவள், பிற்பாடு 'அவர்கள் அந்த சௌராஷ்டிரம்; சம்பந்தப் பண்ணலாமா?' என்று சொல்லி விட்டாள். 'ஜானகியைக் கலியாணம் பண்ணிக்கொள்ள வேண்டாம் என்றால் எனக்குக் கலியாணமே வேண்டாம்' என்றேன். 'அப்பா, பட்டாபி! நீ எனக்கு ஒரே பிள்ளை, எவ்வளவோ கஷ்டப்பட்டு உன்னை வளர்த்தேன். உங்கப்பா வைத்துப் போன கடனை யடைத்து உன்னை பி. ஏ. வரையில் உழைத்துப் படிக்க வைத்தேன். உனக்கு நல்ல இடத்தில் கலியாணம் செய்வித்துக் குடியும் குடித்தனமுமாக நீ சௌக்கியமா யிருப்பதை நான் பார்க்க வேண்டுமடா! நம்ம ஜாதியை விட்டு வேறு ஜாதியில் பண்ண மனது இடம் கொடுக்கவில்லை. எனக்கு என்ன, உன்னைத் தவிர இன்னொரு பிள்ளையா இருக்கிறது?...... உனக்குப் பிடிவாதமாக அந்த இடத்திலேதான் சம்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என்று இஷ்டமிருந்தால் என்னை ஒன்றும் கேட்க வேண்டாம். நீயே நிச்சயதார்த்தம் செய்துகொள்; நீயே போய்த் தாலியைக் கட்டிவிடு; நான் வரவில்லை!' என்று சொல்லிவிட்டாள். எனக்கு ஆத்திரம் ஒரு பக்கமும் அழுகை ஒரு பக்கமுமாகப் பொங்கிக் கொண்டு வந்தது. 'கடைசியாக ஒன்று சொல்லேனம்மா; என்ன ஜாதிப் பிரிவு நமக்குள்ளேயே வேண்டி யிருக்கிறது? அவர்களே சம்மதிக்கையில் நமக்கென்ன? கலியாணம் செய்து கொள்வதா யிருந்தால் நான் ஜானகியைத்தான் கலியாணம் செய்து கொள்வேன்; இல்லாவிடில் பீஷ்மரைப் போல, இளங்கோவடிகளைப் போல, கபாலைப் போல பிரமசாரியாகவே இருந்து காலத்தைக் கழிப்பேன்' என்று சபதம் செய்து விட்டேனடா! ஒரு சமயம் தாயின் சொல்லுக்கு விரோதமாகவே, ஜானகியைத் துணிந்து மணந்து விடுவது என்று தோன்றும். மற்றொரு சமயம் தாய் வராமல் கலியாணமா எனத் தோன்றும். கடைசியில் இரண்டாவது எண்ணம்தான் ஜயித்தது. ஜானகியை நான் பார்ப்பதைக்கூட



"உங்கள் பையன் ரொம்ப முரடன்! அவன் மட்டும் என் பையனாக இருந்தால் பளீரென்று நாலு அறை கொடுத்திருப்பேன்......"

"ரொம்ப சரி; இவன் மட்டும் உங்களுடைய பையனாக இருந்தால் நான்கூடத்தான் நாலு அறை கொடுத்திருப்பேன்!"



குடுமிக்காரர் :—ஓகோ! நம்ம பிரின்ஸ் ஆப் வேல்ஸ் வந்து இங்கே கிராப் பண்ணுரேரோ? அப்ப டின்னு, நானும் குடுமியை எடுத்து விட்டு அவரிடம் கிராப் பண்ணிக்க வேண்டியதுதான்.

நிறுத்திக் கொண்டேன். நல்ல காலந் தானே என்னவோ, அவன் தந்தையைக் கல்கத்தாவுக்கு மாற்றிவிட்டார்கள். என் பிரதிக்ஞை அவனுக்கும் தெரியும். ஆனால் அவனால் என்னைப்போல் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள முடியுமா?'' என்ருன் பட்டாபி, ஒரு நாள் கடைசியாகச் சந்தித்தபோது.

★

நான் அவன் தாயாரிடம் வாதாடிப் பார்த்தேன். பழங்காலத்துப் பெரியவர்களின் எண்ணத்தை—கட்டுப்பாட்டைப் மாற்ற முடியுமா? முடியவில்லை. அதற்குப் பிறகு நான் சொந்த வேலை நிமித்தமாக வெளியூர் சென்று வந்த அன்றுதான் இந்தக் கோரச் சம்பவம் நடந்தது. பிரஸ்தாப சம்பவம் நடந்த தினத்தன்று காலையில் நான் அவனைக் காரியாலயத்தில் சந்திக்கச் சென்றேன். அவன் இல்லை.

இந்த மன வேதனையுடன் அன்றிரவு நான் அறையில் விளக்குகூட ஏற்ருமல் உட்கார்ந்திருந்தேன். அறைக் கதவு மெள்ள திறந்தது. மனதில் வேதனையடைந்துள்ள ஒருவனுக்குச் சிறு சத்தமும் பெரும் அதிர்ச்சியைக் கொடுக்கும் அல்லவா? எனவே, நான் திடுக்கிட்டு விட்டேன். திடுக்கிட்டதற்கு ஏற்ருற்போல் ஓர் உருவம் வெகு சுவாதீனமாக உள்ளே நுழைந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டது. விளக்கைப் பொருத்தினேன்.

என்ருல் நம்பவே முடியவில்லை. உடலெல்லாம் வியர்த்தது. குபீரென உடலில் இரத்தம் வேகமாகப் பரவித் தணிந்தது. இதயம் படபடத்தது. ''யார்...ர்...! ப...ட்....டாபி......யா?'' எனக் குழறினேன்.


''பயபபடாதேடா! நான்தான்: சாக்ஷாத் பட்டாபியேதான். ஆனால் புது குணங்கள்—கொள்கைகள் இப்போது. நான் நகங்குண்டதாக ஊரே பேசிக்கொள்கிறது. நல்ல வேளை, நான் ஊரில் இல்லை. திக்பிரமையில் என் தாயும் செத்தவன் நான்தான் என அடையாளம் கூறியிருக்கிருள். பாவம், அழுது அழுது அவள் பாதி இறந்திருப்பாள். ஒரே மகன்; கஷ்டப்பட்டு வளர்த்த மகன்; செல்வமாக நல்ல இடந் தேடி மணம் புரிவித்து ஆசையோடு பார்க்க வேண்டிய மகன். ஆம், நண்பா! நான் இறந்ததாகவே இருக்கட்டும்; என் சபதம் நிறைவேறியதாகவே இருக்கட்டும். நாளைக் காலை நான் கல்கத்தாவுக்கு ஆகாயவிமானத்தில் போகிறேன். அங்கு போய் ஜானகியைச் சந்திப்பேன். மறுநாளே அவளை மணந்து கொள்வேன். பிறகு வடக்கேயே காலங் கழிப்பேன். புது வாழ்வு வாழ ஆசைப்பட்டேன்; கிடைத்து விட்டது. பயப்படாதேடா! உன்னை மறக்கமாட்டேன். போய் வருகிறேன்!'' என்று கூறிவிட்டு, அவ்வுருவம் கிளம்பிச் சென்றது.

ஒன்றும் தோன்ருமல் பேயடித்தவன் போல் நான் உட்கார்ந்திருந்தேன். மறுகணம் திடீரென எழுந்து ஓடித் தெருவெல்லாம் பார்த்தேன். ஆள் நடமாட்டமே யில்லை. பட்டாபியா வந்திருப்பான்? — கனவா, நனவா என்றுகூடப் புரியவில்லை. இரவெல்லாம் உறக்கமில்லாமல் தவித்தேன். பொழுது விடிந்ததும் பட்டாபியின் தாயிடம் ஓடினேன். சோகத்தில் ஆழ்ந்திருந்த அந்த அம்மாளைப் பார்த்து வேறு ஒன்றும் பேசாமல் மீனம்பாக்கம் சென்றேன்.

கல்கத்தா செல்லும் விமானம் வந்து விட்டது. பிரயாணிகள் எல்லோரும் தான் ஏறப்போகிருர்கள். பிரயாணிகளின் ஜாபிதாவில் பட்டாபிராமன் என்ற பெயரையே காணேம். எல்லாப் பிரயாணிகளும் ஏறியாகிவிட்டது. வெகு வேகமாகச் சுழலும் விசிறிகளுடன் விமானம் கிளம்பியது. ஆனால் பட்டாபி மட்டும் வரவே இல்லை!

''ஆனால் நேற்று......? பட்டாபிராமன் புனர் ஜன்மம் எடுத்துவிட்டான் என்று எண்ணினேனே, அது பொய்யா?'' என்ற நினைப்புடன் ஆகாயத்தில் விமானம் மறையும் வரை நான் அங்கேயே நின்று கொண்டிருந்தேன்.






காஷ்மீரத்தின் நறுமணம்
நிறைந்த காற்று....
....அக்குன்ன அழகான பள்ளத்தாக்குகளை விஜயம் செய்யும் ஜனங்களுக்கு ஆறுதல் அளிக்கிறது. இப்பெரும் பாக்கியத்தை கணவாய்களில் வசிக்கும் ஒரு சிலரே அனுபவிக்கக் கூடும். ஆனால் உங்களில் பெரும்பாலோர் ஓர் 'ஓரியண்ட்' விசிறியை அமைப்பின், கடுமையான கோடைக்காலத்தில்கூட சுகமாக வேலை செய்து இளைப்பாற முடியும். மேலும் "ஓரியண்ட்" விசிறி குறைந்த மின்சார செலவில் நன்றாக உழைப்பதால் அவை மிகவும் மலிவானவை.
ஓரியண்ட்
ஏ.ஸி, டி.ஸி.
விசிறிகள்
ஸீலிங் விசிறிகளும், டேபிள் விசிறிகளும்
மின்சார பம்புகளும், கை பம்புகளும்
மின்சார மோட்டார்கள்.
தி கல்கத்தா எலெக்ட்ரிகல் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்.
4, ஸ்ட்ரிங்கர் தெரு, மதராஸ்.
இதர ஆபீஸ்கள்: கல்கத்தா, பம்பாய், டெல்லி, கான்பூர், பாட்னா

அண்ணனும் தங்கையும்

பி. எஸ். மணி

"அண்ணா! அதோ பார், ஒரு அழகான வண்ணாத்திப் பூச்சி! அதை எனக்குப் பிடித்துத் தருகிறாயா?" என்று ஆவலுடன் கேட்டாள் லக்ஷ்மி.

"ஓ, பிடித்துத் தருவேனே!" என்று சொல்லிக் கொண்டே, அந்த அழகான வண்ணாத்திப் பூச்சியைப் பிடிப்பதற்காக ராஜு ஓடினான். லக்ஷ்மியும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

அந்த வண்ணாத்திப் பூச்சி அவர்களுடைய கையில் அகப்படுவது போல் அருகே வருவதும், அடுத்த நிமிஷம் உயரப் பறந்து விடுவதுமாக மேலே மேலே சென்று கொண்டேயிருந்தது. ஆனால் ராஜுவும் லக்ஷ்மியும் விடாமல் அதைப் பின் தொடர்ந்தார்கள்.

திடீரென்று அந்த வண்ணாத்திப் பூச்சி ஒரு பெரிய மாளிகைக்குள் நுழைந்தது. அவர்களும் அந்த மாளிகைக்குள் நுழைந்தார்கள். ஆனால் அந்த வண்ணாத்திப் பூச்சி மாளிகை பூராவும் தேடியும் அகப்படவில்லை. ரொம்ப தூரம் ஓடி வந்ததால் அவர்கள் இருவரும் அதற்குள் களைத்துப் போய்விட்டார்கள். பசி வேறு அவர்களைப் பிடுங்கித் தின்றது. அப்பொழுதுதான் அவர்களுக்குத் தங்களுடைய வீட்டின் ஞாபகம் வந்தது.

இருவரும் வீட்டிற்குத் திரும்பிப் போக முயன்றார்கள்; வழி தெரியவில்லை. லக்ஷ்மி அழ ஆரம்பித்து விட்டாள். அவளைச் சமாதானப் படுத்தினான் ராஜு.

இந்தச் சமயத்தில் ஒரு பயங்கர உருவம் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. அது வேறு யாருமல்ல; அந்த மாளிகையில் வசித்து வந்த மந்திரவாதி தான்!

"அண்ணா! எனக்குப் பயமாயிருக்கே!" என்று சொல்லி, லக்ஷ்மி தன் அண்ணாவைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"என்னுடைய மாளிகையில் நுழைவதற்கு உங்களுக்கு என்ன அவ்வளவு தைரியம்?" என்று சொல்லி, அந்த மந்திரவாதி அவர்கள் இருவரையும் ஒரு அறையில் தள்ளிப் பூட்டி விட்டுச் சென்று விட்டான். வண்ணாத்திப் பூச்சி அந்த அறையில் இருப்பதைப் பார்த்ததும் ராஜுவுக்குக் கோபம் கோபமாக வந்தது. அதைப் பிடித்துக் கொன்று விடுவதற்காக அவன் முயற்சி செய்தான். ஆனால் அது தரையிலிருந்த ஒரு இடுக்கில் நுழைந்து விட்டது. ராஜு அதைப் பிடிப்பதற்காகத் தரையில் பதித்திருந்த செங்கற்களைக் கீழே கிடந்த ஒரு கம்பியைக் கொண்டு பெயர்த்து எடுத்தான்.

என்ன ஆச்சரியம்! செங்கற்களைப் பெயர்த்ததும் பொன்னும், மணியும், ரத்தினங்களும் நிறைந்த ஒரு திறந்த பெட்டியை அவர்கள் கண்டார்கள். அவற்றைப் பார்த்த ஆனந்தத்தில் பசியையும், வீட்டையும் அவர்கள் மறந்தாலும் வண்ணாத்திப் பூச்சியை மறக்கவில்லை. அதை மெதுவாகப் பிடித்துக் கொண்டான் ராஜு. "உன்னால்தானே நாங்கள் வீட்டை விட்டு வந்து இங்கே சிறைப் பட்டோம்? பார், உன்னை என்ன செய்கிறேன்!" என்று கோபத்துடன் கூறினான்.



"ஐயோ! என்னை ஒன்றும் செய்து விடாதே! அதோ, அந்தத் திறந்த பெட்டியிலிருக்கும் மந்திரக் கோலை எடுத்து என்னைத் தடவி விடு! உனக்குப் புண்ணியமுண்டு!" என்றது வண்ணாத்திப்பூச்சி.

ராஜு அந்தப் பூச்சியின் வேண்டுகோளின்படி மந்திரக்கோலை எடுத்து அதைத் தடவி விட்



குழந்தை:—அம்மா! தலையை வலிக்க வலிக்க வாருகிறாயே!

அம்மா:—கொஞ்சம் பொறுத்துக் கொள், கண்ணே! இன்றைக்குப் பெரிய மனுஷாள் நம் வீட்டுக்கு வரப்போகிறார்கள்!

குழந்தை (யோசித்து விட்டு):—அவர்கள் வராவிட்டால் என்ன செய்கிறது, அம்மா!

டான். அவ்வளவுதான்; வண்ணாத்திப் பூச்சி இருந்த இடத்தில் ஓர் அழகான ராஜகுமாரி நின்றாள்!

"நான் யார் தெரியுமா? இந்தத் தேசத்து அரசனின் மகள். இந்த மாளிகையிலுள்ள முரட்டு மந்திரவாதி ஒரு நாள் என்னை யாருக்கும் தெரியாமல் தூக்கிக் கொண்டு வந்து விட்டான். நான் தோட்டத்தில் உலாவச் செல்லுவது போல் சென்று, இங்கிருந்து தப்பியோட முயற்சி செய்தேன். இது எப்படியோ அந்த மந்திரவாதிக்குத் தெரிந்து விட்டது. அவன் தன் மந்திரக் கோலால் என்னை வண்ணாத்திப் பூச்சியாக மாற்றி விட்டான். அதற்குப் பிறகு நான் எங்கு சென்றாலும் அவன் கவலைப்படுவதே யில்லை!

"இன்று தற்செயலாக நான் உங்களுடைய தோட்டத்துக்கு வந்தேன். நீங்கள் என்னுடைய அழகில் ஈடுபட்டு என்னைத் தொடர்ந்து வந்தீர்கள். மந்திரவாதி உங்கள் மேல் கோபம் கொண்டு சிறையில் அடைத்து விட்டானல்லவா? அதனால் நீங்கள் என்மீது கோபம் கொள்வீர்களென்று தெரியும். இருந்தாலும் நான் வேண்டுமென்றே நீங்கள் மந்திரக்கோலை எடுக்கவேண்டுமென்பதற்காக ஒரு செங்கல்லின் இடுக்கில் நுழைந்தேன். எதிர்பார்த்தது போல் நீங்களும் என்னைப் பிடிப்பதற்காகச் செங்கற்களைப் பெயர்த்து எடுத்தீர்கள். என்னுடைய வேண்டுகோளின்படி திறந்த பெட்டியில் இருந்த மந்திரக்கோலால் நீங்கள் என்னைத் தடவி விட்டதும் நான் ராஜகுமாரியாக மாறிவிட்டேன்!" என்றாள் ராஜகுமாரி.

இந்தக் கதையைக் கேட்டதும், ராஜுவும் லக்ஷ்மியும் ஒரே ஆச்சரியத்தில் மூழ்கிப் போய்விட்டார்கள்.

ராஜகுமாரி, "மந்திரவாதி வருவதற்குள் நாம் இங்கிருந்து சீக்கிரமாய்ப் போய்விட வேண்டும். அவன் பார்த்துவிட்டால் பிறகு நம்மை லேசில் விட மாட்டான்!" என்று சொல்லிவிட்டு, அவர்களிடமிருந்த மந்திரக் கோலை வாங்கி, "நாங்கள் மூவரும் அரண்மனைக்குப் போக வேண்டும்" என்றாள்.

அடுத்த நிமிஷம் அவர்கள் மூவரும் அந்தத் தேசத்து அரசனின் அரண்மனையைச் சேர்ந்தனர். வெகு நாட்களாகக் காணாத தன் பெண்ணைப் பார்த்ததும், அரசனுக்கும் அரசிக்கும் ஆனந்தம் தாங்க முடியவில்லை.

ராஜகுமாரி தன் கதையைப் பூராவும் அவர்களுக்கு எடுத்துச் சொன்னாள். பிறகு ராஜுவையும் லக்ஷ்மியையும் சுட்டிக் காட்டி "இவர்களால் தான் நான் இன்று இங்கே வந்து சேர முடிந்தது. இல்லாவிட்டால் நான் என்றும் வண்ணாத்திப் பூச்சியாகவே வாழவேண்டி நேர்ந்திருக்கும். ஆகவே இவர்கள் செய்திருக்கும் உதவிக்கு எவ்வளவு பொருள் கொடுத்தாலும் தகும்" என்றாள்.

ராஜகுமாரியின் விருப்பத்தை உடனே அரசனும் நிறைவேற்றி வைத்தான். அவன் ராஜுவின் தகப்பனாரை அழைத்து வரச் செய்து, அவருக்கு உயர்ந்த உத்தியோகமும், மாளிகையும், பொன்னும், மணியும் கொடுத்தான். ராஜுவும் லக்ஷ்மியும் அடைந்த ஆனந்தத்துக்குக் கேட்கவா வேண்டும்?

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

245. வேரோடு ஒழிக்க வேண்டும்!

பொறுப்பற்ற சில சில்லறை அரக்கர்கள் பேச்சு அடங்கும்படியாகக் கும்பகர்ணன் பேச வருகிறான்.

ராவணனுக்கு அடுத்த தம்பி அவன். பொறுப்பில்லாமல் அவன் பேச முடியுமா? முடியாது.

கத்திக் கொண்டிருந்த அரக்கர்களை எல்லாம் விலக்கிக் கொண்டு முன்னே வருகிறான். இன்னது செய்யவேண்டும் என்று தெரியாத பெரிய ஆசாமிகளும் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் "உட்காருங்கள்" என்று சொல்லி விட்டு, அரசன் முன்பாக வந்து பேசுகிறான் கும்பகர்ணன்.

"என்னை உன் தம்பி என்று மதிப்பாயானால், நான் சொல்லுவது இது."

சந்தம்

தான னன தன்ன னன
தன்ன னன தன் ன

வெம்பு இகல்அ ரக்க ரை
விலக்கி, வினை தே ரா
நம்பி யர்இ ருக்க என,—
நாய கனை முன் னா,
'எம்பி என நிற்கில் உரை
செய்வல் இதை.' என் னா
கும்ப கரு ணப்பெ யரி
னன்இ வைகு றித் தான்.

[வெம்பு இகல்: ஒரே வெறியில் போருக்காக நிற்கும்; வினை தேரா நம்பியர்: விஷயம் தெரியாது, ஆனால் பெரும் பதவியில் இருப்பவர்கள்; நாயகனை முன்னா: ராவணன் முன்னிலையில் வந்து; எம்பி என நிற்கில்: தம்பி என்று என்னை மதிப்பாயானால்; குறித்தான்: விஷயத்தைத் தெளிவாய்ச் சுட்டிச் சொன்னான்.]

"**பி**ரம்மனுடைய வம்சத்தில் பிறந்து, உயர்ந்த குடிப் பிறப்புக்கு உரியவன் நீ! எத்தனையோ நூலைக் கற்று அதன்படியே நடந்துவந்தவன்."


'நீஅ யன்மு தற்கு லம்
அதற்(கு)ஒ ருவன் நின் றாய்,
ஆயி ரம்ம றைப்பொ ருள்
உணர்ந்(து) அறி வமைந் தாய்,
தீவி னைந யப்பு றுதல்
செய் தனை,— தெரிந் தால்,
ஏயி ன,உ றுந்த கைய,
இத்து ணைய வே யோ!'

[நீ அயன் முதற் குலம் அதற்கு ஒருவன் நின்றாய்: பிரம்ம குலம் என்ற குலத்தின் பெருமைக்கு ஒத்தவனாய் நீ ஒருவன்தானே இருக்கிறாய்; (நின்றாய்: தனித்த பெருமையுடன் இருக்கிறாய்) அறிவு அமைந்தாய்: தீவினை நயப்புறுதல் செய்தனை: ஆனால் இப்போது தீய செயல்களைச் செய்யலாம் என்று எண்ணிவிட்டாய்; தெரிந்தால்: நீ செய்த காரியத்தைக் கொஞ்சம் நிதானித்துப் பார்த்தால்; ஏயின: இதுகாறும் நேர்ந்துள்ள கேடும்; உறுந் தகைய: இனி நேரக் கூடிய கேடும்; இத்துணையவேயோ: இந்த அளவுடனேயா நிற்கும்?

குறிப்பு:—பெரிய சாம்ராஜ்யத்தை, சச்சரவுகள் ஏற்படாமல் அமைதியாய் நடத்த வேண்டும் என்றால் நிர்வாகத்தில் நேர்மையும் ஒழுங்கும் இருக்கவேண்டும். அத்தகைய நிர்வாகத்தை எந்த விதத்திலும் அரசாங்கம் காக்க வேண்டும் என்பது தற்காலத்திய சாம்ராஜ்யங்கள் லக்ஷ்யமாய்க் கொண்ட கொள்கை. கம்பர் காலத்திலும் அந்தக் கொள்கை இருந்தது. பொறுப்புணர்ச்சியில் நின்று சாதிக்கும் கும்பகர்ணனை பாத்திரத்தைக் கொண்டு அந்த அரசியல் உண்மையை வெளியிடுகிறார் கம்பர்.]

* * *

'**கீ**ழே உள்ள நிர்வாகஸ்தர்களுக்கு பயபக்தி இராதே, அரசாங்கம் குலைந்



உட்கார்ந்திருப்பவர் :— என்னங்காணும் இது! ஹோட்டலுக்குப் போகிறதாகச் சொல்லி விட்டு இத்தனை புஸ்தகத்தை எடுத்துண்டு எங்கேயோ கிளம்புகிறீரே ?

புஸ்தகக்காரர் :—ஹோட்டலுக்குத்தான் போகிறேன். அங்கே மசாலா தோசைக்கு ஆர்டர் பண்ணிவிட்டுச் சும்மா யிருப்பானேன் என்று படிக்கிறதுக்கு நாலைந்து புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு போகிறேன்.

தல்லவா போய்விடும்' என்று உண்மையிலேயே பயப்படுகிறான் கும்ப கர்ணன்.

"யாதொரு பழுதும் இல்லாத ஒருவனது மனைவியை கொடுஞ் சிறையில் வைக்கிறது என்பது ஏற்பட்டு விட்டால் நீதியாவது நிர்வாகமாவது! ஒன்றும் இராது!"

'ஆசில் பர தாரம் அவை
வெம்சி றைஅ டைப் போம்!
மாசில் புகழ் காதல் உறு
வோம்!வ ளமை கூ ரப்
பேசு வது மானம், இடை
பேணு வது கா மம்!—
கூசு வது மா னுடரை ;
நன்று நம கொற் றம்!'

[மாசில் புகழ் காதல் உறுவோம் : குற்றம் இல்லாத புகழ் வேண்டும் என்று வேறு ஆத்திரப் படுவோம் ; வளமை கூரப் பேசுவது மானம் : வள்ளல் வாசிக் கணக்கில் மானத்தைப் பற்றி ரொம்ப ரொம்ப அளப்போம் ; இடை பேணுவது காமம் : ஆனால் இவ்வளவு வெளிச்சத்திலும் இடையே அவமானப் பட வேண்டியதான காமத்தில் நாட்டம் ; எப்போது உள்ளத்தில் நேர்மை இல்லையோ அப்போது மனிதரை எண்ணிப் பயப்பட வேண்டியதுதான். பிறகு வீரம் ஏது நமக்கு?]

• • •

இத்தனை கடூரமாக அண்ணனைக் கண்டித்துப் பேசுகிறான் கும்பகர்ணன். ஆனாலும் ராஜ்யம் போய்விட நேர்ந்தால் குலத்தோடு எல்லாரும் நாசமாய்ப் போய் விடுவோமே என்ற பயமும் உள்ளத்தில் பாய்கிறது. என்ன செய்வான் கும்பகர்ணன்!

என்ன தவறு நேர்ந்தாலும் அரசனையும் நாட்டையும் காப்பாற்றி ஆக வேண்டுமே. கொஞ்சம் இளக்காரமாக இந்தச் சிறு பகையை நடத்தி விடுவோமானால், அடுத்த நிமிஷம் எப்படி. யெல்லாமோ பகைவர்கள் நாலா பக்கமும் கிளம்பி விடுவார்களே என்று பதை பதைக்கிறான்.

'எதிரி படையைத் திரட்ட ஆரம்பிக்கும் முன்னதாகவே நாம் 'ஒரு நாளிலேயே கடலைக் கடந்து அங்கே போய் விடவேண்டும்' என்று ஆத்திரத்தோடு சொல்லுகிறான்.

ஊறு படை ஊறுவ தன்
முன்னம், ஒரு நா ளே
ஏறு கடல் ஏறி, நரன்
வான ரர்கள் எல் லாம்
வேறு பெய ராத வகை
வேரொ டும்அ டங் க
நூறு வது வேக ருமம்
என்ப துது வன் றுன்.

[ஊறு படை : வலியுள்ள சேனை ; ஊறுவதன் முன்னம் : திரள்வதற்கு முன்னதாகவே ; ஏறு கடல் ஏறி : கொந்தளிக்கும் கடலைக் கப்பல் மூலமாகக் கடந்து ; வேறு பெயராத வகை : அயலிடம் பெயர்ந்து போய்விடாதபடி ; நூறுவதுவே கருமம் : கொன்று தீர்ப்பதுவே நம்முடைய கடமை ; என்பது துவன்றுன் : என்ற விஷயத்தைச் சொல்லிவிட்டான்.]

உயர்ந்த லக்ஷ்யத்தோடு கூடிய பாத்திரம் கும்பகர்ணன் என்பது பேச்சில் தொனிக்கிறது.

உலகப் பிரசித்தி பெற்ற ஜாம்பக் உபயோகிப்பதால்

வெட்டுக்காயம், சிராய்ப்பு, சீகோர்த்த புண், வேக்காடு

ஆகியவை அபூர்வமாக ஆறுகின்றன.

காயங்களுக்கும் சரும வியாதிகளுக்கும் உலகப் பிரசித்தி பெற்ற கிருமி நாசனக் களிம்பான ஜாம்பக் தான் சிறந்த நிவாரணி. அதிலுள்ள தைல மருந்துப் பொருள்கள் சருமத்தால் நேரடியாக உறிஞ்சப்படுவதால் அதன் ஆற்றும் தன்மை பன்முறை துரிதமாகவும் பயன்படக்கூடியதாகவும் ஆகிறது. கேடு விளைவிக்கப்பட்ட மெல்லிய தோலுக்கு ஹிதமளித்து, விஷக் கிருமி சேர்ந்து அழுகிய சருமத்தை ஆற்றி, வேறெந்த கிருமி நாசனியையும்விட ஜாம்பக் தான் எளிதில் சொஸ்தப்படுத்துகிறது. மிருகக் கொழுப்பு கலப்பற்றது என்பதற்கு உத்தரவாதம்.





எப்பொழுதும் உபயோகியுங்கள்

Zam-Buk

ஆறுதலளித்து குணமாக்கும் கிருமிநாசனக் களிம்பு

No. 3.

“பி அண்டு பி நிட்டிங் நூல்களால் நெய்வது உண்மையான ஆனந்தம்”....



....என்று உயர்ந்த ரக நூல்களையே உபயோகித்து, அனுபவம் பெற்று, அவையே சிறந்தவை என நம்பும் இக்காலத்து நாகரீக ஸ்திரீ கூறுகிறாள். நிட்டிங் செய்யும்பொழுதும் முற்றும் செய்த பின்பும் கம்பளி ஆடைகள் சேர்த்தியாக அமைவதற்கு, பேட்டன்ஸ் அண்டு பால்ட்வின்ஸாரின் உயர்ந்த ரக நிட்டிங் நூல்களே காரணம் என்பதை அவள் அறிவாள். மேலும் அவள் பேட்டன்ஸ் அண்டு பால்ட்வின்ஸ் நூல்களை விரும்புவதற்கு மற்றொரு காரணம், அவளுடைய நாகரீக விருப்பங்களை திருப்திசெய்யும் அவைகளின் கவர்ச்சியான, நீடித்துநிற்கும் நிறங்களேயாம்.

P&B

நூல்கள்

பேட்டன்ஸ் & பால்ட்வின்ஸாரால் தயாரிக்கப்பட்டது.

கவனமாக சலவை செய்தால் கம்பளி ஆடைகள் நெடுநாள் உழைக்கும். ஆகையால்: மிதமான வெந்நீரில், மிருதுவான சோப்பில் மெதுவாக சலவை செய்யுங்கள். நன்றாக அலசுங்கள். ஒட்டி மடித்த துண்டில் வைத்து, மெதுவாக பிழிந்து, ஈரத்தை அகற்றுங்கள். பெரு சுத்தமான, ஒழுங்கான நிழலில் உலர்த்துங்கள். மிகவும் சூடான தண்ணீரை உபயோகிக்காதீர்கள். கம்பளி ஆடைகளில் சோப்பு நிறைந்த தண்ணீரை தங்க விடாதீர்கள். கம்பளி ஆடைகளை சூரிய வெளிச்சத்தில் தொங்க விடாதீர்கள். கம்பளி ஆடைகளை கம்பிகளில் மடித்து உலர்த்தாதீர்கள்

ஜகதீசனின் ஜயா

கி. ரா. கோபாலன்

காலை மணி ஆறிருக்கும்; அவன் கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷனில் நிற்பது போல் தோன்றியது. அவன் ஜன்னல் வழியாகத் தலையை நீட்டி வெளியே பார்த்தான். அது பசுபதி கோயில் ஸ்டேஷன். ஒரு பெருமூச்சு விட்டான். அது தான் அவன் பிறந்து வளர்ந்த ஸ்தலம். மணல்மேடு, சிவன் கோயில், தென்னந் தோப்பு எல்லாவற்றையும் அவன் வண்டியிலிருந்தபடியே பார்க்க முடிந்தது. எல்லாம் அப்படியே அன்று பார்த்தது போல் இன்னும் இருந்தது. தன் வாழ்வில் இருபது வருஷங்களுக்கு முன்னால் நடந்த ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியையும் அவன் நினைவிற்குக் கொண்டுவரப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு கிழவர் ஒரு பெண்ணை அவசர அவசரமாக அழைத்துக் கொண்டு வந்து அவனிருந்த பெட்டியில் ஏற்றி விட்டார். அந்தப் பெட்டியில் அவ்வளவு ஜனக்கூட்டம் இல்லை. அவனோடு சேர்த்தால் ஆறு அல்லது ஏழு பேர் தானிருக்கும். அந்தக் கிழவர் அந்தப் பெட்டியிலுள்ள ஒவ்வொருவர் முகத்தையும் பார்த்து விட்டு ஜகதீசனிடம் வந்து "நீங்கள் எது வரையில் போகிறீர்கள்?" என்றார்.

"நானா? சென்னைக்குப் போகிறேன்" என்றான் அவன்.

"நல்ல வேளையாய்ப் போச்சு. அங்கே தான் குழந்தையும் போகிறாள். கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள். தூரப் பிரயாணம்; குழந்தை ஒண்டியாய்ப் போகணுமே என்று நினைத்தேன்" என்றார் கிழவர்.

"கவலைப்பட வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சமாதானம் சொன்னான் ஜகதீசன். அந்தப் பெண் ஒரு துணிப் பையோடு அவனுக்கு எதிரில் வந்து அமர்ந்தாள்.

வண்டியும் புறப்பட்டது. ஜகதீசன் அந்தப் பெண்ணை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தான். சுமார் பதினைந்து பதினாறு வயதிருக்கும். கொடி போன்ற தேகம்; கண்கள், மூக்கு, அதரம், எல்லாம் அழகை எடுத்துக் காட்டும் அவயவங்களாகத் தான் தோன்றின. அவள் உடுத்தியிருந்த சாதாரணமான நீலச் சிற்றாடையும் கையில் அணிந்திருந்த இரண்டொரு கண்ணாடி வளையல்களும் ஏழ்மையை எடுத்துக் காட்டினாலும் அவை அழகைக் கெடுக்காமல் பரிமளிக்கச் செய்யக் கூடியதாய்த்தா னிருந்தன.

ஜகதீசனுக்கு அவளோடு ஏதாவது பேச வேண்டுமென்ற ஆர்வம் நெடு நேரமாகத் துடித்துக் கொண்டிருந்தது. வண்டி கும்பகோணம் ஸ்டேஷனை நெருங்கிய பொழுது "உங்கள் சொந்த ஊரே பசுபதி கோயிலா?" என்றான். "ஆமாம்" என்று சொல்லி விட்டு அந்தப் பெண் ஜன்னலுக்கு வெளியே பார்வையைச் செலுத்தினாள்.

"அப்படி யென்றால் என்னை உனக்கு தெரியுமோ?" என்றான்.

அந்தப் பெண் சட்டென்று அவனைப் பார்த்து விட்டு, "எனக்குத் தெரியாதே!" என்றாள் வெட்கத்தோடு.

"நீ ஜயா தானே? ராமசுப்பய்யரின் கடைசிப் பெண்......" என்றான்.

அந்தப் பெண்ணால் இதற்குச் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை. "ஆமாம்!" என்று ஒரு புன் முறுவல் செய்து விட்டு மறுபடியும் ஜன்னலுக்கு வெளியே தன் பார்வையைச் செலுத்த ஆரம்பித்தாள்.

"என்னை உனக்குத் தெரியாது. நான் ஜக்கு-ஜகதீசன்: யக்ஞசாமி தீக்ஷிதர் பிள்ளை" என்றான் துடிப்போடு.

அவள் மறுபடியும் திரும்பி அவனைப் பார்த்துப் புன் சிரிப்புக் குலையாமல் "தெரியும்!" என்றாள். ஆனால் மறுபடியும் அவளுடைய பார்வையை ஜன்னலுக்கு வெளியேயுள்ள வயல்களும் வாய்க்கால்களும் வசீகரித்துக் கொண்டன.

ஜகதீசன் மட்டும் அவளிடமிருந்து பார்வையை எடுக்காமல் பேச ஆரம்பித்தான். "எனக்கு மாத்திரம் தெரிந்து விட்டது. நீ வண்டியில் ஏறியவுடனேயே உன் முகஜாடையைப் பார்த்து நீ ஜயா தான் என்று சட்டென்று தெரிந்து கொண்டு விட்டேன். ஆனால் உனக்கு மாத்திரம் என்னைப் பார்த்-

தனும் இன்னுமென்று புரியவேயில்லை. இல்லையா ?"

"புரியாமல் என்ன? நன்றாகப் புரிந்து கொண்டு விட்டேன்" என்றாள் அந்தப் பெண் பார்வையைத் திருப்பாமலே.

"புரிந்து கொண்டு விட்டாயா? சபாஷ்! உங்க அப்பாவெல்லாம் சௌக்கியமாகத் தானே இருக்கிறார்" என்று குடும்ப யோக க்ஷேமத்தை விசாரிக்க ஆரம்பித்தான் ஜகதீசன்.

"என் தகப்பனாரா? இறந்து விட்டார்!" என்றாள் அந்தப் பெண்.

"ஐயோ பாவம்! இப்போ உன்னை ரயிலில் கொண்டு விட வந்தது யார்?"

"எங்கள் தாத்தா."

"உங்க தாத்தாவா? உனக்கு ஒரு தாத்தா இருந்ததாக எனக்கு ஞாபகமில்லையே? அதிருக்கட்டும். நாமெல்லாம் குழந்தையாய் இருந்தபோது கோவில் மணல் மேட்டிலே விளையாடுவோமே ஞாபகமிருக்கிறதா?"

"நன்றாக ஞாபகமிருக்கிறதே"

"நான் கூட ஒரு நாள் மணலை அள்ளி உன் முகத்திலே போட்டேன். நீ கூட..."

"ஒரு வாரம் வரையில் உங்களோடு பேசாமல் விளையாடாமலிருந்தேன். ஞாபகமிருக்கிறது."

"அட! நீ கூட எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைத்திருக்கிறாயே. பசுபதி கோவிலைப் பார்த்தவுடனேயே எனக்கு அந்த ஞாபகங்களெல்லாம் வந்து விட்டன. மறுபடியும் குழந்தையாகி அப்படியெல்லாம் விளையாட மாட்டோமா என்று ஆசை துடிக்கிறது."

அந்தப் பெண்ணிற்கு கடந்த கால வாழ்க்கையைப் பற்றிப் பேசுவது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. பேச்சை மாற்றப் பிரயத்தனப்படுகிறவன் போல், "ஆமாம், அது போகட்டும்" என்று வேறு ஏதோ கேட்க ஆரம்பித்தான்.

வண்டி மாயவரம் ஸ்டேஷனில் வந்து நின்றது. "மாயவரத்திலே காப்பி நன்றாயிருக்குமே! கொஞ்சம் வாங்கிக் கொண்டு வருகிறேன், சாப்பிடு" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் ஜகதீசன்.

அந்தப் பெண் கூச்சத்தோடு "ஹூம் ஹூம்! வேண்டாம்!" என்றாள்.

"வயசானவுடனே ரொம்ப வெட்கம், கூச்சமெல்லாம் உனக்கு வந்துடுத்து, ஐயா! குழந்தையாயிருந்தபோது நீ என் கைப் பக்ஷணத்தையெல்லாம் தட்டிப் பிடுங்கிச் சாப்பிட்டு விடுவாயே" என்று சொல்லியபடியே அவள் பதிலையும் எதிர்பாராமல் வண்டியை விட்டுக் கீழே இறங்கி, காப்பி ஸ்டாலுக்குப் போய்த் தானும் சாப்பிட்டு விட்டு ஒரு டம்ளரில் அவளுக்கும் வாங்கிக் கொண்டு வந்தான். பாவம்! அந்தப் பெண் மறுக்கமாட்டாமல் வாங்கி விளக்கெண்ணெய் சாப்பிடுவது போல் சங்கடத்தோடு குடித்து வைத்தாள். டம்ளரைக் கொடுத்து விட்டு ஒரு டஜன் ஆரஞ்சுப் பழங்களை மேல் அங்கவஸ்திரத்தில் வாங்கி மூட்டையாகக் கட்டிக்கொண்டு பழைய ஸ்தானத்தில் வந்து உட்கார்ந்து, "இந்த ஊரில்கூட ஆரஞ்சுப்பழம் மலிவாகத்தானிருக்கிறது" என்று மூட்டையைப் பிரித்து ஒரு ஆரஞ்சுப் பழத்தை எடுத்து அவளிடம் நீட்டினான். அந்தப் பெண் சங்கோசத்தோடு "வேண்டாம்" என்றாள். ஆனால் ஜகதீசனா விடுகிறவன்? அவன் வாங்கிய ஒரு டஜன் பழத்தில் அரை டஜனாவது அவளைச் சாப்பிடும்படி செய்தால் தான் அவன் மனதில் திம்மதி ஏற்படும் போலிருந்தது.





"ஸ்டேஷன்மாஸ்டர் ஐயா! ஆறு மணி வண்டி பத்து மணிக்குக் கூடவா வரவில்லை? அப்படியானால் இந்த டைம்-டேபிள் என்னத்துக்கு?"

"டைம் டேபிள் இல்லாவிட்டால் ரயில் எத்தனை நேரம் லேட் என்று எப்படித் தெரியும், சுவாமி!"

மாயவரத்தை விட்டு வண்டி கிளம்பியது. ஜகதீசன் ஆரஞ்சுப் பழத்தை உரித்தபடியே பேச ஆரம்பித்தான். "உனக்கு இன்னும் கல்யாணமாகவில்லை போலிருக்கிறதே?" என்றான் எதையும் குறிப்பாக வைத்துப் பேசாதவன் போல்.

"ஆமாம்!" என்றாள் அந்தப் பெண் ஆரஞ்சுப்பழத் தோலை வெளியே எறிந்து விட்டு.

"சரியான வரன் ஒன்றும் அகப்படவில்லையோ?"

"கையிலே காசு பணமில்லாமே சரியான வரன் பார்க்கிறதுன்னா கஷ்டந்தானே?" என்றாள் அந்தப்பெண் பளிச்சென்று. அவள் முகத்தை ஜகதீசன் பார்த்தபொழுது குறும்பான சிரிப்பு மாறி ஏதோ வேதனையும் விசாரமும் தோய்ந்தது போல் காணப்பட்டது. "ஆமாம், ஆனால் சாதாரண ஏழைப் பெண்களுக்குக் கூட எதிர்பாராமல் அதிர்ஷ்டம் ஏற்பட்டு ரொம்ப நல்ல இடங்களெல்லாம் கிடைத்துவிடுகின்றன" என்றான் அவன்.

"அப்படிப்பட்ட அதிர்ஷ்டமெல்லாம் என்னைப்போலிருக்கிற பெண்களை நாடி வரவே வராது!"

"ஏன் வராது? தானே வரும். அதிருக்கட்டும், இப்போ மதராசில் எங்கே போகிறாய்?"

"மதராசிலே எங்க அக்கா இருக்கா, அங்கே இரண்டு மாசம் இருந்து விட்டு வரலாம் என்று போகிறேன்!"

• • •

வண்டி சென்னை எழும்பூர் ஸ்டேஷனில் வந்து நின்றது. ஜகதீசன் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு கீழே இறங்கினான். அவன் தோளை யாரோ தட்டி "என்னடா ஜக்கு? எங்கே போய்விட்டு வருகிறாய்?" என்றதும் திடுக்கிட்டு திமிர்ந்து பார்த்தான். அவன் நண்பன் நடராஜன் நின்று கொண்டிருந்தான். "மதுரை—ராமநாதபுரம் பக்கம் போய் விட்டு வருகிறேன். நீ எங்கே வந்தாய்?" என்றான் தன்னைச் சமாளித்துக் கொண்டே.

நடராஜன் சிரித்துக் கொண்டே, "என் மச்சினி இந்த வண்டியிலே வருகிறதாகக் கடிதம் வந்தது. அவளை அழைத்துக் கொண்டு போகலாம் என்று வந்தேன்" என்றான்.

"உன் மச்சினியா?"

"ஆமாம்; அதோ நிற்கிறானே அவன் தான். பசுபதி கோவிலிருந்து......" என்று சொல்லிக் கொண்டே ஜகதீசன் பின்னால் நின்று கொண்டிருந்த ஐயாவைச் சுட்டிக்காட்டினான்.

இது ஆச்சர்யமாய்த்தானிருந்தது. "அடடே! இவள் உன் மச்சினியா? இவளைப் பட்டணம் வரையில் பத்திரமாய்க் கொண்டு சேர்த்து விடும்படி இவள் தாத்தா என்னிடம் சொன்னார், நான் உட்கார்ந்திருந்த பெட்டியிலே ஏற்றிவிட்டு......"

"அப்படியென்றால் நல்ல காரியந்தான் செய்திருக்கிறார். எப்படியோ எனக்கு அதிகச் சிரமம் இல்லாமல் போனால் சரிதான்" என்றான் தமாஷாக.

ஜகதீசன் பதில் பேசவில்லை. ஆனால் அவன் கண்கள் அவனை யறியாமலேயே ஐயாவிடம் சென்றன. வெட்கத்திற்கு ஈடு கொடுத்துக் கொண்டிருந்த ஐயாவின் பார்வை வேறெங்கோ அர்த்தமில்லாமல் லயித்திருந்தது.

"சரி, போகலாமே? மீனு ஏதாவது சாப்பிட்டாளா? அவளைப் பட்டினி போட்டே

கொண்டு வந்தாயா?" என்று ஜகதீசனைக் கேட்டுக் கொண்டே நடந்தான் நடராஜன். அவன் பெயர் மீனு என்பதைக் கேட்டதுமே ஜகதீசன் திடுக்கிட்டான். ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "அவ னென்னப்பா, ரொம்ப சங்கோசப் பிராணியாக இருக்கிறான். ஒரு கப் காப்பியையும் அரை டஜன் ஆரஞ்சுப் பழத்தையும் அவனைச் சாப் பிடச்செய்த பாடு பெரும்பாடாய்ப் போச்சு!" என்றான் ஜகதீசன்.

"புதிசாப் பழகுகிறதென்றால் கொஞ்சம் கூச்சமாய்த் தானிருக்கும். எல்லாம் போகப் போகத் தெளிஞ்சு போய்விடும். கவலைப் படாதே!" என்றான் நடராஜன்.

ஜகதீசன் திருவல்லிக்கேணி பஸ்ஸில் ஏறிக் கொண்டு, மறுநாள் நடராஜன் வீட் டுக்கு வருவதாகச் சொன்னான்.

மாம்பலம் பஸ்ஸிற்காகக் காத்துக் கொண்டு மீனுவோடு நின்ற நடராஜன், "வராமல் எங்கே போகிறாய்? எனக்காகவா வரப்போகிறாய்?" என்று சொல்லிக் கொண்டே மீனுவைப் பார்த்தான். அவன் முகத்தில் முன்னிலும் அதிகமான சாந்தியும் புன்முறுவலும் நிலவியிருந்தது.

• • •

ஒரு நாள் மீனுவிற்கும் ஜகதீசனுக்கும் அதிவிமரிசையாகக் கல்யாணம் நடந்தது என்ற சம்பிரதாயமான வார்த்தை வேண் டுமா? அதைவிட அவர்களிருவருக்கும் கல் யாணமான பிறகு நடந்த முதல்நாள் சம் பாஷணை தான் முக்கியமானது.

"நீங்க என்னை ரயிலிலே வரும்போது குழந்தையாக இருந்த போது உங்களோடு விளையாடிப் பழகின 'ஜயா' என்று தானே என்னை நினைத்துக் கொண்டிருந்தீர்கள்!"

"நான் நினைத்தேனே, நினைக்கவில்லையோ அது வேறு விஷயம். நீ என் அவ்வளவு துணிச்சலாக ஜயாவென்று ஒப்புக் கொண் டாய்?" என்றான்.

"இந்த மீனு என்ற பெயரிலேயே எனக்கு வெறுப்பா யிருந்தது. கொஞ்ச நாழிகைக் காவது ஜெயாவென்ற பெண்ணாய் இருப் போமே என்று தோன்றியது. அதனால் ஒப்புக் கொண்டேன்!"

ஜகதீசனுக்குத் தன் ஏமாற்றத்தை ஒப்புக் கொள்வது உசிதமாய்ப் படவில்லை. "எனக் கும் தெரியும், நீ ஜயா இல்லை என்று! ஆனால் உன்னோடு தாராளமாகப் பேச வேண்டுமென்று ஆசை. அதற்கு முன்னால் எப்பொழுதோ பழகினதுபோல் பேச்சை ஆரம்பித்தால் தான் நல்லது என்று தோன் றியது. ஜயா என்ற பெயரைக் கற்பனை செய்து கொண்டேன்!" என்றான்.

"ஜயா என்ற பெயர் தான் உங்களுக்குப் பிடிக்கிறது இல்லையா? எனக்குக் கூட அந்தப் பெயர் பிடித்திருக்கிறது. இனிமேல் என்னை நீங்கள் கற்பனை செய்த 'ஜயா' என்ற பெயரிலேயே கூப்பிடுங்கள்" என்றாள்.

ஜயாவோ மீனுவோ எந்தப் பெயரை வைத்து அவளைக் கூப்பிட்டாலும் ஜகதீச னுக்கு இன்பமாய்த்தா னிருந்தது.

"ரோஜாவை எந்தப் பெயர் கொண்டு அழைத்தால் தான் என்ன? பெயர் மாற்று வதினால் அதன் மணம் குன்றிவிடுமா என்ன?" என்கிறார் ஒரு கவிஞர்.

மந்திரிக்கு அட்ரஸ்!



"என்ன. ஆசிரியர்வாள்! நாளைக்கு நம்ம ஊருக்கு கனம் மந்திரி வரப்போகிறார் அல்லவா? அவருக்கு அட்ரஸ் கொடுக்க வேண்டும். நாங்கள் எழுதித் தருகிறீர்களா?"

"நாளைக்கு என்ன? இப்போதே தரு கிறேன், எழுதிக் கொள்ளுங்கள்! ஆறும் நெம்பர், அழுகுணிப் பிள்ளையார் தெரு, அமிஞ்சிக்கரை."

வட்ட மேஜை

★ வீர வல்லபரின் ஹாஸ்யம்

சமீபத்தில் 'கல்கி' பத்திரிகையில் வெளியான "வீர வல்லபரை வரவேற்கிறோம்" என்னும் தலையங்கத்தை நான் மிகவும் ரசித்தேன். பரிபூரண அன்பினால் நாங்கள் அவர் பெயரை மாற்றியமைத்தது. அவரது நுணுகிய ஹாஸ்யங்களைச் சுருங்கச் சொல்லி விளக்க வைக்கிறது.

தங்கள் கட்டுரையைப் படித்தவுடன் என் மனதிலே நினைவு அலைகள் இருபது வருஷம் பின்னுக்கு ஓடின. 1928-ம் வருஷத்திலோ அல்லது 1929-ம் வருஷத்திலோ (சரியாக ஞாபகமில்லை) ஸர்தார் படேல் சென்னைக்கு விஜயம் செய்தார். ஸ்ரீ சத்தியமூர்த்தியின் தலைமையில் மாணாக்கர்களாகிய நாங்கள் கோகலே மண்டபத்தில் (முன் யோசனை இல்லாமல்) பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தோம். கூட்டம் சமாளிக்க முடியாமற் போகவே, அங்கிருந்து ஹைகோர்ட் கடற்கரைக்குச் சென்று கூட்டத்தை நடத்தினோம். ஸர்தார் உள்பட எல்லோரும் மணல் மீதே உட்கார்ந்திருந்தோம். ஸ்ரீ சத்தியமூர்த்தி கூட்டத்தை ஆரம்பிக்கையில் வழக்கம் போல் ஆங்கிலத்தில் "மிஸ்டர் சேர்மன்!" என்று ஸர்தாரை விளித்தபோது அவர் "இல்லை நான் சேர்மன் அல்ல, ஸாண்ட் மேன்" தான் (No, no, I am only sand-man) என்று கூறினார். கூடியிருந்தவர்கள் எல்லோரும் 'கொல்'லென்று நகைத்தனர்.

காஞ்சீபுரம்
20—2—40

வி. சீனிவாசன்

○●○

★ மாணவர்களும் பத்திரிகைகளும்

தங்கள் 13—2—49 இதழில் வெளியான வட்டமேஜைப் பகுதியில் "பத்திரிகை தர்மம்" என்ற தலைப்பின் கீழ் உள்ள கடிதத்தை நான் வரவேற்கிறேன். தற்போது, வானத்தில் தோன்றும் விண் மீன்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் ஒன்றிரண்டு அதிகமாகவே இருக்கும் பத்திரிகைகளின் எண்ணிக்கையைப் பார்த்தால்.

ஆனால் இவற்றில் கலைக்காகவும், தேசத்திற்காகவும், சேவை செய்யும் பத்திரிகைகள் மிகவும் சொற்பமே.

கர்னூல் ஹைஸ்கூலைச் சேர்ந்த மாணவன் ஒருவன் பிப்ரவரி 16-ந் தேதி காதலில் ஏமாற்றமடைந்து ரயில் தண்டவாளத்தில் படுத்துத் தற்கொலை செய்து கொண்டான். இதை எதற்குச் சொல்ல வந்தேனென்றால், இப்போது சில பத்திரிகைகள் பிரசுரிக்கும் கதை, கட்டுரைகள் முதலியன மக்களின் — முக்கியமாக வாலிபர்களின் மனதில் இழிவான உணர்ச்சியையும் விபரீத எண்ணங்களையும் உண்டாக்குகின்றன.

அவன் அவளை பஸ் ஸ்டாண்டில் சந்தித்தான். அவன் அவளை ஆஸ்பத்திரியில் விழுங்கிவிடுவது போல் பார்த்தான். இருவர் முகமும் நாணத்தால் சிவந்து ருப்போன்று விளங்கினதாம். ஒருவர் மீது ஒருவர் அளவிலாக் காதல் கொண்டார்களாம். பூர்ண சந்திரன் அவர்கள் மீது அமுதை அள்ளிப் பொழிந்தானாம். பிறகு அவர்கள் மணப் பந்தலில் மாலைகளுடன், தாலியோடு சந்தித்து மணம் செய்து கொண்டார்களாம்.

மேற்கண்ட விதமாக தன் வாழ்க்கையிலும் நடைபெற வேண்டும் என்று ஒவ்வொரு வாலிபனும் இளமங்கையும் எண்ணுவார்கள். காதல் மணம் சிறந்ததுதான். எனினும் ஒருவர் மற்றவரைக் காதலிக்கும்போது உண்மையுடன், முழு மனதாக ஜாதி, மதம், கட்டுப்பாடு முதலியவற்றை எதிர்த்து, மணம் செய்து கொள்ள இருவருக்கும் சம்மதமானால் அதை எதிர்க்க யாருக்கும் உரிமை இல்லை. ஆனால் இதில் முற்றிலும் தவறுபவர்கள் மாணவர்கள்தான். ஒரு பெண் ஒரு மாணவனிடம் கொஞ்சம் சிரித்துப் பேசிவிட்டால் தீர்ந்தது. உடனே எழுதுவான் ஒரு காதல் கடிதம். ஆனால் பதிலோ வராது. உடனே மாணவன் வாழ்வு சோகமயம் ததும்பும். பிறகு, ரயில் தண்டவாளத்திலோ, ஆழமான கிணற்றிலோ, அவன் மரணத்தை நேருக்கு நேர் ஆசை தீர சந்திப்பான்.

இது போன்றவை இப்போது அதிகமாகி விட்டது. எதிர்கால இந்தியாவைப் பலப் படுத்தப்போகும் இன்றைய வாலிபர்களை நாம் இழக்காமலிருக்க வேண்டும். அதற்கு ஒரே வழி ஆபாசப் பத்திரிகைகளைக் கண்ணால் கூடப் பார்க்காமலிருப்பதுதான்.

கோயமுத்தூர்
22—2—49

ஏ. கிருஷ்ணமூர்த்தி

○●○

பெற்றோர் கடமை!

23—1—49 'கல்கி' இதழில் 'பத்திரிகை தர்மம்' என்னும் தலைப்பில் எழுதியிருக்கும் கட்டுரையைப் படித்தேன். அதில் எழுதியிருக்கும் விஷயங்கள் என் மனதை மிகவும் ஆகர்ஷித்தன. ஆபாசமான பத்திரிகைகளும் சினிமாக்களும் சிறுவர்களின் மனதைக் கெடுக்கின்றன என்பது நூற்றுக்கு நூறு உண்மையே. சில பத்திராசிரியர்களும், சினிமாக்காரர்களும் தமது கடமையை மறந்து ஆபாசத்தைப் புகுத்தி அதிக லாபத்தை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் குழந்தைகளின் நன்மையிலே கண்ணும் கருத்துமுள்ள பெற்றோர்களும், பள்ளிக் கூட உபாத்தியாயர்களும் அவரவர் கடமையை அடியோடு மறந்துவிடுவது மிகவும் வருந்தத் தக்கது. குழந்தைகளை ஆபாசமாகத்

திட்டுவதும், அவர்கள் அருகிலே இருக்கும் போது ஆபாசமாகப் பேசுவதும் மிகவும் கெடுதல். இதைப் பெற்றோர்களும் பள்ளிக்கூட உபாத்தியாயர்களும் நன்கு உணர வேண்டும். குழந்தை உள்ளத்தில் எதுவும் சுலபமாகப் பதிந்து விடுகிறது. குழந்தைகளை ஆபாசமாகத் திட்டினால் அவர்களும் அப்படியே பேசக் கற்றுக் கொள்ளுகிறார்கள். இப்பொழுது குழந்தைகளும் ஆபாசமாகப் பேசுவது சர்வ சாதாரணமாகி விட்டது. இன்றைய நாளது அருமைக் குழந்தைகள் நாளைய சுதந்திர இந்திய வீரர்களல்லவா? "பக்குவமான ஒரு வீட்டுக்கு இணையான பள்ளிக்கூடமே கிடையாது; யோக்கியமான பெற்றோர்களுக்கு இணையான ஆசிரியர்களும் கிடையாது" என்று மகாத்மா காந்தி கூறியிருக்கிறார். ஆகவே இனிமேலாவது பெற்றோர்கள் குழந்தைகளை ஆபாசமாகத் திட்டுவதையும் அவர்கள் காதில் விழும்படியாக ஆபாசமாகப் பேசுவதையும் விட்டுவிட்டு காந்தி மகான், நேதாஜி, நேருஜி, ராஜாஜி முதலிய நமது ஒப்பற்ற தலைவர்களின் சரித்திரங்களைக் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லிப் பரந்த நோக்கத்துடனும் நேர்மையுடனும் வளர்ப்பார்களாக!

காட்பாடி
9—2—49 வனஜா

○●○

பிரஜா பயிற்சி

எங்கள் பள்ளியில் பிரஜா பயிற்சி நடப்பதை நண்பர் ரமணி மிகவும் கண்டித்து எழுதியிருக்கிறார். கடந்த ஒருமாத காலமாக இப்பயிற்சி நடந்து வருகிறது. ஆரம்பத்திலே எங்களுக்கு இப்பயிற்சி சிறிது சிரமமாகத் தான் இருந்தது. ஆனால் தற்போது இப்பயிற்சியை ஒரு சிறந்த கடமையாகக் கொண்டு நடத்துகிறோம்.

சில காலமாக இந்தப் பயிற்சியை நாங்கள் பெற்று வருவதால், முன்னைவிட ஒழுக்கத்திலும் நாணயத்திலும் சேவா உணர்ச்சியிலும் இன்னும் பல அம்சங்களிலும் சிறந்து விளங்குகின்றோம். குப்பைகளைக் கூட்டுதல், மெழுகுதல் போன்ற வேலைகளைச் செய்தால் அதைப் பெரிய இழிவாகக் கருதும் மாணவர் பலர் சீர்திருந்தி இப்பொழுது முன்னணியில் நிற்கிறார்கள். தினந்தோறும் கொடி வணக்கமும் காந்திஜிக்குப் பிடித்த பக்தி ரசப் பாட்டுக்களும் ஆண் பெண் இருபாலரும் அணிவகுத்து நின்று செய்யும்போது நேதாஜி படைகளின் அணிவகுப்பு நம் கண் முன் நிற்பதுபோல் தோன்றுகிறது.

காங்கிரஸ் தலைவர்களின் பெயர்களை வகுப்புகளுக்கு வைத்துத் தலைவர்களை இழிவுபடுத்துவதாக நண்பர் ரமணி குறிப்பிடுகிறார். இது அவருடைய தவறான கருத்து என்று நான் அழுத்தமாகக் கூறுவேன். ஏனென்றால் அவர்களைப்போல் நாமும் முன்னணிக்கு வரவேண்டும் என்ற ஆவா ஒவ்வொரு மாணவன் மனதிலும் எழுகிறது. ஒரு சில திராவிடக் கழகத்தார் எண்ணம் கொண்ட மாணவர்கள் கழகத் தலைவர்களின் பெயர்களை வகுப்புக்கு வைக்கிறார்கள் என்றும், அதனால் வகுப்புத் துவேஷம் வந்துவிடும் என்றும் நண்பர் கருதுவது தவறு என்று நான் கூறுவேன்.

காந்திஜி உபதேசித்த சேவா பயிற்சி முறை தான் தற்போது நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி எங்கள் பிற்கால வாழ்க்கைக்கு ஒரு நல்ல திட்டம் என்றே நான் நம்புகிறேன். எங்கள் பள்ளியில் பிரஜா பயிற்சி நடக்கும் முறை பற்றி தவறான எண்ணம் கொண்ட ஸ்ரீ ரமணி தம் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வார் என்று எண்ணுகிறேன்.


திருச்செங்கோடு
15—2—49 காந்திமதிநாதன்

○●○

தமிழ் கற்க வசதி

தமிழ் பாஷை பேசுபவர்கள் தெலுங்கு நாட்டிலும், தெலுங்கு பாஷை பேசுபவர்கள் தமிழ் நாட்டிலும் அதிகமாகக் குடியேறி வசித்து வருவது கண்கூடு. தாய் மொழிக்குப் புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கும் இந்நாளில் ஒவ்வொரு மாணவனுக்கும் தாய்மொழியைக் கற்க வசதியளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. சென்னையில் உள்ள பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ், தெலுங்கு இவ்விரண்டு மொழிகளையும் கற்பதற்கு நல்ல வசதிகள் இருக்கின்றன. அண்ணாமலை சர்வகலாசாலையிலும் தமிழ், தெலுங்கு கற்க மாணவர்களுக்கு நல்ல வசதிகள் இருக்கின்றன.


ஆனால் தெலுங்கு நாட்டில் உள்ள தமிழ் மாணவர்களின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது. பாடசாலைகளிலிருந்து கல்லூரிகள் வரையில், தமிழ் மாணவர்கள் தமிழ் கற்க வசதிகள் கிடையாது. அனந்தப்பூர், கடப்பை முதலிய ஊர்களிலுள்ள அரசாங்கக் கல்லூரிகளில் கூடத் தமிழ் கற்க வசதிகள் கிடையாது. ஆந்திர சர்வகலாசாலையில் சேர்க்கப்பட்டுள்ள எந்தக் கல்லூரியிலும் தமிழ் போதிக்கப் படுவதில்லை. ஆந்திர சர்வகலாசாலை இதை ஏன் கவனிக்கவில்லை?



கணவன்:—பார்த்தியாடி உன் பெண் சமர்த்தை! ஹிந்தியிலே பத்துக்குப் பத்து மார்க் வாங்கியிருக்காளே!

மனைவி:— ஏண்டி அசடு! விழுந்து விழுந்து படித்தாயே! நாற்பது மார்க்குக் கூடவா வாங்க முடியவில்லை!

★ வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ 'வீர வல்லபரின் மரணம்' என்ற கடிதம் எழுதிய காஞ்சிபுரம் வி. சீனிவாசனுக்கும், 'மாணவர்களும் பத்திரிகைகளும்' என்ற கடிதம் எழுதிய கோயமுத்தூர் எ. கிருஷ்ணமூர்த்திக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.



பிப்ரவரி 5-ல் கோவை நகரில் நாமக்கல் கவிஞர் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை அவர்களின் அறுபதாம் ஆண்டு பூர்த்தி விழா சிறப்பாக நடைபெற்றது. அதுசமயம் கோவைத் தமிழன்பர்கள் காந்தியக் கவிஞருக்குப் பத்தாயிரம் ரூபாய் கொண்ட பண முடிப்பு அளித்து மகிழ்ந்தார்கள்.

ஆகையால் அரசாங்கம் இதைக் கவனித்து, தெலுங்கு ஜில்லாக்களில் உள்ள தமிழ் மாணவர்கள் தமிழைக் கற்க அங்குள்ள ஹைஸ்கூல்களிலும், கல்லூரிகளிலும் வசதி செய்ய வேண்டும்.

மதனபள்ளி
24—2—49 ந. ராஜகோபாலன்

○●○

பதனீத் தொழிலாளர் நிலைமை

கோவை ஜில்லாவில் அவிநாசி, கோபி, பொள்ளாச்சி, பவானி, ஈரோடு, பல்லடம், கோவை முதலிய தாலுக்காக்களில் பெரும் அளவிலும், ஏனைய தாலுக்காக்களில் சிறிய அளவிலும் முன்பு தென்னை மரத்தில் பதனீ இறக்கும் தொழில் நடந்து வந்தது. பனை மரங்களில் பனையிலும் பதனீ இறக்குவார்கள். மரமேறும் தொழிலாளிகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து நபர்கள் அந்தக் காலத்திலேயே பதனீ இறக்கிக் கருப்புக்கட்டி காய்ச்சும் தொழிலில்தான் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் மது விலக்கு கோவை ஜில்லாவில் அமுலுக்கு வந்ததிலிருந்து மேற்படி பல ஆயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளிகளின் வாயில் மண் விழுந்தது. பனை மரத்துக்கு 'மட்டும் சொற்ப இடங்களில், அதுவும் காலங்கடந்து 'சொஸைடி' மூலம் பதனீ இறக்க அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதுவும் மிகவும் சிரமப்பட்டதின் பேரில்தான் கிடைத்தது.

மதுவிலக்கு அமுலுக்கு வந்த காலத்திலேயே சர்க்கார் அதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரிகளைக் கொண்டு கோவை ஜில்லாவில் எத்தனை தாலுக்காக்களில் பதனீ இறக்கும் தொழில் எந்த அளவில் நடக்கிறது? அதை நிறுத்தினால் எவ்வளவு தொழிலாளிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதை உள்ளதை உள்ளவாறு அறிய ஏற்பாடு செய்திருக்க வேண்டும். இது சர்க்காரின் தவிர்க்க முடியாத கடமை. நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர் பதனீ இறக்கும் தொழிலாளர்களின் மதுவிலக்கு அமுலுக்கு வருமுன்பே, கலால் போலீஸாரால் திருட்டுக் கள் இறக்காவண்ணம் கண்காணிக்கப்பட்டுத்தான் வந்தார்கள். அதேமாதிரி அந்தப் பரம்பரை பதனீ இறக்கும் தொழிலைத் தொடர்ந்து நடத்திவர வேண்டிய ஏற்பாடுகளை சர்க்கார் செய்திருக்க வேண்டும்.

அவிநாசித் தாலுக்கா, அவிநாசிப் பிர்க்காவில் சென்ற ஆண்டில் விசேஷ உத்தரவின் பேரில் லைசென்ஸ் வரும் முன்பே பனைமரத்தில் பதனீ இறக்க கலெக்டர் அனுமதித்தார். இந்த ஆண்டிலும் அதேமாதிரிதான் என்று அந்தப் பாமர மக்கள் லைசென்ஸ்களைப் புதுப்பிக்காமலே பனைமர ஸீஸன் வந்ததும் பனையில் பதனீ இறக்க ஆரம்பித்தார்கள். இவர்களில் மிகப் பெரும்பாலோர் எழுத்து வாசனையும், நகர வாசனையும் அறியாதவர்கள். அவிநாசி மது விலக்குப் போலீசார் முன் எச்சரிக்கையும் செய்யாமல், அவர்கள் அனைவரையும் பிடித்து நிறைய அபராதமும் போட்டு, பதனீ சேகரிக்கும் மண் கலயங்களையும் பறிமுதல் செய்துவிட்டார்கள்! நிலச் சொந்தக்காரர்களுக்கும் நிறைய அபராதம் போட்டுவிட்டார்கள். உரிய காலத்தில் லைசென்ஸ் வழங்காதது சர்க்கார் செய்த தவறு. மேற்படி தொழிலாளர்களும், நிலச் சொந்தக்காரர்களும் சர்க்கார் மீது மிகவும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயமுத்தூர்
20—2—49 கி. சிவகுருசாமி

தனிக்குடித்தனம்

எஸ். வி. சௌந்தரராஜன்

"டேய் ராமு, இங்கே வா. அவளும் நாலு நாளாகக் காப்பிப் பொடி இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறாளே, வீட்டில் தான் தடிதடியாக நாலு பிள்ளைகள் இருக்கிறீர்களே, யாராவது கவனித்தீர்களா? வேளா வேளைக்குத் தவறாமல் காப்பி சாப்பிட வந்து விடுகிறீர்கள். இது போறாதென்று நாலு சிநேகிதர்களையும் கூட்டிக் கொண்டு வந்துவிடுகிறீர்கள். வீட்டில் என்ன காமதேனு இருக்கிறதா? கற்பக விருக்ஷம் இருக்கிறதா? நினைத்த பொழுதெல்லாம் பாலாகவும் காப்பிப் பொடியாகவும் கொண்டு வந்து கொடுக்க! இதெல்லாம் சரிப்படாது. அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து அவனவன் தனியாகப் போய்க் குடித்தனம் செய்யுங்கள். அப்பொழுதுதான் உங்களுக்குச் சுக துக்கம் தெரியும்!" என்று தன்னுடைய பிள்ளைகளைப் பார்த்து இரைந்தார் ஸ்ரீமான் பூவராகவய்யங்கார்.

"அப்பா, நீங்கள் வாய்க்குச் சுலபமாக தனிக் குடித்தனம் போய்விடுங்கள் என்று சொல்லி விட்டீர்களே, இப்போது எங்கே வீடு வாடகைக்குக் கிடைக்கிறது? இன்றிலிருந்து தேட ஆரம்பித்தால் கூட இன்னும் ஒரு வருஷத்திற்கு வீடு கிடைக்காதே! அப்படியே வீடு கிடைத்தாலும் எனக்கு வரும் நூறு ரூபாயில் எப்படித் தனிக் குடித்தனம் செய்யமுடியும்?" என்றான் ராமு.

"ஆமாம், சாக்குப் போக்குச் சொல்லச் சொன்னால் நன்றாகச் சொல்லுவாய். உன்னைப்போல் கையாலாகாதவனுக்குத்தான் வீடு கிடைக்காது. வேதாஜி தெருவில் இருக்கிறாரே, ஆடிட்டர் வேணுகோபாலய்யர், அவர் வீட்டில் ஒரு பாகம் அடுத்த மாதம் முதல் தேதி காலி ஆகிறதாம். வேணுகோபாலய்யரைப் பார்த்து 'அட்வான்ஸ்' கொடுத்து விட்டேன். அது சரி, நூறு ரூபாயில் எப்படிக் குடித்தனம் செய்கிறது என்று கேட்கிறாயே, பக்கத்து வீட்டு சீனிவாசனுக்கு எழுபத்தைந்து ரூபாய் தானே சம்பளம்! அவன் எப்படிக் குடித்தனம் நடத்துகிறான்? இரண்டு மாதம் கஷ்டப்பட்டால் எல்லாம் சரியாகிவிடும்!" என்றார் பூவராகவய்யங்கார்.

ராமு ஏதோ முணுமுணுத்துக் கொண்டே உள்ளே போய்விட்டான்.

பூவராகவய்யங்கார் ஒரு ரிடையர்ட் தாசில்தார். கொஞ்சம் ஆஸ்தியும் உள்ளவர். மொத்தம் இரண்டு பெண்கள்; நாலு பிள்ளைகள். பெண்களை நல்ல இடத்தில் கலியாணம் செய்து கொடுத்துவிட்டார். எல்லாப் பிள்ளைகளும் நல்ல உத்தியோகத்தில் இருந்தார்கள். எப்பொழுதும் வீடு நிறைய தேர் திருநாள் மாதிரிக் கூட்டம் இருந்து கொண்டிருக்கும். வீட்டிலிருக்கும் பிள்ளைகளோ ஒரு காரியமும் செய்ய மாட்டார்கள். காய்கறிகள் வாங்குவதிலிருந்து ரேஷன் அரிசியைக் குத்திக் கொண்டு வருகிற காரியம்வரை ஸ்ரீமான் பூவராகவய்யங்கார்தான் செய்ய வேண்டும். வீட்டு விவகாரம் மூத்த பிள்ளைக்குத் தெரியாது. அவனது மனைவிக்கு உடம்பு அசௌகரியமாய் இருந்தால் கூட அவள் தாயாரோ அல்லது கடைசித் தம்பியோதான் அவளை டாக்டர் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகவேண்டும். சாப்பிட வந்தாலோ, 'இது உப்பு, இது புளிப்பு' என்று ஏதாவது கோளாறு சொல்லாமல் சாப்பிடமாட்டான்.

இரண்டாவது பிள்ளையின் போக்கே ஒரு மாதிரி. ஆபீஸ் போகிற நேரம் தவிர மற்ற நேரங்களில் தன் அறையை விட்டு வெளியே வரமாட்டான். காப்பி, பலகாரம் எல்லாம் அவன் இருக்கும் இடத்தைத் தேடிக் கொண்டுதான் போக வேண்டும்.

மூன்றாவது பிள்ளைக்கு ஒரு ஸோப் கம்பெனியில் வேலை. மாதம் பதினைந்து நாள் வெளியூர் சுற்ற வேண்டும். ஊரில் இருக்கும் நாளிலும் டிராமா, சினிமா என்று போய்க் கொண்டிருப்பான்.

கடைசிப் பிள்ளை ராமுதான் கொஞ்சம் வீட்டுக் காரியங்களைக் கவனிப்பான். சில நாளைக்கு அவனுக்கும் கோபம் வந்து விடும். "ஏன், இந்த வீட்டில் ஏமாந்தவன் நான் தானா? எனக்கு மாத்திரம் ஆபீஸ் கிடையாதோ! அவனெல்லாம் துரை மாதிரி போய் விடுகிறானே. நான் மட்டும் எல்லாக் காரியங்களையும் ஏன் செய்ய வேண்டும்?" என்று

முணுமுணுத்துக் கொண்டே கடைக்குப் போவான்.



பிள்ளைகள் தான் ஒரு காரியத்திற்கும் உபயோகவில்லை என்றால் மாட்டுப் பெண்கள் அதற்கு மேல். 'அம்மா பால்காரன் வந்திருக்கிறான். எவ்வளவு பால் வாங்குகிறது? அடுப்பில் ஜலம்கொதிக்கிறது அம்மா! எவ்வளவு அரிசி களைந்து வைக்கிறது?'' என்று இதைப்போல் கேட்டுக் கொண்டிருப்பார்கள். பூவராகவய்யங்காருக்கு இப்பொழுது அறுபத்தைந்து வயதாகப் போகிறது. உடம்பில் தெம்பிருந்தவரைக்கும் ஓடி ஆடி அவரே எல்லாக் காரியங்களையும் கவனித்துக் கொண்டு வந்தார். வயதாகி விட்டதால் வீட்டுக் காரியங்களை அவராலும் கவனித்துக் கொள்ள முடியவில்லை. பிள்ளைகளும் பொறுப்பில்லாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

கிராமத்தில் அறுவடை நடந்துகொண்டிருந்தது. மூத்த பிள்ளையை எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடி குத்தகைப் பணத்தைப் போய் வாங்கிக் கொண்டு வரச் சொன்னார். அவன் ஊரிலிருந்து இருபத்தைந்து ரூபாய் கொண்டு வந்து கொடுத்து விட்டு, 'இந்த வருஷம் பயிரெல்லாம் காய்ந்து போய் விட்டதாம். நான் மிரட்டிக் கேட்டதில் பெண்ணாட்டியின் நகையை, பாவம் எங்கேயோ விற்று இந்த ரூபாயைக் கொண்டுவந்து கொடுத்தான். ஏழைகளை இந்தமாதிரி கஷ்டப்படுத்தினால் அந்தப் பாவம் வீண்போகாது! எதற்காக உபயோகமற்ற நிலங்களை வைத்துக் கொண்டு மாரடிக்க வேண்டும்? பேசாமல் விற்றுவிடுங்கள்' என்று தகப்பனாருக்கு உபதேசம் செய்தான் பிள்ளை.

ஐயங்கார் பெருமூச்சு விட்டுக்கொண்டே வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டார். பிள்ளைகளை எப்படியும் தனிக்குடித்தனம் வைத்து விடவேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டார். பிள்ளைகள் எல்லாம் தனியாகப் போவதற்கு அநேக ஆட்சேபணை சொன்னார்கள். ''கடைசிக் காலத்தில் தகப்பனைத் தவிக்க விட்டு விட்டுப் பிள்ளைகள் எல்லாம் தனியாகப் போய் விட்டார்கள் என்று ஊரார் தூற்றுவதற்காகவா எங்களைத் தனியாகப் போகச் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டான் ஒரு பிள்ளை.

பிள்ளைகள் சொல்லைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வீடுகளை அமர்த்தி, எல்லாப் பிள்ளைகளையும் தனிக் குடித்தனம் செய்ய அனுப்பிவிட்டு, நூறு ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டிருந்த வீட்டைக் காலி செய்துவிட்டுத் தம் சம்ஸாரத்தை அழைத்துக்கொண்டு கிராமத்திற்குப் போய்ச் சேர்ந்தார் பூவராகவய்யங்கார்.

* * *

கிராமத்திற்குப் போய் ஒரு மாதமாகியும் பிள்ளைகளிடமிருந்து ஒரு கடிதம் கூட வரவில்லை. பிள்ளைகள் தன் பேரில் கோபமாயிருக்கிறார்கள். கொஞ்சம் நாள் போனால் எல்லாம் சரியாகி விடும் என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டார் ஐயங்கார். இரண்டுமாதம் ஆகியும் பிள்ளைகளைப் பற்றி ஒருவிதத் தகவலும் தெரியாததால் கவலைப் பட்டுக் கொண்டு பட்டணத்திற்கு வந்து சேர்ந்தார் பூவராகவய்யங்கார்.

மூத்த பிள்ளையைப் பார்ப்பதற்கு அவன் வீட்டுக்குப் போனார். அவன் ஒரு மாதத்திற்கு முன்பே வீட்டைக் காலி செய்து விட்டு, அவர்கள் முன்பு நூறுரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டிருந்த அதே வீட்டுக்கு இப்போது இருநூறு ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டு, தம் தம்பிமார்களுடன் கூட்டாகக் குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கிறான் என்று வீட்டுக்காரனின் மூலமாய்த் தெரிந்து கொண்டார்.

''தனிக் குடித்தனம் போனது தகப்பனாரா அல்லது பிள்ளைகளா?'' என்ற சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாமல் முன்பு குடியிருந்த அதே பழைய வீட்டை நோக்கி நடந்தார் ஸ்ரீமான் பூவராகவய்யங்கார்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



ALKI மார்ச் 13, 1949

4 அண



குலதனம்

போலக் கேச தனமும், சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேச தனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் **கேசவர்த்தினி**யைக் கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் **கேசவர்த்தினியைக்** கொண்டு அதை அடையுங்கள். சிறு வயது முதல் **கேசவர்த்தினி** ஒன்றையே உபயோகித்து வருவதால், இள நரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறாமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவனும் தேகப்பயிற்சி ஆதாரங்களால் பருத்து அழகிய சதைக் கட்டைப் பெறுவது போல, அற்ப கூந்தலைப் பெறலாம்.

குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டே விருத்திசெய்யுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 14


(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை.
கிராஸ் கட் ரோடு, கோயமுத்தூர்





டி.எஸ்.ஆர். கோகுல் கூந்தல் தைலம் அதன் அரிய வாஸனைக்கும் அபூர்வ குணத்திற்கும் பெயர் போனது. இது கூந்தலை கருகருவென வளர்ந்து வளரச் செய்வதோடன்றி, தூக்கக் குறை குளுப்பையும், அவாதி கதுசறுப்பை அளிக்கிறது.



டி.எஸ்.ஆர். & கோ., கும்பகோணம்.

கோவை, நீலகிரி ஜில்லாக்கள் & பாலக்காடுக்கு ஏஜண்டு:

B. பாலபட்டாபி

(Estd. *1933*)

P. B. No. *182*, கோயமுத்தூர்

ஸ்டாக்கிஸ்டுகள்:

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைகிராப்ட்ஸ் ரோடு

திருவல்லிக்கேணி :: மதராஸ்

REGD. NO. M. 4392

